நீதிமாலை - மலர் - மூன்றாவது.

# குணலாபன்

அல்லது

# பட்டறிந்தவன்.

இது,

தமிழிற் சிறிது பயின்றவர்களாகிய இருபாலீர்க்கும்
எளிதில் விளங்குமாறு, தெளிவான
இனிய வசன நடையில்

மோகூர், வேங்கடசாமி ஐயரால்

எழுதப்பட்டது.

SPECIMEN COPY,
WITH R. VENKATACHALAM & C
COMPLIMENTS.

சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை - 600090.

சென்னை, திருவல்லிக்கேணி பைக்கிராப்டு ரோட்டில்,
60-ஆம் நம்பர் ஷாப்பில், மெஸர்ஸ், ஆர். வேங்கடாசலம்
அண்டு கம்பெனியிற் பெறலாம்.

1909.

விலை, அணா 5.] All rights reserved. [*Price, Annas* 5.

G91F
C-,3, Guna
D9

PRINTED AT
M. E. PUBLISHING HOUSE
MOUNT ROAD
MADRAS
INDIA

# முகவுரை.

இச்சிறு நூல், நீதிமாலையின் முதன் மலராய் வெளியிட்டுள்ள 'கரிசிலாதாள்' அல்லது 'உத்தமபத்தினி' என்பதினுந் தெளிவான நடையில் எழுதப்பட்டுளது; உத்தமநீதி என்னும் நீதி நூலினின்றுங் கொண்ட பல செய்யுட்கள் தக்கவிடங்களிற் கூட்டப்பெற்றுள்ளது; சிறிது கற்றோரும் விருப்புடன் படித்து நல்ல நடையுள்ள வசனம் எழுதப் பழகத்தக்கது; உடலும் உள்ளமும் நல வழிப்பட்டு நல்லொழுக்கம் பெறுவதற்குக் கருவியானது; "உலகின் இயலிற் பெரும்பான்மையை விளக்குவது; எம்மதத்தோர்க்குஞ் சம்மதமான கதையும் நீதிகளுமுள்ளது. இதிற் கூட்டியுள்ள பாக்கள் பலவும், கற்றோரும் மற்றோருங் காதலித்து மனப்பாடங் கொள்ளற் கேற்றவை. இங்ஙனம் எழுதுவது நலமென வெனக்குக் கூறிய என்னன்பர் பலரிடத்தும் மிக்க நன்றி பாராட்டுகின்றனன்.

15, ஜனுவரி, 1909.
சென்னை,
மோதூர் வேங்கிடசாமி ஐயர்.

6888

நீதிமாலை-மலர்-மூன்றாவது.

# குணலாபன்

அல்லது

## பட்டறிந்தவன்

நன்னாடுகள் பலவற்றினுஞ் சிறந்து நந்நாடு விளங்கிய முன்னாட்களில், நீதிபரன் என்னும் நிருபன் ஒருவன் நூறாண்டு வாழ்ந்தனன். இம்மன்னன், இராஜபவனம் என்னும் பெரியதொரு பதியை இராஜதானியாகக் கொண்டு, ‘இட்ட பெயருக்கேற்றவன் எம் மன்னன்,’ ‘இட்ட பெயருக் கேற்றவன் எம்மிறைவன்’ என்று குடிகளுள் எவருமே புகழ நல்லறிவுடன் செங்கோலனாகித் தன்னாட்டை யாண்டு வந்தனன்.

ஆதலால், அவன் ஆண்ட பெருந் தேசத்துப் பிரஜைகள அனைவரும், அவனைத் தந் தாயென்றும், தந்தையென்றும், தம்மாருயி ரென்றும், அருவிழி யென்றுங் கொண்டு, அவனுக்குப் பல்லாண்டு கூறி, “எங்கள் இறைவனாகிய நீதிபரன் நீதிபரனே” யென்று ஒருவாய்ப்பட்டது போற் போற்றி, இராஜ விசுவாசம் மிக்கோரா யிருந்தனர்.

"நீதி வழுவாது பரிபாலனஞ் செய்யும் இராஜனை விரும்பி நன்றி பாராட்டாது வெறுக்குங் குடிகள், பெற்று வளர்த்துப் பல நன்மைகளைச் செய்த பெற்றோரைப் பகைத்து, அவர்களைக் கைவிட்டுப் பிரிந்தேகுந் துன்மதிப் புதல்வரைப் போல்வர்; அன்பினால் வருந்திக் கல்வி கற்பித்துக் கல்வியின் நலமுண்டாக்கிய நல்லாசிரியனை நிந்திக்கும் நன்றிகெட்ட மாணாக்கரைப்போல்வர்; இகத்துக்கும் பரத்துக்கும் ஆனவைகளைப் புரிய இல்லறம் நடத்துவதற்கு இணையில்லாத் துணைவி யிவளே யென்று நம்பி யாதரிக்கும் நாயகனுக்குத் துரோகஞ் செய்யுந் துர்க்குணப் பெண்டிரைப்போல்வர்; இவன் நம்முடன் பிறந்த தம்பி, இவனுக்குத் தந்தைக்குப்பின் தந்தை யாமே யாயினோம், இவனுக்கு நலமே புரியவேண்டும் என்னும் நன்னினைவுடன், தந்தை தாயர் வைத்த அணி மணி பொன் பூமிகளில் வஞ்சனையின்றிச் சரிபாதி பகிர்ந்துகொடுத்த அண்ணனைப் பழித்து அபவாதம் விளைக்கும் அன்பற்ற தம்பியரைப் போல்வர்; இறக்குங் காலமெய்தியதே! இளைஞரா யுள்ள நம்மக்களையும் பல்வகைச் செல்வங்களையுங் காக்க ஏற்ற உறவினரைப் பெற்றிலோமே யென்றேங்கி யேங்கி உத்தமரிற் சிலரைத் தெரிந்து, 'உரவோரிவர்.' 'உண்மையோரிவர்,' 'நம் மக்களைக் கைவிடாரிவர்' 'நம்பொருளிற் சிறிதும் எடாரிவர்' என்று மிக்க நம்பிக்கையுடன் ஒருவர் ஒப்புவித்த அன்புள்ள மக்களையும், அளவற்ற செல்வத்தையும் அடைக்கலப் பொருளென்னும் அறிவு மாறாது தக்கவாறு பேணிப் பெருக்கித் தந்த ஆன்றோரைத் தூற்றித் துன்புறுத்தும் அறபராகிய சிறுவர்களைப் போல்வர். ஆதலால், நன்றியற்ற பிரஜைகள், இவர்களைப் போல் நல் வாழ்விழந்து நாசமடைவர்" என்பதை அவன் குடிகள் நன்குணர்ந்திருந்தனர்.

6888



நீதிபரனும், "எவ்வேந்தன், தன்னாட்டுக் குடிகளாகித் தன் கோனோக்கி வாழ்பவ ரெவரையும் ஒரு கண்ணாய்ப் பாராது 'பொருளுற்றாரிவர்,' 'அற்றாரிவர்,' 'நம் மதத்தோரிவர்,' 'பிற மதத்தோரிவர்' என்று, வேற்றுமை புரிந்து பட்சபாதமுடையவனாகி நீதியினின்று வழுவுகின்றானோ அவ்வேந்தன், செங்கோலழிந்து சீரழிபவனாவன் என்பதையுமுணர்ந்திருந்தனன்; தன் குடிகளாகிய பசுக்களின் பால், பாலாகிய வரியைக் கறந்துகொள்ளும் மன்னனாகிய உடையவன், அப்பசுக்களின் உள்ளமும் உடலும் நோகாமலும், பாதுகாப்பின் குறைவினால் அவை நலிந்து சாகாமலும், அவற்றின் சந்ததி ஊனமுற்றேங்கி யுடன் மெலிந்து ஒழியாமலும் இருக்குமாறு ஏற்ற அளவே கொள்ளானாயின் கொடும்பாவியாவன் என்பதையு மறிந்திருந்தனன்; காலங்களையுந் தேசங்களையு மெண்ணி, விதித்த வரியிற் குறைத்துக் கொள்ள வேண்டிய பொழுதில், அங்ஙனங் கொள்ளச் சம்மதியாது, எக்காலத்தும் ஒரே யளவாய் வரி செலுத்தவேண்டுமெனக் குடிகளை வருத்துங் கொடுவரி மன்னனது நாட்டைக் கோடுவரி வாழுங் காடென்றே புலம்பிக் குடிகள் சொரியுங் கண்ணீர், அவன் குலத்தை வேரோடறுக்கும் வாளென்பதையும் அறிந்திருந்தனன். ஆதலால், நீதியின் வழுவிய மன்னர்கையி லுற்ற செங்கோல் கன்னக்கோலும், மந்திரக்கோலுமே யாகுமென்றஞ்சி, ஒரு சிறிதும் நீதியிற் பிறழாது நீதிபரனாயிருந்தனன்.

அவனாண்ட நாடுகளில், சாலினி யென்னுஞ் சிறு நகரம் ஒன்றிருந்தது. இது, நீர், நிலம், குடி என்னும் மற்றவற்றின் வளங்களையும் பெற்றுச் "சீரைத் தேடின் ஏரைத்தேடு" என்னுஞ் சிறந்த வாக்கியத்தைக் குருவின்

உபதேசமாய்க் கொண்டு, தலைமுறை தலைமுறையாய் அத் தொழிலே புரிந்து வாழ்ந்த வேளாளர் நிறைந்தது.

அந்நகரில், கொடுங்கோடை நாட்களிலும் நீர் குன்றா வேரிகளும், குளங்களும், மடுக்களும், கசங்களும், ஆற்றுக்கால்களும், அளவற, அழகுற, அமைந்திருந்தன. ஆதலால், அங்குற்ற குடிகள் கொண்ட தொழிலிற்கு அனுகூலங்கள் பல விருந்தன. காத்து நிற்கின்ற வண்ணம் ஒரு புறத்தில் நின்ற குன்றங்களும் அச் சாலி னியாருடைய ஆடுமாடுகளுக்கு மாளாத மேய்ச்சலுள் ளவை; பலவகைத் தீங் கனி காய்கள் தரு தருக்களட ர்ந்தவை; அடிவாரத்துக் குடிசைகளில் வதிந்த வறிஞர் காய் கனி தேன் முதலிய தேடிப் பட்டணத்திற்குக் கொ ண்டுபோய் விற்றுப் பிழைக்க ஆதாரமானவை; குடியான வர் சென்று பலவகைத் தழைகள் கழித்துக் கட்டிக்கொ ணர்ந்து தங்கள் வயல்களுக்கு இட்டு, எருவாக்கி, வயலின் கொழுமை குன்றாவண்ணங் காப்பதற்குக் கருவியானவை; வீடு முதலிய கட்டுவதற்கான மரங்களும், மூங்கில்களும் வியப்புற வளர்ப்பவை; இங்ஙனம் பல வகையிலும் உதவி நின்ற அக் குன்றங்களைச் சாலினியோர் தங்கள் வாழ்வு குன்றாமைக்கு இன்றியமையா வியற்கை நலமா யெண்ணி யுவந்திருந்தனர்.

அன்றியும், அக்குன்றங்களிலுற்ற குகைகள், இவ்வு லகில் அமைக்கக் கூடிய தளைகள் எல்லாவற்றிலும் விசித் திர மிக்க விபரீதத் தளையாகிய ஆசையெனுஞ் சங்கிலியி னால் தளைக்கப்பட்டிருந்த காலத்துப் பலபலதேடி, ஆசை தோறும் ஓடி யுழன்றவர், அச்சங்கிலியின் தளையினின் றும் விடுபட்டவராய், மண் பெண், பொன், மக்களென்

னும் நினைவும் அற்று, கால்களால் முடவர்போல் ஓடி யுழல்வை தொழித்த தவத்தோர் பலருக்கு வாஸஸ்தான மாயு மிருந்தன.

அச்சிறு புரத்தின் புறத்தில் எப்புறத்து நோக்கி னும், மரகத நிறமே காண, மா, பலா, கமுகு, தெங்கு, கதலி. முதலிய மரங்கள் செழித்தோங்கிய தண்ணிழற் சோலைகளே இருந்தன. இச்சோலைகள் மிக்க பலனைக் கொடுத்துவந்தமையால், சாலினியாருக்கு எப்பொழுதும் வறளாத பொருள் வருவாயு மிருந்தது.

இத்தோட்டங்களைக் கடந்து வயற்புறத்துச் சுற்றி வருவோர், வயல்கள் பல நிலையிலிருக்கக் காண்பர். ஒரு புறத்தில், சிஷ்யருடைய மனத்தைப் பல்வகையில் திருத் திப் பண்படுத்தித் திருத்தியடைந்த பின், ஞானமாகிய வித்தை விதைக்கும் நற்குருவைப்போல், விதை விதைப் பதற்குக் குடியானவன் உழுதுழுது, கசடகற்றிப் பண்படுத் தியவை இருந்தன. மற்றொருபுறத்தில், முளைத்தெழுந்த ஞானமாகிய நற்பயிர் செழித்தோங்கா வண்ணங் கிளைத் தோங்கிக் கவிந்து கொள்ளும் பொருமையாதிய போல், வேண்டாது வெறுத்து வெறுத்துக் களையக்களையப் பற்றற வொழியாது முளைத்துமுளைத்தெழுங் களைகள் களையப் படும் வயல்கள் இருந்தன. வேறொரு புறத்தில், அறிவின் முதிர்ச்சி யின்மையாற் செருக்குற்று, இறுமாந்து நின்று தலையசைத்து மற்றோரை வெருட்டும் பேதையரைப் போன்று, மணி முற்றாது தலையசைக்கும் பயிரைக்கொண் டவை இருந்தன. பின்னுமொரு புறத்தில் அறிவால் முதிர்ந்தமையால், எவர்க்குமே பணிவு உடையோராகித் தலை வணக்க முற்ற சான்றோரைப் போல் மணிமுற்றித்

தியநீர் மாறிச் சாரமேறிய சாலியங்கதிர் தலைசாய்ந்தவையிருந்தன. இக்கதிர்களோ, கதிராமூரக்குக் காணா, மணி பிடித்தவை. இக்காரணங்களைக் கருதியே சாலினியின் முன்னோர், தொன்னாளில், அதனைச் சாலினி யென்னும் பெயர் சூட்டினர் போலும்.

இது நிற்க, அங்கிருந்த வேளாளரில், ஆடு மாடுகளையில்லாதவன் இலன். அவ்வாடு மாடுகளுக்கு வரும் நோய்களின் குறிகளையும், வந்தவிடத்துச் செய்யவேண்டிய சிகிச்சைகளையும் அறியாதவனும் இலன், தன் தொழிலிற்கு அங்கமாகிய ஏர் முதலியவற்றில் எதனாலுங் குறைவுற்றவனும் இலன். இன்ன நெல்லை இன்ன காலத்து விதைத்து இத்தனை நீரின் பின் அறுக்கவேண்டு மெனும் பயிரிலக்கணமறியாதவனும் இலன். அறுக்கும் பக்குவமடைந்த வயலை நோக்கி, இது இத்தனை கலங்காணுமென்று திட்டமாய் மதிப்பிடத் தேர்ச்சியில்லாதவனும் இலன். விளைந்த நெல்லை வீட்டிற் சேர்த்துக் கொட்டிவைக்கக் கட்டிய களஞ்சியமில்லாத வீடுமின்று. கன்று காலிகள், மழை பனி, வெயில் முதலியவற்றால் வருந்தாது பத்திரப்பட்டிருக்குமாறு அமைத்த தொழுவமில்லாத வீடுமின்று. அம்மாடுகளுக்காகச் சிறு குன்று போற்போட்ட வைக்கோற் போர் இல்லாத புறக்கடையுமின்று. வீதி, வீடு, தொழுவ முதலான விடங்களை, அசுத்தமாயிருக்க விட்டுவிடுவது பொல்லாத நோய்களை வேறெவ்விடத்துஞ் செல்லவிடாது தாம்பூலம் வைத்தழைத்துத் தம்பாலே யிருத்திக்கொள்வதே போலும் என்னும் உணர்வின்மையினாலாவது, சோம்பலினாலாவது அசுத்தமாய்க் கிடக்கவிட்ட வீதி வீடு தொழுவங்களை அவ்வூரிற் காண்பதரிது. எஜமானனிடம், விசுவாசமும், பரலோக பயமு மின்மையால், அவன்

தன் முன்னின்றபோழ்தில் ஒரு வண்ணமும், அவன் தலை மறைந்த போழ்தில் மற்றொரு வண்ணமுமாய் ஊழியஞ் செய்யும் ஊழியக்காரனைக் காண்பதரிது. பெற்ற தாயர், தாங்களுறுந் துன்பங்களை யெண்ணாது, இரவு பகல் வருந்திக் கண்ணையுங் கருத்தையுந் தங்கள் சிசுக்களிடமே வைத்து அவைகளைப் பேணிவரல்போல், இட்ட பயிரைத் தாங்களுறுங் கஷ்டங்களை யெண்ணாது, காற்று, மழை, பனி, வெயில் முதலிய சகித்துப் பேணும் பழக்கம் அற்றவனைக் காண்பதரிது. ஆகாவுணவும், அமிதவுணவும், போதாவுணவும், பொழுதலாவுணவும், தாங்களூட்டிய சிறுவர்களுக்குப் பல்வகைப் பிணிகளை யுண்டாக்கித் துன்பம் விளைத்ததை அநுபவத்தால அறிந்த அன்னையரைப்போல், வேண்டிய அளவையும், காலத்தையும் அறிந்து, ஏற்றவெருவிடவும், இரை நீர் கட்டவும் பழக்கமில்லாக் குடியானவனைக் காண்பதரிது.

"பேராசையுற்றார் மனத்தைப்போல், பெருமிடியுற்றார் மனமும், சிதையினுங் கொடியதாகிய சிந்தையிற்பட்டு, இரவும் பகலும் எரியாமலே யெரிந்தழிவதில்லை" என்னும் உண்மையை யுணர்ந்தவர்களாய், அப் பேராசைக் கிடங்கொடாது, இன்புற்று வாழ்வோர் பலர் வாழ்ந்தனர். சேறும்-நீரும், மண்ணும்-மண்வெட்டியும், கையுங்-கலப்பையுமாய்ச் சுகலேசமும் அறியாது, வெட்டிக் கொத்தி யுழுது பயிரிட்டுக்கொண்டு, மாட்டோடுமாடா யுழைக்கும் பேதைகளுக்குக் கணக்கெதற்கு? கலவியெதற்கு? பாட்டெதற்கு? படிப்பெதற்கு? எனாது, "எண்ணில்லாதவன் கண்ணில்லாதவன், எழுத்தில்லாதவன் கழுத்தில்லாதவன்" என்றும், "கைப்பொருளிலும் மெய்ப்

பொருள் கலவியே" என்றும் எண்ணியெண்ணி யிரங்கு வோராய், ஒழிந்த வேளைகளில் ஏடுங் கையுமாய்க் கல்வி பயில்வதிலும், கல்வியாலும் ஒழுக்கத்தாலும் பெரியவர்களாகிய பெரியவர்பால், கேட்டுக்கேட்டுத் தெளிவதிலும் பேரவாவுற்ற பலர் வாழ்ந்தனர். கல்வி கேள்விகளிற் சிறந்திருந்த இவர்கள்,

"கல்வியிற் கடலே யானான், கவினுறு கவியே யானான்,
சொல்வலி மிகுத்தான், கானச் சுவைக்குத் தும்புருவு மானான்,
நல்வழி நடையிலானேல், நாய்க்குயப் பாலா மெல்லாம்.
அல்வயிற் புலித்தோல் போர்த்திங் கலைதரு கரமே யாவன்."

என்பதை யுன்னியுன்னி நன்னடை பெற்றோராய் வாழ்ந்தனர். கற்றோர் நன்னடை யற்றோராயின்,

"உண்மையுரை தவஞான முயிர்வருத்த மில்லாமை
தண்மையளி யீகையெனுந் தகைக்குணங்க ளெய்தாமே,
வண்மையுறு கலைஞானம் வாய்ந்திடலி னாவதென்னே?
எண்மையுறக் கைவிளக் கோடிடறி விழல் குழியிடையே."

என்றபடி, தாங்கள் கெட்டொழிவதுடன், தங்களைக்கண்டு அநுகரிப்பாராகிய பேதையர் பலருடைய கேட்டிற்குங் காரணர் ஆகின்றனர் என்னும் அச்சம் முற்றிய மனமுடையவராய்ப் பலர் வாழ்ந்தனர்.

"உன்னுழை நிறைந்த தீமை யுன்னி நீயுருக மற்றோன்
றன்னுழை நிறைந்த தேடிச் சாற்றிடேல் சாட்டிடேலுன்
புன்னுனி நாவை நாளும் பூட்டிய வரையிற் காக்க
அன்னியர் பிழையை போதி னாகலே புனித னீதான்."

என்றிருத்தலைக் கற்றறிந்த நாண்முதல், பிறரை நிந்திக்கும் பெரும்பிழைக் காளாகாராய் வாழ்வோர் பலர் இருந்தனர். "பிறர் பெற்ற பெருவாழ்வைக்கண்டு பொறாமையடையும் பேதையர், தங்கள் உள்ளத்தைப் புண்படுத்திப் புலம்பவைக்கப் புறத்திற் கொள்ளாமல் அகத்திலேயே

கொண்ட அதிசயப் பகைவனை யுடையவர்" என்றும் அறிவினால், தங்கள் உள்ளத்திற் பொறாமை ஓரெள்ளத்தனையும் புகுந்துவிடாவண்ணம், அதனைப் பேரறிவுடன் காக்கும் பெருவலியுடையார் பலரிருந்தனர்.

"கரிபரி யாக்க ளாய கட்டியதலத்து, மாழ்கி
விரிகுழன் மனைவிமக்கள் வீட்டினில், ஈட்டிவைத்த
பெருமணி கனகநிற்பப் பேழையிற், சிதைமேற் காயம்
அரிதினிற் போகுமாவிக் கறனொன்றே துணையாயேகும்."

என்னும் உத்தம ஞானமோங்கியவர்களாய், பொருளையும், அதனை யீட்ட வியன்ற வுடலையும் பெற்றிலார் ஊணுடை முதலியவற்றிற்குப் படும் பெருந் துன்பத்தைத் தணித்தல், தங்கள் கடமை என்னும் உணர்வினால் காரணத்தைக் கருதாமலும், ஆனவர்-ஆகாதவர், நம்மதத்தார்-புறமதத்தார் என்னும் அற்பமதியை அடையாமலும், கசிந்த விழியும், கனிந்த மொழியுங் கொண்டு, ஏழைகளுக்கு உதவும் இயற்கையுற்றோர் பலர் இருந்தனர்.

"நீரினின் மூழ்கி முக்கால், நீற்றினை யணிந்து தேவர்,
பேரினை நாவி னூன்றிப், பிறங்கு கண்மணிகள் பூண்டோர்
நேரறு மனத்தின் றூய்மை நேர்ந்திலராயி னந்தோ
வாரர வாத மூண்டு வளைபுரி தவத்தோ ராவர்."

என்று, உள்ளத்தின் தூய்மை கொள்ளாதவர்கள் செய்யும் ஜெபதப முதலானவற்றைப் பழித்திருத்தலை யெண்ணி யெண்ணி உள்ளத்தூய்மை யுற்றவராவதற்கு உறு முயற்சி யுற்றோர் பலர் இருந்தனர்.

"உடல்கொளு முடைகளுக்கும் உடலுக்கும் உறவேதுண்டோ?
உடலு முள்ளான்மாவிற்கோ ருடையினிற் பிறிது சேர்மின்.
கெடலுள வுடையைப் போற்றக் கெடுத்திடே ருடலை. யாங்கே
சுடலைசே ருடலைப் போற்றத் துன்மை யான்மாவிற் கீயேல்."

என்ற ஆன்றோருடைய மெய்யறிவு பெற்றிருந்தமையால், நீர்மேற் குமிழிபோன்ற தம்முடலைப் போஷிக்கப் பொருளீட்டும் முயற்சிகளில், பொய், களவு, வஞ்சம் முதலிய தீமைகளை யொழித்தவராகும் விரதம் பூண்டொழுகுவோர் பலர் இருந்தனர்.

“ அறிவுளான் பிறன்றாரத்தை யன்னையிற் கருது மேலாம்
அறிவுளான் பிறன் செல்வத்தை யற்பமா மண்ணையெண்ணும்
அறிவுளானுயிர்கள் யாவும் அவனுயி ரென்ன வுன்னும்
அறிவுளா னுலகின் வாழ்வை யாடீ ராட்ட மென்னும்.”

என்னும் பரமோபதேசத்தை மறவாதவர்களாய்ப் பிறருடைய பெண், மண், பொன் முதலியவற்றை யபகரிக்க வெழூஉம் துர்க்குணஞ் செழித்து வெற்றி பெறு வண்ணங் களையுங் கடுந்தவமுடையோர் பலர் இருந்தனர்.

எங்குமுள்ள கடவுளைத் துதிக்க, ‘ இதுதான் தக்க விடம்,’ ‘ இதுதான் தக்க சமயம் ’ என்பது கிடையாது என்று, நேர்ந்த சமயங்களில் எல்லாம் பக்தியோடுந் தியானஞ்செய்யும் ஞானமுள்ள பெரியோர் பலர் இருந்தனர். பெண்பாலாரிலும்,

“ மாசிலாக் குலத்துவந்தாள் ; வருவிருந் துவப்ப வூட்டும்
நேசமிக்குடையாள் ; கொள்கனிளைப்பறிந் தொழுகு நீராள் ;
தேசுறுவாய்மை யுள்ளாள் ; சினந்திட லென்று மில்லாள் ;
பேசுதிண் கற்புவாய்த்தாள் ; பெற்றதே கொண்டுவப்பாள்.”

என்று, ஒரு பெண்மணியைக் குறித்துப் பாடியது தங்களுக்கும் உரியதாகுமாறு அரிய குண நலங்களும், கொள்கைகளும் பெற்றிருந்தார் பலர் இருந்தனர்.

இவர்கள்,

“ தேவருங் குருவுந் தான தீர்த்தமு நோன்பு மெல்லாம்
ஆவது கணவ னேயா மறிவுள சதிகட் கென்றும்.

தேவருங் குருவுந் தான தீர்த்தமு நோன்பு மெல்லாம்
பாவமே யாக்கற் காகும் பதியினைப் பற்றி லாட்கே."

என்பதைத் தங்கள் உள்ளத்தில் அமைத்த மங்கா மணி விளக்காய்க் கொண்டு, நன்னடைக்குச் சிறந்து "குல மகட்குத் தெய்வங் கொழுநனே" என்ற திருவாக்கியத் திற்கு ஏற்ற நிதர்சனங்களாய் விளங்கினர்.

ஆதலாலிவர்கள், தங்களுடைய தாய்தந்தையரிடத் தும், அண்ணன் தம்பிகளிடத்தும், தங்கை தமக்கைகளி டத்தும் வைக்கும் அன்பில் ஒரு சிறிதுங் குறையாத அன்பையும் மரியாதையையும் மாமன் மாமி, மைத்துனன் நங்தை முதலானோரிடத்தும உடையவர்களாய்த் தங்கள் பிறந்த வகத்தாருக்கு இருந்ததுபோல், புக்க வகத்தாருக் குங் கண்ணாகி, 'மாமி மெச்சிய மருமக ளுண்டோ? என் பது பொய்யே' எனப் பலரையும் புகலவைப்பாராய் நடந்துகொண்டனர்.

இந்நங்கையர், தங்கள் மக்களை நல் வழியும் மொழி யும் உடையவர்களாக்கும் பொறுப்புத் தங்களுடையது என்பதை நன்குணர்ந்தவர்களாய்,

"தொட்டிலிற் பழக்க முற்றிச் சுடுகாடு மட்டுமேகும்;
விட்டிடி லரிதி யார்க்கும்; விரும்புவோ ரிளைஞர் நன்மை
கெட்டிடுஞ் செயலைச் செய்யல் கிளத்தலு மொழிக; தம்முன்
பட்டிடு மவற்றைப் பின்னுட் பயில்பவர் பால ரன்றோ?"

என்னுங் கட்டுரையைக் கைக்கொண்டு தங்களுடைய சிறு வர் முன் செய்யத்தகாதவற்றையும், சொல்லத்தகாதவற் றையும், செய்யாதுஞ் சொல்லாதும் ஒழிக்கும் மூதறிவுற் றிருந்தனர்.

இவ்வுலகத்தவர் கூறும் வாழ்க்கை வகைகளிற் சிறந்ததாகிய இல்வாழ்க்கையைச் செவ்வனே நடத்துவது சதி, பதி ஆகிய இருவருக்குமேயன்றி, இவர்களில் ஒருவருக்கே கடமையன்றென்பதை எக்காலத்தும் மறவாதவர்களாகி, ஆன கருமங்கள் அனைத்திற்குமே தம் பதிகட்குத் துணை நிற்க வல்லார் பல ரிருந்தனர்.

ஆதலால், இருபாலோரும் தங்களுடைய எழின் மிக்கவுடலின் உரத்தை யெண்ணியேனும், தங்களுக்குள்ள வளமனை வயல்களை யெண்ணியேனும், தங்களுக்கு வாய்ந்த சதிபதிசந்ததியாரின் சிறப்பை யெண்ணியேனும், தங்களுடலும் உள்ளமும் வருந்த வுழைத்துக் கற்ற நற்றமிழை யெண்ணியேனும், இப்புவியின்மீது வாழ்வார்க்குப் புறத்துயிராகிய பொருள் தம்பாற் குவிந்ததை யெண்ணியேனும், பெரியோர் பலர் உதித்த குடும்பத்தில் தாங்கள் பிறந்ததை யெண்ணியேனும், 'பேரறிவோருடைய நன்னெறியில் தாங்கள் நடப்பதை யெண்ணியேனும், பேதையர்க்குரிய கருவம், தங்களிடந் தோன்றுவண்ணம், இவற்றின் நிலையாமையையே எண்ணி யெண்ணி யடக்க முற்றவர்களாய், இவற்றை யெல்லாந் தங்களுக்கு அருளிய ஏகனிடை நன்றி பாராட்டுவாருமாயினர். அன்றியும், கண்டோர் எவரும், "'செய்வன திருந்தச் செய்' எனச் சிறுவயதில் நம்மைப்போல கற்றவர்களில், இச்சாலினியாரே தவறாது பழகிப் பழகி, செய்வன திருந்தச் செய்யுந் திறம் பெற்றனர் என்று" வியப்படையுமாறு எதையுந் திருத்தமுறச் செய்வாருமாயினர். கல்விக்கடலைத் தங்கள் மனத்தகத்தும், கனக மலையைத் தங்கள் மனையகத்தும் பெற்றுளோரும், அவனடிக் கன்பிலாமை, அசத்தியம் முதலிய வுடையோராயின், அவர்களைக் காண நேரில், கண்டக

விருக்ஷ மென்றும், கடுவிடக்குப்பி யென்றுஞ் சால வஞ்சியாகன்று விலகும் இயல்புடையோரு மாயினர் அச்சாலினியோர்.

இம் மண்ணுலக மாந்தரில், பொருளை யில்லாதவர் எவரும், நடைப்பிணமாவதும்,

"வயதினூற் பெரிய ராளோர், வான்றவம் பெரிய ராளோர்,
மயர்வகல் கல்வி கேள்வி மாட்சியிற் பெரிய ராளோர்,
வயதினூற் றவத்தாற் கல்வி மாட்சியாற் பெரிய னல்லாக்
கயவனுஞ் செல்வ னில்லக் கடைத்தலைக் காத்து நிற்பார்."

என்ற வண்ணம், செல்வத்தின்முன் ஞானம், தவம், கல்வி முதலாகிய யாவும் வாய் பொத்திக் கைகட்டி நிற்பதும் உண்மையேயாயினும், தீய செயல்களால் ஆக்கிய செல்வம், உள்ளமுருகக் கண்ணீர் பெருகப் பச்சாத்தாபப்படும் வண்ணம் துன்பம் விளைக்கும் என்பதை மறவாதவர்களாகி, நல்வழியில் வரும் பொருளையே நாடுவாருந் தேடுவாருமாயினர் அச்சாலினியோர்.

தங்களுடைய உடலிற்காவது, உள்ளத்திற்காவது, கஷ்டம் நேரிட்ட காலங்களிலும், தங்களுக்குப் பிரியமான பிராணிகளுக்காவது பண்டங்களுக்காவது நஷ்டம் நேரிட்ட காலங்களிலும், இவை நம்முடைய நன்மையைக் கருதியே கடவுளால் அருளப்பட்டன வென்று சகிப்பரேயன்றி, "ஹே! ஜெகதீசுவரா! நானென்ன பாவஞ் செய்தே னென்று, எனக்கிப்படிச் செய்தாய்? உன் கோவிலிடிய" என்றும், வேறு பல வசை மொழிகள் பொழிந்தும், இன்னுரைக் கண்டு குரைக்கின்றோ மென்றெண்ணாது குரைக்கும் நாய்போற் குரைக்குங் குண மற்றருமாயினர் அச்சாலினியோர்.

பேதைகளானோர்,

"யா காவா ராயினும் நாகாக்க ; கா வாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு." என்பதையும்,

"தீயினாற் சுட்டபுண் ணுள்ளாறும் ; ஆறாதே
நாவினாற் சுட்ட வடு." என்பதையும்,

அறியாமையி னாலாவது, அறிந்தும் அநுஷ்டானத்திற் குக் கொண்டுவராமையி னாலாவது, அம்புகளைப்போல் இருதயத்தில் தைத்துக் கண்ணீரையும், கடுஞ்சினத் தையும் பெருக்கத்தக்க மொழிகளை யெடுத்துத் தொ டுத்து விடினும், "நம்மீதன்று," "நம்மையன்று" என்று பொறுமையுடன் பொறுக்கும் பழக்கமுற்றவர் அச்சாவி ணியோர்.

இவர்கள், ஸம்ஸார ஸாகரத்தினிடையே செல்லுங் கலங்களாகிய தங்களுடைய மனமாகிய பெருமாலுமிக்குப் பேருதவிபுரிய ஆங்காங்கு விளங்கி வழிகாட்டி நின்ற தீபஸ்தம்பங்களைப் போன்ற

(1) "மற்றவர் நினக்குச் செய்யின் மனம்பொறாச் செய்கை யேதும்
மற்றவர் தமக்கு நீயும் மறப்பினுஞ் செய்யேல் : உன்னைச்
செற்றெவர் தீமையான செய்யினும் பொறுத்தல் : சீற்றம்
அற்றவர் பெருமை கூறின் அமரரு மிணையா கார்கள்."

(2) "மெலியவர் மீதிற்சென்று மிகுமறங் காட்டல் : உன்னில்
வலியவருன்னை யாங்ஙன் வருத்திட வந்தா லுள்ளம்
நலிவதை நினைக : மற்றோர் நலிவன புரியாய் : நம்பீ!
அலியதி லாகா யாகாய் : அறிஞரி லறிஞ னாவாய்."

(3) "உண்டிடு முணவை யெண்ணி, உடுத்திடு முடையை யெண்ணிக்
கொண்டிடு பதவி யெண்ணிக் குவிதரு பொருளை யெண்ணி,
அண்டிடு பலரை யெண்ணி, யாந்துணை யறமெண் ணாதார்
கண்டுதம் மாவி நீங்கக் கலுழ்வர் கை தருவா ரின்றி."

(4) "வேத மோதி லென்? சாத்திரங் கேட்கி லென்?
நீதி நூல் பல நித்தல் பயிற்றி லென்?
ஓதி யங்க மோ ராறு முணரி லென்?
ஈசனை யுள்குவார்க் கன்றி யில்லையே."

முதலான பலவற்றைப் பார்த்துப் பார்த்து அவற்றின் உண்மையை யுன்னி யுன்னி நல்வழி கொண்டவராகித் திசை தப்பிப்போடலும், கரைதட்டிச் சிதைவுறலும் ஆகிய ஆபத்துக்களிற்கு விலகும் வகை கண்டிருந்தனர்.

இத்தன்மையோர் மிக்கிருந்த சாலினியின் வேளாளர்களுக்குச் சிரோமணி போன்று விளங்கிய வேளாளன் ஒருவன் இருந்தனன். இவன் பெயர் **சுசீலன்.** இவன் சிசுவாயிருந்த காலத்தில், இவனது பெற்றோரும், உற்றோரும் இவனுக்கு நாமகரணஞ் செய்த அன்று, ஒரு காரணமுங் கருதாமலே, 'சுசீலன்' எனும் பெயர் சூட்டினர் என்பதை யறியாத எவரும், "இவனது உணர்வு, ஒழுக்கம் முதலியவற்றைக்கண்டு உவகை கொண்ட பெரியோர்கள் இவனுக்குக் கொடுத்த பட்டஞ் சுசீலன் என்பது; இவனுக்கு நாமகரணஞ்செய்தவர் இட்ட பெயர் யாதோ?" என்று திகைப்புறுமாறு, பூண்ட பெயரிற்கேற்கச் **சுசீல**னாகி வாழ்ந்தனன். அச்சாலினியில், வீடுவாசல்கள் மிக்கவனும் இவனே; ஆடுமாடுகள் மிக்கவனும் இவனே; கன்று காலிகள் மிக்கவனும் இவனே; தோட்டந் துரவுகள் மிக்கவனும் இவனே; காணி பூமிகள் மிக்கவனும் இவனே; ஆளுங் கேளும் மிக்கவனும இவனே; பொன்னும் பூணும் மிக்கவனும் இவனே; பொறையும் நிறையும் மிக்கவனும் இவனே; ஈகையும் இரக்கமும் மிக்கவனும் இவனே; எண்ணும் எழுத்தும் மிக்கவனும் இவனே.

ஆகையால், சுசீலனைச் சார்வினியோர் தங்கள் கண்ணுய்க் கருதினர், கவசமாய் நம்பினர். எதையுமே அவனோடு கலந்து ஆராயாது பண்ணுராயினர்; நம்முடைய காரியங்களுக்கு அவனைக் கேட்பாமேன் என வெண்ணுராயினர். இவனுக்கு இல்லறத்துணைவியாய் வந்தவள் பெயர் சுகுணமஞ்சரி. இப்பெண்மணி, உத்தமிகளாகிய பெண்களிற்கே உரிய அரிய குணங்களில் ஏதுமே குறையாது நிறையப் பெற்றவள். நற்குணமும் நற்செயலுமே கொண்ட பெற்றோரைக் கண்டு, அநுகரித்துத் தேர்ந்த பெருந்தகைமை யுடையவள். ஆதலால், சுசீலனும், சுகுணமஞ்சரியும், கற்றறிவிற்கு நன்னடை போலவும், பெற்ற செல்வத்திற்குப் பெட்புள கொடைபோலவும், மிக்க தவத்திற்குத் தக்க பொறைபோலவும் ஏற்கவமைந்த தம்பதிகளாகி, சதிபதிகள் வாழ வேண்டிய முறைகளை இவ்வுலகினர்க்குத் திருஷ்டாந்த முறைகளாற் காட்டநாடிப் போந்திருந்த இரண்டு பரமாத்துமாக்களைப் போன்றிருந்தனர். இவர்கள், உடலும்-அதன் நிழலும், மலரும்-அதன் மணமும், மணியும்—அதன் ஒளியும்போல், மிக்க ஒற்றுமையும் உள்ளன்பும் உடையவர்களாய் வாழ்ந்து வந்தனர். இல்லற வாழ்க்கையுற்ற இவர்களுக்கு மூன்று ஆண்டுகளாகு முன்னரே சுந்தரப் புதல்வி யொருத்தி தோன்றினள்.

அதைக் கண்டு மிக்க களிப்புற்ற சுசீலனும், சுகுணமஞ்சரியும், தங்கள் பந்துக்களும் மித்திரர்களுங் கூடிக் களிக்கப் பெருவிழவு கொண்டாடி, "சுசரிதை" எனும் பெயரை யப் பெண்ணிற்குச் சூட்டினர். வந்திருந்தவர்கள், "பெண்ணிற்குரிய பெருங்குணங்கள் நிறைந்த விடத்துப் பெண்ணே பிள்ளையினும் பதின்மடங்கு சிறந்தவள்

6888



என்பது உங்களுக்குத் தெரியாததன்றோ" வென்று தேற்றித் தெளிவூட்டிப் போயினர். இப்பெண், கண்ணை யிமைகள் காப்பதுபோலக் காத்து, நீராட்டிப் பாலூட்டிச் சீராட்டிவருந் தனது பெற்றோர் களிக்க, நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாய் அறிவிலும் உருவிலும் வளர்ந்தது. ஆகவே, "ரவியும அறியா விடங் களைக் கவி யறியும" என்றது மெய்யே! மெய்யே!

> "குழலினிது, யாழினிது, என்பர் தம்மக்கள்
> மழலைச் சொற் கேளாதவர்."
>
> "அமிழ்தினும் ஆற்றவினிதே, தம்மக்கள்
> சிறுகை யளாவிய கூழ்."

என்றவர் அநுபவம் எத்தனை பெரியது! என்று, பெற்றோர் வியந்து மகப்பேறுற்ற மகிழ்ச்சி யுறுமாறு வளர்ந்து, தானே பாடிப்பாடி யுண்டுடுக்கும் ஐந்துபிராயச் சிறுமியாயினள் சுசரிதை.

ஆன பொழுது முதல், அவள் மனமும், மொழியும், செயலும் நல்லவைகளாகுமாறு அவளை வளப்பதற்குச் செய்யவேண்டிய வெவற்றையுஞ் சிறு வெறுப்புமின்றிப் பெரு விருப்புடன் சலியாது செய்து அவளைக் குணநிதியாக்கிய சுகுணமஞ்சரியும், சுசீலனும், கல்வி, சித்திரம், கானம், மடைத்தொழில் ஆகிய இவற்றிலும் மிக்க தேர்ச்சியை அவளுக்கு உண்டாக்கி வைத்தனர்.

அதனால், சுசரிதை, சௌந்தர்யம் என்பதில் ஒரு சிறிதும் பெற்றிலாதவள் சௌந்தர்யவதி எனும் பெயரை யுற்று நிற்பதைப் போலவும், அரூயை என்னும் அவகுணத்தின் வடிவமேயானவள் அநசூயை என்னும் அபிதானம் அடைந்திருப்பதைப் போலவும், கொண்டவனைத்

தூற்றுந் துர்க்குணமும், அவனது துன்பங்கண்டு துடியாத் துன்மதியும் மிக்கவளாகி, அவனைக் கடுவிடமாய்க் கருதி, அவனையும் அவன் சொல்லையும் வெறுப்பவள் அருந்ததி என்னும் பெயரை அணிந்து நிற்பதைப் போலவும், அழுந்த விரலுக்குச் சுண்ணாம்புமிடாத அதிலோபியானான், தியாகராஜன் எனும் பெயரைத் தாங்கி நிற்பதைப் போலவும், தனது பெயரையுமே யெழுதப்படிக்கக் கற்றிலாதவன் வித்யாஸாகரன் எனும் பெயரால் விளிக்கப்படுவதைப் போலவும், தனக்கென வோ ரரைக் காசுமே யில்லாதவன் தனபாலன் எனும் பெயர் பூண்டிருப்பதைப் போலவும், பன்றியின் முதுகில் நின்றவைபோன்று, அங்குலத்திற் கொன்றிரண்டு ஒன்றிய தலைமயிரையுடையவள் கூந்தலழகி யெனும் பெயரைக் கொண்டிருப்பதைப் போலவும் ஆகாது, **சு-சரிதையே** சுசரிதை எனப்பட்டனள் என்று பலரும் புகழுமாறு சிறந்தவளாகி மணப்பருவமுற்றனள்.

சுசரிதையைப் பன்முறை பார்க்கவும், அவளுடன் பழகவும், உரையாடவும சமயங்கள் பெற்ற உற்றோரிலும், மற்றோரிலுஞ் சிலர், ‘‘சுகுணமஞ்சரி வயிற்றிற் பிறந்தவள் சுசரிதையாவதற்குக் கேட்பானேன்? **நூலைப்போற் சீலை, தாயைப்போல் மகள்** என்பது பொய்க்குமோ?’’ என்றனர். வேறு சிலர், ‘‘அங்ஙனங் கூறாதீர்கள்; நல்ல குலத்திற்பிறந்தும், நாளேற நாயாய்ப் போனவர்களும் உளர்: சு-சீலனும், சுகுணமஞ்சரியும், சுசரிதையை வளர்த்த விதமும், பழக்கிய விதமுமே வியக்கத் தக்கவை’’ யென்றனர். பின்னுஞ் சிலர், ‘‘எதையுமே அவசரப்பட்டுக் கூறாதிருங்கள்; ‘நடவாதகால் இடறாது’ என்பதுபோல் நாலுபேருக்கிடையே வாழத் தொடங்காத வரையில் எல்லாப்

பெண்களுமே நல்லவர்கள் என்னப்படுவர்'' என்றனர். மற்றுஞ்சிலர்,

"புரவியும் வாளும் நூலும் பூவையும் வீணை தானும்
பரவுறு சொல்லும் ஆணும் பாரினில் ஆள்வோர் தம்மால்,
வரகுண நல்லவாகும், வசைமிகு தீய வாகும்,
தெரிவுடனிவற்றை வல்லோர் திருத்தி நல்லனவாக்கொள்க."

என்றபடி, இங்குள்ள வரையிலும் சுசரிதையின் சிறப்பு ஒரு சிறப்பாகாது. அவள், கணவனுடன் வாழு நாளிற் பெறுஞ் சிறப்பே சிறப்பாகும். ஆம்; அது அத்தனையும் அவள் கணவன் அவளை நடத்தும் விதத்தைப் பொறுத்தது'' என்றனர். கடையிற் கூறியது, தன் செவியில் விழப் பெற்ற சுசரிதை, "குயில்கள் காகத்தின் கூட்டில் முட்டையிட்டுவிட்டுப் போகின்றன; காகங்கள் அவற்றையுந் தங்கள் முட்டைகளென்றே அடைகாத்துமுட்டை பொரித்துக், குஞ்சுகளாக்கி "கா" "கா" என்று சீராட்டிக் கொண்டே யிரையூட்டி வளர்க்கின்றன. ஆயினும், அவ்விளங் குயிற் குஞ்சுகள் "கா" "கா" வெனக் கத்தக் கற்காதவைகளும் தங்கள் இயற்கையை விடாதவைகளுமாய் நின்று "கூ" "கூ" வென்றே கூவிக் குயில்களாய் விளங்குகின்றன'' என்று என்னுசிரியர் எனக்குக் கூறியுளார். ஆம், குயிலுக்கிருக்கும் பர-புஷ்டம் என்னும் பெயரும் இவ்வுண்மையை விளக்கும்; இதற்கு நான் கற்றுள சில செய்யுட்களுஞ் சொல்கின்றேன்:—

(1) "நன்குரற் குயில்கண் முட்டை யிட்டிடுங் காகக் கூட்டில்.
புன் குரற் காக மூட்டிப் போற்றிடுந் தன்னவென்றே.
வன் குரற் காகக் கா கா வாய்ந்திடல் குயில்கட் கின்றும்.
புன்குலத் திடையி னுற்றும் புகழ்க் குண மிழவார் நல்லோர்."

இதன் கருத்தை ஆராய்ந்து பாருங்கள்; பின்னுங் கேளுங்கள்:—

(2) "தக்காருந் தக்கவ ரல்லாருந் தந்நீர்மை
எக்காலுங் குன்ற லிலராவர்.—அக்காரம்,
யாவரே தின்னினுங் கையாதாம். கைக்குமாந்
தேவரே தின்னினும் வேம்பு."

என்றபடி, கற்றவர்—கல்லாதவர், பொருளுற்றவர்—உறாதவர், முதியவர்—இளையவர், நல்லவர்—தீயவர் ஆகிய அனைவருக்குமே, கரும்பு, ஒரே வகையுள்ள இனிய சுவைதரும். வேம்பும், அங்ஙனமே யாவருக்குமே கசப்பதாகும். இவைபோல, இயற்கையில் நல்லவர் எவருக்கும் நல்லவரே யாவர்; தீயவர் எவருக்குமே தீயவராவர் என்பதையும் நினைப்பூட்டிக்கொள்ளுங்கள் என்றனள். அவர்கள், ஆநந்தமடைந்து, "சுசரிதை! அப்புறம், அப்புறம்" என்றனர்.

சுசரிதை, "புருடர், பெண்டிரைத் திருத்தி நல்லவர்களாக்கும் பொறுப்புடையார் என்பதைவிடப் புருடர்கள் நல்லவர்களாகும் வகைதெரிந்து நடந்து கொள்ளுவது பெண்களுடைய பொறுப்பு" என்பதே என்னுடைய கொள்கை என்றனள்.

இவை யெல்லாங் கேட்டிருந்த காலங்கண்ட கிழவி யொருத்தி, புன்னகையுடன், "சுசரிதை! ஒருவர் கொண்ட தவக்கோலம் தவமாகிவிடுமானால் நரக மெதற்கு? ஒருவர் கூறிடும் மொழிகள் அநுஷ்டானமாகிவிடுமானல், நரகமெதற்கு? ஒருவர் உண்டிடும் உணவு உள்ளத் தூய்மையாகிவிடுமானல் நரகமெதற்கு? ஒருவருடைய உடையையும், உரையையும், உணவையுமே நோக்கி நல்லார் பொல்லார் எனக் கொள்ளலாகாது. நீ இப்போது உன் சாமர்த்தியங் காட்டவேண்டாம்" என்றனள். இவை கேட்ட சுசரிதை, "என் பாட்டியாரே! புத்தி" என்று வாய் மூடிக் கொண்டனள்.

சுசரிதைக்கு ஏற்ற வரனை நாடி நாடி இரு முதுமக்களும் மனம் வாடுவாராயினர். அதனால், அவர்கள், பொன்னோடு-பொன்னையும், மணியோடு-மணியையும், முத்தோடு முத்தையும் தெரிந்தெடுத்துக் கோத்து இணைப்பது போல், நல்லவளுக்கு நல்லவனைத் தேடி நாயகனாக்குவது பேருஞ் செயலே என்று பெருமூச்செறிந்தனர் சின்னாள். குலமும், குணமும், கல்வியும், ஒழுக்கமும், அழகும், ஆற்றலும் நிறைந்தவனுக்கே சுசரிதையைக் கொடுக்குந் துணிவு பூண்டவர்களாய், அன்னான் வரனை நாடி வாடினர் சின்னாள். இங்ஙனம், சுசீலனும், சுகுணமஞ்சரியும், சுசரிதையின் பொருட்டுக் கவற்சியுறும் நாட்களில் ஒருநாள், சுகுணமஞ்சரி, "நாத! இவ்வுலகில், நற்குண நற்செயல்களே திரண்டுருண்டு மானுடவுருக்கொண்டனவோ?" எனச் சான்றோர் வியந்து கூறத்தக்க உத்தமனுக்கு, "அவகுணங்களெல்லாம் ஒன்றுகூடிப் பகைகொண்டு சந்தி விக்ரகோபாயத்தால் அவனை யழிக்க நாடிப் பெண்ணுருக்கொண்டு மண்ணினில் பிறந்து மனைவியாயினவோ?" என்று மனமுருகிக் கண்ணீர் பெருக்கிக் கலங்கத்தக்க படுநீலி வாய்க்கின்றனள். இத்தகைய பெண்பாற் கணவன் கொண்டது மணமன்று, **மரணமே** யெனல் வேண்டும்.

பெண்ணிற்குக் கூறிய பெருங் குணங்களெல்லாம் ஒருங்கு வாழ இடமாகி "**குலமகட்குத் தெய்வங் கொழுநனே**" என்னும் ஆரிய மொழியில் ஓர் அக்ஷரமுந் தவறாது ஒழுகுங் குணநிதியாகி, பெண்களிற் சிறந்தோரனைவரும், வியப்புற்றுக் கொண்டாடத்தக்கவளான குலக் கொடிக்குக் கன்மனப் படுபாவியாகிய மூடன் கணவனாய் வந்து, சுமங்கலியாகிய அவளை அமங்கலியின் வாழ்வு

வாழச் செய்கின்றனன். இங்ஙனம இணைந்த மனைவியும் கணவனும் வாழும் வாழ்வு, பாம்புறை வளையில் அதனி ரையாகும் பிராணி வாழும் வாழ்வே போலும்.

இங்ஙனமன்றி, சர்க்கரைப் பந்தரில் தேன்மாரி பொழிந்ததுபோலவும், பொன்னுலாகிய மலருக்கு நல்ல மணமும் பொருந்தியதுபோலவும் ஏற்க அமைந்தவர்களாகி, இணைபிரியாத அன்றிலைப்போன்ற தம்பதிகளுக்கிடையே வறுமை யென்னுங் கொடிய பகைஞன் வந்து புகுந்து, அவர்களுக்குத் துன்பத்தை விளைக்கின்றனன். குலனும் குணனும் அழகும் ஆயுளும் ஐக்கியமும் ஐசுவரியமும் முதலிய வெல்லாம் பொருந்தி மனமகிழ்ச்சியோடு வாழத் தக்க தம்பதிகட்கு மக்கட் பேறில்லா மன மறுக்கம் மலை போல் நிற்கின்றது. மக்கட் பேறும், மற்றெல்லா வளங் களும் பெற்று, ஸ்திரீ புருஷர்களுக்குரிய குணங்களை யுற் றுத் துன்பமென்னுஞ் சொல்லுமே யறியாதவர்களாகி, கண்ணுற்றோர் எவரும், "இவர்களே தம்பதிகள்! இவர் களே பாக்கியவந்தர்! தம்பதிகள் இருப்பின் இவர்களைப் போல் இருக்கவேண்டும். வாழின் இவர்களைப்போல வாழவேண்டும்" என்று புகழத்தக்க புண்ணியராகிய தம்பதிகளை அகாலமரணம் அகஸ்மாத்தாய் வந்து பிரித்து ஆகுலப்படுத்துகின்றது. ஆதலால், இல்லறத்தில் மாந்தர் அடைவன எண்ணிலாத் துன்பங்களே என எண்ணுகிறேன்" என்றனள்.

இங்ஙனஞ் சுகுணமஞ்சரி பொழிந்த தேன்மொழி களை உண்ட சுசீலன் "என்னுருயிர்க் காதலி! இரவும் பகலும்போல் இன்பதுன்பங்கள் இணைந்தே யேகுகின்றன. தூக்கமும் அதன் நீக்கமும்போல் குற்றமுங் குணமுங்

கூடியே ஆடுகின்றன. ஆதலால் நீருக்குத் தட்பமும், நெருப்பிற்கு வெப்பமும்போல இன்ப துன்பங்கள் இவ்வுலக வாழ்க்கைக் குரியவை. களிப்புங் கவலையுமேயன்றி, அவற்றில் ஒன்றே காணும் நராவுளரோ? ஆதலால், நம் மறிவாலும் அநுபவத்தாலும் ஆய்ந்தாய்ந்து ஒரு வாலிபனைத்தேடி நம்மகளை யீந்தால், அவர்களுடையும் இன்பிற்குத் துன்பு சிறிதாகும். இவ்வளவே நாஞ் செய்யக் கூடியவை" என்றனன். சுகுணமஞ்சரி, 'ஐய! தம்மொழிக்குக் குறுக்கேதும் யான் கூற வரவில்லையே! என்று தணிந்தனள். பின்னர், ஒரு வாரத்திற்குள்ளேயே, சுசரிதையின் பாக்கிய விசேஷத்தால், இராஜபவனத்தில் வாழ்வோனும், தனபாலனென்போனுமாகிய நன்னடை வேளாள வாலிபனொருவன் சுசரிதையின் பெற்றோருவந்த நல்வாறாய் வந்து சுசரிதையை மணந்து கொண்டனன். சின்னாட்களின் பின்னர், சுசரிதை பலவகைச் சீதனங்களோடும் தன் வாழ்வு தாழ்வுகளுக்குரியவனும், தன்பதியுமாகிய தனபாலனுடைய நிழலேபோல் இராஜபவனம் போக அவனுடன் புறப்பட்டனள்.

அத்தருணத்தில், தாய், "என் கண்மணி! சுசரிதை! யான் கூறுமிவற்றைக் கருத்தோடுங் கேட்டு ஞாபகத்தில் வைத்துக்கொள்: நூலாசிரியன் மனமும், பெண்ணைப் பெற்றோர் மனமும், ஒன்று. நூலாசிரியன், தன் நூல் பிறரால் அங்கீகரிக்கப்பட்டு, நல்லது எனப்படும் வரையில் கவலையினால் உண்ணைப்படுகிறான். பெண்ணைப் பெற்றோரும், அப்பெண் வாழப்போன வீட்டிற்குங் கணவனுக்கும் உவந்தவளாகி, நல்ல பெயரெடுக்கும் வரையிலுங், கவலையற்றோராகிறதில்லை. ஆதலால், கருத்தோடு கேட்டு ஞாபகத்திற்கொள் என்றேன்" என்றனள்.

சுசரிதை :—"அம்ம! அன்புகூர்ந்து சொல்லுங்கள்; ஆதரவுடன் கேட்கின்றேன்; என்னகத்தில் அமைத்துக்கொள்கின்றேன்; அங்ஙனே நடக்க முயல்கின்றேன்." என்றனள்.

சுகுணமஞ்சரி:—(1.) "என் கண்ணே! உன்னுடலின் அழகும், உடையின் அழகும், அணிமணிகளின் அழகும், உனக்கு உண்மையான அழகை விளைப்பனவல்ல. நீ புக்க வீட்டிலும், நாட்டிலும், அடையும் நல்ல பெயரே உனக்கு உடலும், உடையும், உத்தம பூஷணங்களும் ஆவது என்றறி.

(2.) கர்வம், கோபம், சோம்பல் முதலான அவகுணங்களை யணுகவொட்டாமல், உன்னுடைய மாமன், மாமி, மைத்துனர், கணவன் முதலானவர்களுக்குச் செய்ய வேண்டியவைகளை யுள்ளன்போடுஞ் செய்யப் பழகிக்கொள்.

(3.) உன்னுடைய கணவன், மாமன், மாமி முதலானவர்களுக்குமுன் நீராடவும், உண்ணவும், உறங்கவும் நாடாதே.

(4.) உன்னுடைய கணவன், காட்டிலிருந்து வரினும், கழனியிலிருந்து வரினும், நாட்டிலிருந்து வரினும், நகரியிலிருந்து வரினும் மிக்க மரியாதையுடன் எழுந்து பாதோதகங்கொடுத்து, ஆசனம் அமைத்துத் தக்கபடி யுபசரிக்க மறவாதே.

(5.) வீட்டையும், வீட்டிலுள்ள தட்டுமுட்டுச் சாமான்களையும், ஆக்கிடும் அன்ன பாத்திரங்களை

யும் மிக்க பரிசுத்தமாய் வைத்துக்கொள்ள வுங் கண்ணேயுங் கருத்தையும் பழக்கிக்கொள்.

(6.) உன்னுடைய குரல், அண்டை அயல் வீட்டோர்க்குக் கேட்கும்படி ஒருகாலத்தும், இரைந்து பேசாதே, நகைக்காதே.

(7.) உன்னுடைய கணவன் வெறுப்பவைகளை வேண்டுமென்று, பெற நாடாதே. அவனுக்கு ஆகாதவர்களோடு சிறிதும் உறவாடாதே.

(8.) உன்னுடைய கணவன் அன்போடும் உபசரிக்கும் பெரியோர்களுக்கு, முகங்கோடாது உபசாரஞ் செய்.

(9.) வீட்டிற் கிடைக்கும் அணி, மணி, ஊண், உடை, படுக்கை, சந்தனம், தாம்பூலம், மலர், மாலை முதலானவைகளிற் சிறந்தவற்றைப் பெற நாடுஞ் சுயநயத் தூர்மதியைக் கொள்ளாதே.

(10.) அங்குள்ளாரில், பெரியவர்களுக்கே யன்றிச் சிறியவர்களுக்கும் மரியாதையுள்ளவளாயிரு. அவர்கள் கூறும் மொழிகளையும் அசட்டை செய்யாமற் கேட்டுக்கொள்.

(11.) உன்னுடைய மாமன், மாமி முதலானவர்களுக்கு ஊழியக்காரர் செய்ய வருகிற வேலைகளில், நீ செய்யக் கூடியவைகளை விருப்போடும் விரைந்து நீயே செய்.

(12.) மரியாதைக்குரிய எவர் முன்னுமே உட்காரந்திராதே. அவமரியாதை பூண்டொழுகுவார்க்கிடையே அவசரத்திலுஞ் செல்லாதே.

(13.) நின் கணவனது வரவை எதிர்பார்த்துக் கொண்டு தானுந் தெருவண்டையிற் போய் நெடுநேரம் நில்லாதே. தீரத்தெளிய ஆராய்ந்து நிச்சயிக்குமுன் ஊழியக்காரர் முதலான எவர் மேலுங் குற்றஞ் சொல்லாதே.

(14.) உன் கணவனுடைய ஊதியமெல்லாம உனக்கும் அவனுக்குமே யாகவேண்டும் என்று எண்ணாதே; வேறு போவோம் என்று கலகம் பண்ணாதே.

(15.) உன்னுடைய கை தவறியேனும், காலிடறியேனும், எதையேனுங் கொட்டிவிட்டாலும், உடைத்துவிட்டாலும் அப்பழியைப் பிறரடையுமாறு மறைத்துவிடாமல் நீயே தாங்கிக்கொள்.

(16.) செம்பிற்கு இயற்கையில் உள்ள களிம்பு போல், மாதர்க்கு இயற்கையில் உள்ள துர்க்குணங்கள் பலவென்பதை நீ நன்கு அறிவாயே; அவை, புளி முதலிய இட்டிட்டுப் பலகாலுந் தேய்த்துக்கொண்டிருந்தால், மிகாதிருத்தல் போல், ஞானநூல்களையும், நல்லோர் சரித்திரங்களையும் பல்காலும் படிப்பதைக்கொண்டும், பகவானைத் துதிப்பதைக் கொண்டும், தேய்க்கத் தேய்க்க அத்துர்க்குணங்கள் குறையும் என்பதை மறவாமல், அவ்வுபாயங்களைக் கொண்டு உன் மனக்களிம்பை மாற்றிக்கொண்டே யிரு.

(17.) மாதர்களைக் காப்பது அவர்களுடைய மனமேயன்றி மதில்களல்ல வென்பதை மறவாதே. இவ்வளவே நினக்குக் கூற நாடினேன்" என்று முடித்தனள்.

6888



இவை கேட்டுக் களிப்போடும் அங்கீகரித்துங்கொண்டிருந்த சுசரிதை, "இவற்றில் ஓரெழுத்தும் பழுதுபடாமல், நீங்கள் நாடும் விதமே செய்து நல்லவளாக என்னுலான வரையில் முயல்கின்றேன்" என்றனள்.

அதன் பின்னர், சுசரிதையைச் சுசீலன் உள்ளுறு முவகையோடும் நோக்கி, "என்னரும் பேறுகிய சுசரிதை! நானும் இரண்டொரு விஷயங்கள் உனக்குச் சொல்ல நாடுகின்றேன்" என்றனன். சுசரிதை, "என் தந்தாய்! சொல்லுக" என்றனள்.

சுசீலன் :—(1.) மாந்தராகிய நாம், வாயாற்சொல்லியும், கையாற் செய்தும், குற்றமும் பாவமும அடைகிறதைப் பார்க்கிலும், மனதினுல் நினைக்கிறதினுலே அதிக பாவங்கள் செய்தவர்களாகிறேும். ஆதலால், உன் உள்ளத்தை மிக்க ஜாக்ரதையோடுங் காத்துக்கொள்.

(2.) உனக்கு அப் பிரியமா யுள்ள வெதுவும், பிறருக்குமே அப் பிரியமாயிருக்கும் என்பதை மறவாதே.

(3.) உன்னுடைய இருதயம், உட்பகைவர்களுடைய காரியங்களால் மலினப் படாமலிருக்கும்படி, பேரறிவுடன் அதனைக் காத்துக்கொள்.

(4.) உடலைச் சுமப்பதற்கு அடைய வேண்டிய பயன், பரோபகாரஞ் செய்தலே யென்பதை நினைத்து நினைத்துப் பரோபகாரியாகி வாழ்.

(5.) வாழ்வுற்ற பொழுதில் தலை தெரியாத மகிழ்ச்சியும், தாழ்வுற்ற பொழுதில் தலை நிமிராத கவற்சியுங் கொள்ளுவது பேதைமை யென்பதை மறவாதே.

(6.) பேராசை, பொறுமை, கர்வம், துரபிமானம் ஆகிய துர்க்குணங்களுடையோரிடத்தில், தருமமும், நீதியும் அணுகுவதும் அரிதென்பதை மறந்துவிடாதே.

(7.) அறம் புரிகின்றவர்களிற் சிறந்தவர்கள் பூதயையுடையவர்கள்; ஆற்றலுடையவர்களிற் சிறந்தவர்கள் பிறர் செய்த அபசாரங்களைப் பொறுக்கும் ஆற்றலுடையவர்கள்; அறிவுடையவர்களிற் சிறந்தவர்கள் ஆத்தும ஞானமுடையவர்கள்; ஸன்மார்க்க முற்றுரிற் சிறந்தவர்கள், தலைபோகவரினுஞ் சத்திய மிழக்காதவர்கள் என்பதை யெண்ணி யெண்ணி ஏற்றவாறு நட.

(8.) கொடுக்கும் எதையும் அன்பினுலேயே கொடு; கூறும் எதையும் அன்புடனேயே கூறு.

(9.) இல்லற வாழ்க்கையில், ஆணுலாகவேண்டிய நன்மைகளைவிடப் பெண்ணுலாகவேண்டியவை பலவாதலால், உன்னுல் பலருக்கும் நன்மையே விளையுமாறு பேரறிவுடன் நடந்துகொள்.

(10.) உன் மாமன், மாமி முதலானவர் செய்யுஞ் செய்கைகளும், சொல்லுஞ் சொற்களும், உனக்குப் பிரியமாயிருப்பினும், அப்பிரியமாயிருப்பினும், இதமானவைகளாகவே கொள்.

(11.) சிக்கனமறியாத குடி சீரழிந்து போகும்; கடன்பட்ட புருடன் கருநாகத்தின் வாய்ப்பட்ட தேரைபோல் கண்ணீர் விட்டுக் கதறவேண்டியவன் என்பதை மறவாது சிக்கனமாய் வாழ்;

கடன் கொள்ளும் வழக்கம் உன் கணவனிடம் இடங்கொள்ளாதபடி அவனைக் காத்துக்கொள்.

(12.) உன் தாயார் இவ்வீட்டு வேலைக்காரர்களிடம் அன்புள்ளவளா யிருக்கிறதுபோல், நீயும் உன் வீட்டு வேலைக்காரரிடம் அன்புள்ளவளா யிரு.

(13.) உன் மாமன், மாமி முதலான புக்ககத்தாரில் எவரையேனும் புறங்கூறவரும் பிறருக்குக் காதுகொடாதே.

இவைகள் எல்லாம் உனக்கு நான் முன் பன்முறை சொன்னவைகளே. இப்பொழுது உனக்கு நினைப்பூட்டினேன். சுகமாய்ப் போய்வாருங்கள்" என்று விடை கொடுத்தான்.

தனபாலன் :—"மாம! போய்வருகின்றோம், மாமி! போய்வருகின்றோம்" என்றனன். சுசரிதையும் "அப்பா! போய்வருகின்றோம், அம்மா! போய்வருகின்றோம்" என்றனள்.

பல வேலைக்காரர்களும், வேலைக்காரிகளும் வந்து, வரிசையாய் நின்றுகொண்டு, வியசனங்கலந்த சந்தோஷம் நிறைந்த மனமும், பார்வையு முடையவர்களாய்த் தங்கள் எஜமானனது புத்திரி, மாமியின் வீட்டிற்குப்போக வழிவிடக் காத்திருந்து, அவளது பதியும், அவளும், வண்டியிலேறியபின், ஊரின் எல்லையைக் கடக்கும் வரையிற் சென்று வாழ்த்தித் திரும்பினர்.

இவள், மாமியின் வீடுபோகப் புறப்பட்டபொழுது, பக்கத்தில் கண்ணுங் கண்ணீருமாய் நின்று கொண்டிருந்த இரண்டு சகோதரரும், தமக்கையைப் பிரிய மனஞ் சகியா

ராயினர். ஆகவே பன்னிரண்டு வயதடைந்தவனும், சுமதி யென்னும் பெயருடையவனுமாகிய மூத்தவன் :—" அத்தான்! எங்கள் அக்காளுந் தாங்களும் இங்கே அடிக்கடி வரப்போக இருங்கள்" என்றான்.

தனபாலன் :—" தம்பி! நீயும், உன் தம்பியும் நல்ல பிள்ளைகளாய், நன்றாய்ப் படித்துக்கொண்டிருந்தால், உங்களை யடிக்கடி பார்க்க வருகிறதற்கு, உங்கள் அக்காளுக்கும் எனக்கும் ஆசையிருக்கும்" என்றான்.

சுமதி :—" அத்தான்! நீங்கள் சொல்லுகிறபடியே செய்கிறோம்; நீங்களும், நான் கேட்டுக்கொண்டபடியே செய்யவேண்டும்" என்றான்.

சுசரிதை :—(சுமதியை மார்போடணைத்துக்கொண்டு, ததும்பிய கண்ணீருடன் அவனைத் தடவிக்கொடுத்தாள்.)

இளையவனும், எட்டு வயதும் முற்றாதவனுமாகிய குணலாபன், தன் தந்தையை நோக்கி, " அப்பா! அக்காளையும், அத்தானையும், நம்முடைய வீட்டிலேயே வைத்துக்கொள்ளுங்கள்" என்றான்.

தகப்பன் :—" குணலாபா! நீயும், சுமதியும், உங்கள் வீட்டில் உங்கள் தாய் தகப்பன்மாரோடு இருக்கிறது போல், அத்தானும் அவரைப் பெற்று வளர்த்த தாய் தகப்பன்மாரோ டிருக்கவேண்டாமோ?" என்று புன்சிரிப்புடன் கேட்டான்.

சுமதி :—" அத்தானும் அக்காளும் அவர்களுருக்குப் போகத்தான் வேண்டும்." " அத்தான்! எங்கள் அக்காளை அன்போடும் பார்த்துக்கொள்ளுங்கள்" என்றனன்.

குணலாபன் :—" அம்மா! அக்காளை அனுப்பாதேயுங்கள்; அக்காள் நம்முடைய வீட்டிலேயே இருக்கட்டும்;

அத்தான் வேண்டுமானால் போகட்டும் வரட்டும்'' என்று மிக்க துயரத்துடன் கூறினான்.

சுசரிதையும், தனபாலனும்:—புன்னகை செய்து கொண்டே "குணலாப! நீ எங்களோடு இராஜபவனத்துக்கு வருகிறையா?'' என்றார்கள்.

குணலாபன்:—"நான் வரமாட்டேன்; நீங்கள் போங்கள்; என் தோழர்கள் இங்கே தானே இருக்கிறார்கள்'' என்றான்.

சுகுணமஞ்சரி:—"குணலாப! நான், உங்கள் மாமனை, பாட்டனை, பாட்டியை, எல்லாரையும் விட்டுவிட்டு, உங்கள் தகப்பனருடன் இங்கே எத்தனையோ வருஷமாயிருக்கவில்லையா?'' என்றாள்.

குணலாபன்:—"ஆமாம் அம்மா! அக்காளைப் பிரிந்திருக்க எனக்கு அழுகை வருகிறதே!'' என்று சொல்லி, ஊ—உகு—உகு—உகும்—உகும் — எனஅழுதான்.

சுசீலன்:—"குணலாப! நம்முடைய வீட்டிற்கு அடிக்கடி அத்தானும் அக்காளும் வருவார்கள். அதிக நாளிருப்பார்கள். அழாதே! நேரமாகிறது. அவர்கள் போய் வரட்டும்'' என்றான்.

குணலாபன்:—"அத்தான்! நீங்கள் அடிக்கடி இங்கே வரச் சரிப்படாவிட்டால், எங்கள் அக்காளை மாத்திரமாவது அனுப்புகிறீர்களா?'' என்று மிக்க பணிவோடும், பரிதாபகரமாயும் கேட்டனன்.

தனபாலன்:—"குணலாப! அவசியம் வருகிறோம்; சந்தோஷமாயிரு; எங்களை யனுப்பு'' என்றான்.

குணலாபனும், சுமதியும்:—"அத்தான்! சுகமாய்ப் போய் வாருங்கள்'' என்றனர்.

சுசீலன் :—“ குணலாப! வண்டி வந்திருக்கிறதோ? பார்” என்றான்.

குணலாபன் :—சந்தோஷத்தோடும் ஓடிப்போய் வீதியில் பார்த்துவிட்டு, உள்ளே வந்து, “ அப்பா! கோபாலன் சவாரி வண்டி கொண்டுவந்திருக்கிறான் ” என்றான்.

பால்போல வெண்மையாயிருந்த இரண்டு வெள்ளை யெருதுகள் பூட்டி வந்து நின்ற சவாரி வண்டியின் அருகில்வந்து, எல்லாரிடத்துஞ் செலவு பெற்றுக்கொண்டு ஏறியுட்கார்ந்து, தாய் தந்தையர், சகோதரர், வேலைக்காரர் முதலானோர் நினைவு இடையே யிடையே வந்து வந்து வருத்தியதனால் மருள்விழிப் பார்வையோடும், இரண்டு நாளைக்குப் பின், இராஜபவனம் போய்ச் சேர்ந்தனள் தனபாலனது இல்லறத்துணைவியாகிய சுசரிதை. மாதாபிதாக்கள் கூறியவைகளை மறவாமலும், அசட்டைபண்ணாமலும், மிக்க ஜாக்கிரதையோடும், தன் மனமொழி செயல்களில் தூய்மையுடையவளாயிருந்தனள் அந்நங்கை.

தமக்கை, அவளுடைய புருஷனுடன் மாமியின் வீட்டிற்குப் போய்விட்டபடியால், சுமதியாகிய தம்பி, கையுடைந்தவன்போல பலநாள் வரையிலும் வியசனப் பட்டுக் கொண்டிருந்தான். சுசீலனோ, “ பெண்களைப் பெற்றவர்கள், அப்பெண்களைப் பிறர் கொடுத்து வைத்திருந்த அடைக்கலப் பொருள்களென்றே எண்ணல் வேண்டும். அவர்களை அவர்களுக்கு உரியவர்களாகும் பதிகளிடஞ் சேர்ப்பித்தபின், பட்டிருந்த பெருங்கடனையும் வட்டியையுங் கொடுத்துத் தீர்த்தவர்கள்போல, மனங்களிக்க வேண்டும் ” என்று பன்முறை சுகுணமஞ்சரிக்குச் சொல்லிக்கொண்டும், தான் நினைத்துக்கொண்டும், புத்திரியின்

பிரிவை யெண்ணி யெண்ணிப் பேதையரைப்போற் பெரிதுங் கலங்காமலும், அவளை மாமியின் வீட்டில் வாழவொட்டாது அடிக்கடி யழைத்து வந்து கெடுக்காமலும், இருந்தனன்.

சுமதி, வித்தியாவிநோதருடைய கல்விச்சாலையில், கூர்மையான புத்தியோடும், ஜாக்ரதையோடும், கல்வி கற்றுத் தேர்ச்சியடைந்து, நன்னடையிலுந் தேர்ந்து கொண்டிருந்தனன். இவனுக்குப் பதினெட்டாவது வயது வந்துவிட்டது.

"புத்திரனை ஐந்தாண்டுவரையிற் சீராட்டி, அன்பு பாராட்டி, வளர்க்கவேண்டும்; ஆறுவது வயது முதற் பத்து வருடங்களளவும் வாட்டி வருத்திக் கண்டித்துத் தண்டித்துக் கல்வி கற்பிக்கவேண்டும். பதினைந்துபோய் பதினாறுகிவிட்டால், 'தோளுக்கு மிஞ்சினால் தோழன்' என்பதை நினைந்து நண்பனைப்போல் நடத்தவேண்டும்" என்பதை யுணர்ந்திருந்த தந்தையின் நினைவிற் கலந்து, தங் குலத் தொழிலைச் செய்யவும், தந்தைக்கு உதவியாக நின்று தங்கள் செல்வத்தை வளர்க்கவும், காக்கவும், நல் வழியில் பயன்படுத்தவுங் கற்பானாயினான் சுமதி.

சுகுணமஞ்சரியின் இரண்டாவது புத்திரனாகிய குணலாபனே, பார்ப்பவர்களும் பெற்றோரும் உள்ளங்களிக்கத்தக்க உடலும், அழகும் வாய்ந்த சிறுவனாய் இருந்தனன். விளையும் பயிர் முளையிலே தெரியும் என்றபடி, இவனிடத்தில், பிடிவாதம், பொறாமை முதலான பல அவகுணங்கள் விளங்கின. ஆகவே, பெற்றோர் மனங் கலங்குகையில், உற்றோரும் மற்றோருமோ, "குழந்தையை என்ன செய்கிறது? நாளடைவில், நல்ல சிறுவனே யாகும்; உங்கள் வயிற்றிற் கெட்ட குணமுள்ள பிள்ளை பிறக்

காதே!'' என்று கூறினர். பெற்றோரோ, அந்தோ! நன்னிலத்தில் முண் மரமும் முளைக்கின்றதை யறியோமோ?'' இவனும் நல்லவனாவானோ?'' என்று கூறிப்பெற்ற வாட்டமொழியார் ஆயினர்.

சுசீலனும், சுகுணமஞ்சரியும், குணலாபனுடைய கட்டழகைக்கண்டு களியாராகி, அவனுடைய கடுமொழி முதலியவற்றைக் கண்டு நடுங்குவாராயினர். "அந்தோ! **ஐந்தில் வந்தது தானே ஐம்பதிலும் வரும்; செடியாய் வளையாதது மரமாய் வளையுமோ? ஆந்தை கிளியாகுமோ? அனல் புனலாகுமோ?** இவனுந் திருந்துவானோ? என்று கவன்றனர்.

"வளமிலாச் சிற்றூர் வாழ்க்கை, வன்மனக் கயவர் சேவை,
உளமதற் கிசையா வுண்டி, யொற்றுமை யில்லாப் பெண்டிர்,
இளமை சேர் விதவைப் பெண்கள், இகழ் நடை மூர்க்க மைந்தர்,
வளர் பெறுந் தீமையின்றி வாட்டியே எரிப்ப வந்தோ!''

என்றபடி, இவன் நம்மை யென்னென்ன செய்கிறதற்கு வந்திருக்கிறானோ?'' வென்று ஏக்கமுறுவாராயினர்.

குணலாபன், ஊண், உடை, ஆட்டம், ஓட்டம் முதலானவைகளிற் கொண்டிருந்த உற்சாகத்தைப் படிப்பிலும், பாடசாலைக்குப்போவதிலுங் கொள்ளானாயினன்.

அவனுடைய உடலின் வனப்பு முதலியவற்றைக் கண்டு வியந்த ஊரார், "சுசீலனுஞ் சுகுணமஞ்சரியுஞ் சிறந்த பாக்கியவந்தர்'' என்று வாழ்த்தினர். அவர்களோ குணலாபனைப் பார்க்குந்தோறும், நினைக்குந்தோறும், "அந்தோ! இவன் பூப் புழுவானனே! புலியாகி வந்தனனே! உடலின் நலமே யொழிய உளத்தின் நலம் ஒரு சிறிதும் பெற்றிலனே! அழகும், நல்வடிவும், குலமும் பெற்றிருந்தும், இவன் கல்வி கல்லானாகி, மணமில்லா முருக்கமலர் போன்றனனே! இவனை எவர் நன்குமதிப்பார்?

"அலரிடைப் பிறந்து வாழ்ந்த வற்பமாம் புழுவை நோக்கி
யலரிடைப் புழுவீ தென்ன வாதரித் திடுவார் யாவர்?
பலருமே யிகழ வாழ்வோர் பண்புள குலத்தோராயின்
குலநல மொன்றை யெண்ணிக் கொண்டிடார் மேலோர் மேலா."

என்றது பொய்த்தாலன்றோ, இவன் சிறப்புறுவன்" என்று நெட்டுயிர்ப்பு விட்டு, மிகவும் வாடுவாராயினர். குணலாபன், வித்யாவிநோதர் மனநிறைவிசைந்த மாணாக்கனாக வில்லை. அவர் பெயரையுமே கெடுப்பானாகினான். வயதேற வேற அவனுடைய தூர்க்குணங்களும் முதிர்ந்தன. கல்வியறிவும், நன்னடையும் அவனுக்கு வாய்ப்பது, முயலிற்குக் கொம்பும், எட்டிக்கனிக்கு இனிப்பும், பெருங்குடியனுக்கு நல்லறிவும் வாய்ப்பதுபோல் அருமையாயினது.

காலம் என்னுஞ் சக்கரம் ஓயாது ஊருண்டுருண்டு ஓடிக்கொண்டே இருத்தலினால், காலை—பகலாகிறது; பகல்-மாலையாகிறது; மாலை-இரவாகிறது; இரவு-நள்ளிரவாகிறது; நள்ளிரவு-விடியலாகின்றது. மறுநாள் வருகிறது. இங்ஙனம், நாழிகை நாளையும், நாள் வாரத்தையும், வாரம் மாதத்தையும், மாதம் வருஷத்தையும், வருஷம் வளர்ச்சி தளர்ச்சிகளையுங் கொண்டுவந்து விடுகின்றன.

பெற்றோரும், வித்யாவிநோதரும், "குணலாபன் பிள்ளைமதி நீங்கியக்கால் கல்வியில் ருசிகொள்ளக்கூடும்" என்று ஒவ்வொருகாலத்தில் எண்ணியதற்கு, இலவுகாத்த கிளியின் துயரெய்தினர்.

இவன், கல்வியினிடத்து அசட்டையும், பெற்றோர், ஆசிரியன் முதலானவர்களிடத்துக் கீழ்ப்படியாமையுமே நிறைந்தவனாகி, மெய்யும், மனமும் வருந்த வுழைத்துக் கல்விகற்கும் நற்பிள்ளைகளையும் நகைப்பானும் பகைப்பானு

மாய் வளர்கையில், பன்னிரண்டாண்டுகள் கழிந்து பதின் மூன்றாவதுவயது வந்துவிட்டது. வரவர, ஒரு பயனுமாகா ஓதிபோல் ஓங்கிவளர்ந்தனன். அறிவு, அடக்கம், அன்பு முதலியவற்றிற் குறுகினன். கல்விச்சாலைக்கு ஒருநாள் போகிறதும், ஒன்பதுநாள் போகாதிருக்கிறதும், தன்னைப் போன்ற சிறுவர்களும், தனக்கு நண்பர்களுமாகிய சில ருடன் ஓடியாடிப்பாடிப் பலவிடங்கள் திரிவதும், வேண் டியவன்று வீட்டிற்கு வருகிறதும், வேண்டாதவன்று வரா மலிருக்கிறதும், கூத்தெங்கே? பாட்டெங்கே? என்று நாடியோடிக் கண்டுகளித்துக் காலங்கழிப்பதுமாயிருந்து, பின்னும் நான்கு வருஷங்களை யொருநாளேபோற் கழித்து விட்டனன். இப்பருவமாகிய யௌவனத்தை யுற்ற குரூபி யுங் கந்தர்வனுவானெனில், சுரூபியானவன் கண்கவரும் வடிவினன் ஆகானே? கல்வியில்லாத இவனுக்கு நினைத்த நன்மை தீமைகளை நினைத்தவாறே செய்வதற்கொரு கருவி யாகிய செல்வமெய்துவதற்கு, செல்வமுள்ளவன் புதல வனுயிருத்தலும், தீவழிப்பட்டார் தீமைகளையும், நல்வழி ப்பட்டார் நன்மைகளையுஞ் செய்வதற்கேற்ற வாலிபப் பரு வமும், எவர்க்கும் அடங்காமையும், அஞ்சாமையும் ஒருங் கே யமைந்தன.

இக்குணலாபன் இன்னார் புதல்வன், இன்னவடி வினன், இன்ன இயல்பினன் என்றறிந்தவர்களும், தீயவழி களிற் கண்மூடியோடிப் பெருந்துயர் உழன்று, கைப்பொ ருளிழந்து, பொல்லாத வறுமையுற்றோருமாகிய பலகிழக் கழுகுகள், குணலாபனிடத்துத் துர்புத்தியும், துர்நடை யும் ஓங்குவதைக்கண்டு, “இவன் நம்மையாதரிப்பவனு வன்; விடர், நடர், காயகர், வேசையர் முதலானவர்களு க்கு, மாரியின்றி வாடி வதங்கும் நெற்பயிருக்குக் கார்

முகில்போல் உதவுவானுவன் என்று, அவன் செடுவழி யிடையே நடைபெறும் நாளாகிய தங்கள் நன்னுட்களை எதிர் பார்த்துக்கொண்டே, அவன்பாற் பன்முறை வரவும், நட்பாடவும், சிறுவர் மதியைச் சிதைக்குங் கதைகள் பல செப்பவும், முற்றுந் தந்தைக்கடங்காத மூடனுகிவிடவும் வேண்டிய வழிகள் தேடுவோருமாயினர்.

குணலாபனே, பிழையின்றி விரைவிற் கூட்டக்கழிக்கவும், பெருக்க வகுக்கவுமே கற்றிலன். ஐந்தாறு சொற்களடங்கிய சிறுவாக்கியங்களைப் பொருள்விளங்கத் திருத்தமாய்ப்படிக்குஞ் சக்தியும் பெற்றிலன். ஊர்க்கதைகளில் ஒருகோடி சொல்லவும், உதவியற்ற பேச்சுக்கள் கேட்கவுமே தன்னுவையுஞ் செவியையும் பழக்கிக்கொண்டனன்.

தங்களுக்குள்ள வளவயல்களையேனும், வானமளாவிய மனைகளையேனும், குடங்குடமாய்க் கறக்கும் பசுக்களையேனும், குன்றுகள்போன்ற காளைகளையேனும், ஏருழுதுவரும் எருதுகளையேனும், எருவடித்துவரும் வண்டிகளையேனும், பயந்துநிற்கும் பண்ணையாட்களையேனும், பட்சமாயுபசரிக்கும் வேலைக்காரர்களையேனும் எண்ணுமல், உண்ணுவது, ஊர்திரிவது, உறங்குவது ஆகிய மூன்றுகாரியங்களில் வல்லவனுனன். ஆகவே, மனக்கொதிப்பையடக்கியடக்கிப்பார்த்தும், அடக்குமாற்றலற்றவனுகிய சுசீலன், ஒருநாள், “குணலாப! உனக்கு அட்சரத்தினிடத்திலும் ஆசிரியரிடத்திலுந்தான் பகைமூதிர்ந்து படிப்பை விட்டுவிட்டாய்; பள்ளிக்கூடம்போகிறதை விட்டுவிட்டாய்; புஸ்தகங்களைக் கட்டி யெறிந்துவிட்டாய். உண்ணச்சோறும், உடுக்கத்துணியும், சுவையும், அந்தஸ்துங்கெடாமல் வேண்டியிருக்கின்றனவே! உழைக்காவிட்டால், இவை

களை அடைகிறதெப்படி? உனக்கு அன்னப்பகை யுண்டாகவில்லையே? நம்முடைய ஆட்களைப்போல் பயிர்த்தொழில் கற்றுக்கொள்ளவாவது நாளை முதல் வா. இறைக்கிற படியாட்களிற்கு மடை மாறவாவது கற்றுக்கொள்" என்றான்.

இவைகேட்ட குணலாபன் கண்கள் சிவந்தன; உதடுகள் துடித்தன; கைகால்கள் நடுங்கின; கண்டம் கமறியது; முகத்திற் கோபமேறியது; ஒன்றுஞ்சொல்லாமல், இருந்துவிட்டான்; நண்பரிடம்போய்க் கூறிக்கொண்டான்.

தங்களுக்கிருந்த வளவயல்களில் மஞ்சள், கருணை, சேம்பு, பூடு, வெங்காயம், வெள்ளிக்கிழங்கு முதலிய வெட்டியெடுக்கும் பருவங்களிற் போய்க் காவலிருக்கவேணும், கரும்பு, நெல் முதலிய அறுக்குங்காலங்களிற்போய்க் காக்கவேணும் வயல்களிற்குப் போயிருந்த சுமதியாவது, சுசீலனாவது, "குணலாப! இன்னநேரத்திற்கு இன்ன வயலண்டைவா, காவல்காக்கவேண்டும்" என்று நயமாய்க்கூறினாலும், வருகிறேன், வரேன் என்று கூறாமல், "**சரிதான்**" என்பான். அதனை நம்பி நம்பி, சுமதியும் குணசீலனும் போய்விடுவார்கள். இவன் வரவை யெதிர்பார்த்து வருந்தமுறுவார்கள். இவனோ வெட்கமேனுந் துக்கமேனுமின்றித் தீய சிறுவரிடையில், நட்சத்திரங்களுக்கிடையே சந்திரன்போல் விளங்கித் தன்னைத் தீய சிறுவர் மதிக்கக்கண்டு மகிழ்ந்துவிட்டு, வீடுவந்து உண்டுவிட்டோடிப் போவான்.

சுசீலன், அடுத்தவூரில் மிக்கசெல்வமும், சீரும், சிறப்புமாய் வாழ்ந்துகொண்டிருந்த தன் தம்பியிடம், ஒருநாள் இரவோடு இரவாய்ப்போய்த் தன் குறைகளைக் கூறிக்கொண்டான். அவனும், கண்ணுங்கருத்துஞ் சாலக்கலங்கி "அண்ணா! இதற்குள்ளேயே இத்தனை யதைர்யமடையா

தீர்கள். தீயநண்பர்களாகிய ஸர்ப்பங்களின்விஷம் இன்னும் அவன் சிரத்திற்கு ஏறவில்லை. நான்வந்து அவனையிங்கே யழைத்துக்கொண்டுவந்து, என்னோடு நாலாறு மாதம் வைத்துக்கொண்டிருந்து, கூடியமட்டில், நல்லவனாக்கி, கணக்கிலும், கையெழுத்திலுந் திருத்தமுண்டாக்கி யனுப்புகிறேன். நீங்கள் கவலையொழிந்திருங்கள்" என்று தேற்றினான். சுசீலனும் விடியுமுன் வீடுவந்து சேர்ந்தான்.

சுசீலனது தம்பியும், ஸாஜலை என்னும் ஊரின் அதிகாரியும், நீதிபரனுடைய அதினத்திலிருப்பவனும், அநேக சிறு கிராமங்களுக்கு மணியம் பார்ப்பவனும், எண்ணிறந்த கணக்கர்களையுந் தோட்டி தலையாரிகளையும, உடையவனும், இரவும் பகலும் வருந் தண்டற் பணமாகிய சர்க்கார் வரிகளை வீட்டில்வைத்துக் காத்துக்காத்து, முவ்வாயிரம் நாலாயிரம் ரூபாய் சேர்ந்தபின், இராஜபவனத்திற்கு அனுப்பிவிடுகிறவனுமாகிய இவனுக்கு, ஊரைவிட்டுப்போவதும் சுலபமான காரியமாயிருக்குமோ? இவன், குணலாபனுக்காகச் சாக்ஷிக்குவரவெண்ணி யெண்ணித்தவறினான். இதற்கிடையில், குணலாபன், ஒருநாள், தன் அண்ணனுடன்பிணங்கிக்கொண்டு ஒருவரோடுஞ் சொல்லாமல், தன் தாயுடன்பிறந்த மாமன் ஊருக்குப் போய்விட்டான். மிக்க தயையுற்றவனும், "தயாளு" வென்னும் பெயர்பெற்றவனுமாகிய மாமன், குணலாபன் வந்தமைகண்டு களியாமற் களித்தான். அவனை மிக்க அன்போடும் ஆதரித்தான். இரண்டு நாட்களாயின. மூன்றாம்நாள் "குணலாப! உன் தாயாரும், தகப்பனாரும், அண்ணனும், மற்றவர்களுஞ் சுகமாயிருக்கிறார்களா? நீ வண்டிவாகனமில்லாது காலால் நடந்துவந்ததேது? உன் மேனிவாடி வதங்க, முகங்கோபக் குறிகளுங் கொண்டிருக்கிறதேது? என்னசங்கதி? என்

னோடு ஒன்றும் ஒளிக்காமற் சொல்லம்மா!'' என்று கேட்டான். குணலாபன், "மாமா! புதன்கிழமை இரவு சாப்பிட, நான் எல்லாரோடும் உட்கார்ந்தேன்; என் அண்ணன் "குணலாப! நீ சமர்த்தன்; நீயே சமர்த்தன். ஊணுக்கு முந்திக்கொள் வேலைக்குப் பிந்திக்கொள்'' என்கிற பழமொழியை உள்ளபடி யனுஷ்டிக்கிறாய்'' என்றான்.

அப்பொழுது, என் தகப்பனாரும் "கொள் என்றால் வாய்திறந்து, கடிவாளம் என்றால் வாயைமூடிக்கொள்ளுங் குதிரைகள் இருக்கிறது உனக்குத் தெரியாதா? சுமதி!'' என்று அவனைக்கேட்டார். என் அண்ணன் கலகலவென்று உடல்குலுங்கச் சிரித்தான். உம்முடைய தமக்கையுஞ் சிரித்தாள். வேலைக்காரர்களுஞ் சிரித்தார்கள். எனக்கு வயி றெரிந்தது; வயிற்றுவலி என்று இலைச்சோற்றை விட்டெழுந்தேன். உம்மோடு சொல்லி யழலாமென்று இங்கேவந்தேன்; இவைகளையெல்லாம், ஊராரும் என் சிநேகிதர்களுங்கேட்டால் எனக்குப் பொல்லாத தலையிறக்கமல்லவா? மாமா!'' என்றான். ஆனால், சொல்லாமலா வந்தாய்? என்று விசனத்துடன் தயாளு கேட்டான்.

"நான் இருந்தால் அவர்களுக்குச் சந்தோஷமா? இறந்தால் வியசனமா? நான் எப்படியானால் அவர்களுக்கு என்ன? நான், சொல்லாமல்-தான் வந்துவிட்டேன்'' என்றான். தயாளு, இவன் வழிகளையெல்லாம் ஓலைகளின் வழியால் அறிந்தவனாதலால், நயந்த மொழிகள்கூறி, "உன்னை வைத்து வளர்க்க உன் தகப்பனாருக்குத் தெரியாது. நீ நல்ல ரோஷக்காரன்; உன்னையப்படிப் பரிகாசஞ் செய்திருக்கலாகாது; உன்னைத் தேடிக்கொண்டு அவர் இங்கே வருவார்; நான் அவருக்குச் சொல்லுகிறேன்; நீ வியசனப்படாதே!'' என்று தேற்றிக் கடைத்தெருவிற்கு அழைத்துக்கொண்டு

போய்ப் பட்டுக்கரையங்கவஸ்திரங்கள், சரிகையங்கவஸ் திரங்கள் இவ்விரண்டு மடிகளும், அவன் பொறுக்கியெ டுத்த நான்கு சட்டைகளும் வாங்கிக்கொடுத்து, அவனது மனப்புண்ணை யொருவாறு மாற்றினான்.

கடைவீதியிலிருந்து மாமனும், மருமகனும் வீடு நோக்கி வருகையில், தெருப்பள்ளிக்கூடமொன்றில்,

"அடலுறு மன்னர் சோரரபகரித் திடுவ தன்றும்.
விடலுறு தமையன் றம்பி வீப்பினிற் கொள்வ தன்றும்.
உடல்கெடு சுமையு மன்றும். உதவலி னேங்கு நாளும்.
கடலுடைப் புவியிற் செல்வங் கல்வியின் மிக்க துண்டோ?"

என்று மாணாக்கர் ஒப்பித்துக்கொண்டிருக்கக்கேட்ட குண லாபன், "மாமா! என்னவோபாடித் தமையன், தம்பி என் கிறார்களே! என்ன அது?" என்றுகேட்டான். தயாளு, "குணலாப! இந்த வுலகத்திலே இருக்கிற மனிதர்களுக் குப் படிப்புப்போல் சிறந்தபொருள் வேறொன்றுங் கிடை யாது. அதை ராஜர்களாவது, திருடர்களாவது பிடுங்கிக் கொள்ளமுடியாது. கூடப்பிறந்த அண்ணனாவது தம்பியா வது சொத்துக்களைப் பங்கிட்டுக்கொண்டு பிரியும்போது பங்கிட்டுக்கொள்ளமுடியாது. தூரதேசங்களுக்குப் போ கிறபோது, கூடவேகொண்டுபோவதற்குச் சுமையாகாது. எத்தனைபேருக்குக் கொடுத்தாலுங் குறைவதற்கிடாய் வள ரும் என்று கல்வியின் பெருமையைச் சொல்லுகிறார்கள்" என்றான். குணலாபன், "சரி! சரி! இதை நான் என் உபா த்தியாயர் வித்தியாவிநோதர்வாயாற் பலமுறை கேட்டிருக் கிறேன். இப்படி யெத்தனையோ சொல்லியிருக்கிறார்; என் னையே தனியாய்க்கூப்பிட்டுப் பின்னும் எத்தனையோ சொல்லியிருக்கிறார்" என்றான். தயாளு, "பாட்டுமுண்டு, குரலுமுண்டு, பாழான இருமல்தான் ஓய்கிறதில்லை"

என்றான். தயாளுவும் குணலாபனும் இப்படிப் பலபல பேசிக்கொண்டே வீடுவந்து சேர்ந்தார்கள். பிறகு சிறிது பொழுதிற்கெல்லாஞ் சாப்பிட உட்கார்ந்தார்கள்.

தயாளுவின் மகள், வித்யாவதி என்னுஞ் சுந்தரி, "அப்பா! நீங்கள் சாப்பிடுங்கள்; நான், என் பாட்டுக்களை மனப்பாடஞ்செய்துகொண்டபின் என் தாயாருடன் உட்காருகிறேன்" என்று சொல்லிவிட்டு,

"ஓரணி யின்றிக் கந்தை யுடுத்தமான் விழியா ளுக்குப்
பேரணி பூண்டு பட்டிற் பிறங்கிய குருடி நேரோ?
பேரணி பூண்டு பட்டிற் பிறங்கிய கல்லா னேரோ?
ஓரணி யின்றிக் கந்தை யுடுத்தநூல் வல்லா னுக்கே."

என்னுஞ் செய்யுளை விளக்கின்முன் குந்திக் குரலெடுத்துப் பண்ணோடும் படித்துக்கொண்டிருந்தனள். இதைக் கேட்டவுடன் தயாளுவின கண்கள் அருவிகளாயின; மூச்சும பெருமூச்சாகியது; முகமும் ஒளிகுன்றியது; கையும் எடுத்த பிடியை வாயிலிடாது நின்றது.

குணலாபன், தயாளுவை நோக்கி, "மாமா! மாமா! ஏன் அழுகிறீர்கள்? நாக்கிலே புண்ணா என்ன? இன்னும நெய்போட்டுக்கொள்ளுங்கள்; எரிச்சலடங்கும். குழம்பு கொஞ்சங் காரந்தான். எனக்கே கண்ணில் தண்ணீர் வந்து விட்டதே!" யென்றான்.

இம்மொழிகள், தாயாளுவைக் கோபாளுவாக்கின. ஆயினும, அடக்கிக்கொண்டான். அவன் மனைவி வந்து குணலாபனுக்குமாத்திரம் பின்னும் ஒருபலம் நெய்யூற்றினாள்.

குணலாபன், "நெய் நல்ல மணம்! அன்னமுந் தும்பைப் பூப் போலிருக்கிறது" என்று சாப்பாட்டின் சுவை

யைப் புகழ்ந்துகொண்டே யுண்டனன். அக்கால், வித்தியாவதி,

" உண்டிட வாழ்வர் கீழோர் ; உயிர்த்திட வுண்பர் மேலோர்."

என்றொரு செய்யுளை யெடுத்தனள்.

அவள் தாய், " அம்மா! இங்கே வந்துவிட்டுப்போ " என்றழைத்து, ஒருமுறை சொன்னதுடன் நிறுத்திவிட உபாயம் புரிந்தனள்.

தயாளு, மனத்துயரை யடக்கிக்கொண்டு, உண்டு, கைகழுவியபின், தாம்பூலங்கொண்டு வைக்கவந்த அவன் மனைவி, " வகுத்தான் வகுத்த வகையல்லால் " என்னுந் திருக்குறளை மறந்தீர்களோ? என்று சொல்லிக்கொண்டே வைத்துவிட்டுப்போயினள். வித்யாவதியும், அவளது அன்னையும் உண்ண வுட்கார்ந்தனர். தெருப் பக்கத்தறையில் நாற்காலியில் உட்கார்ந்திருந்த தயாளு, வீதியிற்போய உலாவிக்கொண்டிருந்த குணலாபனை உள்ளே யழைத்து எதிரிலே உட்காரவைத்துக்கொண்டு, உனக்கு உன் தோழர்நினைவு வரவில்லையா? வீட்டுநினைவு வரவில்லையா? என்று கேட்டனன்.

குணலாபன் :—" வருகிறது மாமா ! நாளைக்குக் காலையில் அனுப்பிவிடும் ; ஊர் நினைவு வந்து வருத்துகிறது ; என் தாயார் வியசனப்படுவாள் " என்றான்.

தயாளு :—நான் உனக்கு ஒருபாட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன், சொல்லவா ? என்று கேட்டுக்கொண்டே,

" பெற்றபொரு டான் வருந்திப் பெருமையுறு முத்தம மாம்.
பெற்றபொரு ளப்ப னுழைப் பெருமையுறு மத்திய மாம்.
பெற்றபொரு ளுடன் பிறப்பிற் பெருமை யிலா வதமம்.
பெற்ற பொருள் பெண்டுதவப் பேசுமத மாதம மாம்."

என்று அட்சரமட்சரமாய்ச் சொல்லிப் பொருளைக்கூறிவிட்டு, "உன் தந்தையும், தமயனும் உழைத்துப் பொருளீட்டி வீட்டுக்காரியங்களை நடத்துகையில், நீ அவர்கள் கஷ்டப்பட்டுத் தேடுவதைக்கொண்டு, உண்டு, உடுத்து எவ்வளவு காலந்தள்ள எண்ணியிருக்கிறாய்? உனக்குக் கைகால்களில்லையா? நியாயாநியாயமும் உனக்குத் தெரியவில்லை; ஹிதாஹிதமுந் தெரியவில்லை; நீ என்ன நாலைந்து வயதுச் சிறுவனா? நாலைந்தாக விருக்கிறதே! உனக்கிது தகுமா?" என்று கேட்டான்.

குணலாபன்:—"மாம! நீர் கூறுகிறதையெல்லாங் கூறும்; எனக்குக் கோபமில்லை; எனக்குப் படிப்பில் பிடிப்பு உண்டாகவில்லை. "பணமில்லாதவருக்குப் படிப்பே பணம்; பணமுள்ளவருக்குப் படிப்பு ஆபரணமென்று மிகவும் பெரியவரான என் சிநேகிதர் ஒருவர் சொன்னார். எனக்குப்பணமும் இருக்கிறது, அழகும்இருக்கிறது. நான் உழைத்துப் படிக்கமாட்டேன். படிக்கிறநாளில், வித்யா விநோதர் என்னைப் படுத்திவைத்ததை நினைத்துக்கொண்டால், என் மனங்கொதிக்கிறது. அவரை நான் பெரியவனானபின் என்ன செய்வேனோ?—அது அப்போதுதான் தெரியும்." என்றான்.

தயாளு:—"குணலாப! உங்கள் வண்டிமாடுகளில் ஒன்றிற்குப் பட்டைபட்டையாய் உடம்பெல்லாஞ் சூடு போட்டிருக்கவில்லையா?" என்றான்.

குணலாபன்:—"ஆமாம் போட்டிருக்கிறது; அதற்கு வாய்வு ரோகம் வந்தது; மாட்டுவைத்தியன் வந்துபோட்டான்; கொஞ்சநாளிற்குள்ளேயே குணமாகிவிட்டது, புண்ணும் மாறிவிட்டது" என்றான்.

தயாளு :—"இப்படியே, உனக்குச் சோம்பல் முதலிய ரோகம்வந்து நீ பாடங்களைப்படியாதபோது, உபாத்தியாயர் உன்னைத்திட்டியோ, குட்டியோ, அடித்தோ, வேறென்ன செய்தோ படிக்கவைத்திருப்பார். அதற்காக நீ யவர்மேற் பகைகொள்ளலாமா? இப்போது பேசியபடி பேசலாமா? மூடா! தெரிகிறகண்ணுங் கெட்டுப்போகுமே! எழுத்தறிவித்தவன் இறைவனாகும் என்பரே" என்றான்.

குணலாபன் :—"மாமா! அப்படிச் சொன்னது தப்பு! தப்பு! ஒப்புக்கொண்டேன். என் பாட்டன், பூட்டன் முதலானவர் தேடிய பூமியில் விளைகிற நெல்லுக்கும், விளைகிறதை விற்றுவருகிற பணத்திற்கும் எனக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையோ? என் தகப்பனார் சொல்லியிப்படிக்கெல்லாம் என்னை யவமானப்படுத்துகிறீரோ? நீரே யவமானப்படுத்துகிறீரோ? நானிங்குவந்ததே தப்பு. உம்முடைய வேஷ்டிகளையும், சட்டைகளையுந் தயவுசெய்து நீரே வைத்துக்கொள்ளும்" என்று, புறத்துணிகளையுஞ் சட்டைகளையும் எடுத்துவைத்தான்.

தயாளு :—"குணலாப! உங்கள் ஊரார் கேட்டிருந்தால் என்ன பதில் சொல்லியிருப்பாய்?" என்றான்.

குணலாபன் : "நான் இனி இங்கும் வருகிறதில்லை; என் தகப்பனிடமும் போகிறதில்லை; என் சிற்றப்பனிடமும் போகிறதில்லை; என் அக்காளிடமும் போகிறதில்லை; முன்பின்தெரியாத எந்த வூருக்காவதுபோய், எப்பாடுபட்டாவது வயிறு வளர்க்கிறேன்" என்றான்.

தயாளு :—"சரி; இதுதான் பௌருஷம்; இப்படியே செய்" என்றான்.

குணலாபன் :—"மாமா! எனக்குப் பைத்தியம் பிடித்ததென்று எண்ணிக்கொண்டீரோ? என் பாட்டன் ஆஸ்தி

யில் என் பங்கை ஏன் விடுவேன்? எனக்குச் சொல்லிக் கொடுக்கிறவர்கள் இல்லையோ? ஊரில் பெரியமனுஷரில்லையோ? இராஜனில்லையோ? நீதியில்லையோ பார்ப்போமே! என் தகப்பனார், என் பாட்டனார் தேடிய ஆஸ்தியில், எனக்குச் சோறுந் துணியுங்கொடுக்க இஷ்டமில்லாமல என்னைப் பறக்கடித்துவிட்டால் மரம் வைத்தவன் தண்ணீர் வார்ப்பான் என்கிறதை நம்பியிருக்கிற நான், வியசனப்படமாட்டேன். நான் உம்முடைய வீட்டுக்கு வந்தபடியால், எரிகிறபுண்ணில ஈட்டியை நுழைத்ததுபோல் சுடுமொழிகளே சொன்னீர்கள்; நான்போய் வருகிறேன்" என்று புறப்பட்டுவிட்டான்.

தயாளு, தன் மனத்திலுண்டாகிய சினத்தையும், துயரத்தையும் அடக்கிக்கொண்டு, "குணலாப! அழுழச் சொல்லுவர் தம்மனிதர்; சிரிக்கச் சிரிக்கச் சொல்லுவர் பிறர் என்பதை நீ கேட்டதில்லையோ? நாங்கள் சொல்லுகிறவெல்லாம் உன் காதிற்கு அமபுபோலவும், மனதிற்கு விஷம்போலவும இப்போதிருந்தாலும், பட்டறி, கெட்டறி, பத்தெட்டிழுத்தறி என்றபடி கெட்டுப் பட்டு அனுபவமும் அறிவும் பெறும்போது, ஹிதமென்றே தெரிந்துகொள்வாய்" என்றான்.

குணலாபன்:—"எல்லாருமே பண்டிதர்களும் பணக்காரர்களுமாகி இருந்துவிட்டால், கற்றுக்கொள்ளவும், பல்லக்குச் சுமக்கவும் ஆளுக்கு எங்கே போகிறது? எப்படிப்பட்ட ஏழைவீட்டுப் பிள்ளைகளுஞ் சோறுந் துணியுங் கண்டு வாழ்கிறார்கள். எனக்கென்ன குறை? என் தகப்பனார் கையின்கீழ் ஐம்பது ஆட்கள் பிழைக்கிறார்கள். அப்படி யிருக்கப் படிப்பில்லாததினாலேயே நான் பட்டினி கிடந்து சாவேனா? படிப்புப் பணமில்லாதவர்க்குப் பணக்

தேடுங் கருவி : நான் பிறரிடம் உழைக்கப் போகின்றேனு என்ன ?'' என்றான்.

தயாளு :—'' குணலாப ! கல்வி, புருஷருக்குத் தாய், தந்தை, குரு, நண்பன் ஆகிய இவர்கள் செய்யும் நன்மைகளையெல்லாஞ் செய்யும். மனத்தினிருளை நீக்கும், நற்குணத்தை ஆக்கும் என்றும், உனக்கவ்வகைக் கல்வியில்லையே யென்றும் வியசனப்படுகின்றோம்'' என்றான்.

குணலாபன் :—'' மாமா ! நானும் படித்திருக்கிறேன். எனக்கும் கல்வியறிவு இருக்கிறது. எனக்கு ஞாபக சக்தியே கிடையாது என்று நீங்கள் எண்ணிப் பரிகசிக்கிறீர்களோ ? நான் ஏழெட்டு வருஷங்களுக்கு முன் படித்த மூதுரைப் பாட்டொன்று சொல்லுகிறேன் கேளுங்கள் :—

'' கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானுமதுவாகப் பாவித்துத் தானுந்தன்
பொல்லாச்சிறகை விரித்தாடி னாற்போலுமே
கல்லாதான் கற்ற கவி.''

என் ஞாபகசக்தியைப் பார்த்தீர்களா ?'' என்றான்.

தயாளு :—'' குணலாப ! நன்றாயிருக்கிறது. படித்த படிப்பிற்குச் சரியாயிருக்கிறது ; வெய்யிலேறுகின்றது, வண்டியிலேறு : இந்த ஓலையைக் கொண்டுபோய் உன் தகப்பனார் கையிற்கொடு '' என்று வண்டியிலேற்றி ஓரோலையையுங் கொடுத்து, புதுத் துணிமூட்டையையும் அவன் பக்கத்திலே வைத்து அனுப்பிவிட்டான்.

குணலாபன் தன்னூர் வந்துசேர்ந்தான். சுகுணமஞ்சரி முதலானவர் கவலை நீங்கினர். தயாளுவின் வீட்டு க்ஷேமமுந் தெரிந்துகொண்டனர்.

சுகுணமஞ்சரி : (ஏகாந்தத்தில் குணலாபனை நோக்கி) '' குணலாப ! நீ செய்துவந்த காரியங்களும், செய்கிற

காரியங்களும் எங்கள் மனம் நடுங்கும்படியே இருக்கின்றன. நீ படிப்பைக் கட்டோடும் விட்டுவிட்டாயே! வீட்டில் உள்ள வேலைக்காரர்களை விசாரிக்கவும், பயிர்த்தொழிலை நடத்தவுமாவது பழகிக் கற்றுக்கொள்ளக் கூடாதா அப்பா? என்று கேட்டாள்.

குணலாபன் :—"அம்மா! எனக்கும் படிப்புக்கும் வெகுதூரம்; அந்தப்பேச்சை யினி யெடாதேயுங்கள்; வேண்டுமாஞல், எங்கள் சிற்றப்பனிடம் போய் எழுதவும், கணக்குப் பார்க்கவுங் கற்றுக்கொள்ளுகிறேன்" என்ருன்.

சுகுணமஞ்சரி :—"சரி, உன் தகப்பனுரிடஞ் சொல்லிக் கேட்டுக்கொள்" என்ருள்.

குணலாபன் :—"அம்மா! அவருக்கு என்மேல் கோபமிருக்கும்; நீதான் கேட்டு என்னை அனுப்பு." என்ருன்.

சுகுணமஞ்சரி :—"குணலாப! பெற்ற மனம் பித்து, பிள்ளை மனங் கல்லு என்பது நிஜமாயிருக்கிறது. உன் வயதுப் பிள்ளைகள் எத்தனைபேர் இந்தவூரிலே தங்கள் வீட்டுக் காரியங்களை மிக்க ஜாக்கிரதையோடும் அறிவோடும் நடத்திவருகிருர்கள்? இந்த வயதிலே, ஒருபடி நெல்லாவது, ஒருபிடி காசாவது கொண்டுவந்து வீட்டிற்குப் போட்டிராத நீ, இவ்வளவு ரோஷமும், கோபமும், துணிவும், பகையுங் கொள்ளலாமா? அதிருக்கட்டும். நானுர்? அவரார்? சுமதி யார்? நீ சொல்லாமல் ஓடிப்போனது இந்த வூரெங்குந் தெரியுமே! நம்முடைய வீட்டில் யாரோ இறந்துபோனதுபோல் எத்தனையோபேர்கள் வந்து விசாரித்தார்களே! உன் தோழர்களும் உன்னைத் தேடிக்கொண்டுவந்து வந்து, எங்கள் கண்ணையுங் கருத்தையும் புண்ணுக்கினுர்களே! இந்த வூரிலே நீ நல்லவனுகமாட்டாய்! உன் தோழர் உன்னை நல்லவனுக வொட்டார்கள். ஆகை

யால், உன் சிற்றப்பனிடம் போய், ஆறுமாதம் இருந்து விட்டுவா. நீ, நிர்நிமித்தமாய்க் கோபங்கொண்டு, சொல் லாமலே, ஓடிப்போய்விட்டாயே! உன்னைத்தேட யாராவது வந்தார்களா? இல்லை. நீ நல்லவன் ஆகமாட்டாயென்பது உன் தசப்பனுருக்கும், எனக்கும் நன்றாய்த் தெரிந்து விட்டது. நீ கெட்டவனுகிறது உன் தப்பல்ல; எங்கள் மந்தபாக்கியமே என்று எண்ணியிருக்கிறோம்" என்று சொல்லிக் கண்ணீர் சொரிந்தாள்.

குணலாபன் :—"அம்மா! நீ யழாதே; அழாதே அம் மா! நான் புத்திகெட்டுக் கோபத்தால் ஓடிப்போனேன்; இனிமேல் நீங்கள் சொல்லுகிறபடியே நடக்கிறேன். என் தகப்பனுருக்குச் சொல்லு; அவர் கோபந் தணியும்படி செய்" யென்று மனமுருகி, மனமிளகக் கேட்டான்.

சுகுணமஞ்சரி :—"குணலாப! மாமன் வீட்டுக்குப் போயிருந்தையே! மாமன் மகள் எவ்வளவு படித்திருக்கி ருள் பார்த்தையா? நீ படியாமூடனுைதுடன், துஷ்டனு மாகிவிட்டால், எங்களுக்கு விஷம் வேறே வேண்டுமோ?" என்றாள்.

குணலாபன் :—"அம்மா! கொட்டியபாலின்முன் குந் தியழுதா லாவதென்ன? போனதுபோயிற்று: எனக்குப் படிப்பில்லை: நமக்கு வேண்டிய கணக்கைப்பார்க்கவும், ஓலையெழுதவும் நன்றாய்க் கற்றுக்கொண்டபிறகு இங்கே வருகிறேன். நான் இங்கு வந்த செய்தியை என் சிநேதர் அறிந்தால், என்னிடம்வந்து என் மனத்தைக் கலக்கிவிடு வார்கள். அதற்குள்ளேயே என் தகப்பனுருடன் சொல்லி, ஸ்கூலுக்கு என்னை அனுப்பிவிடுங்கள் அம்மா!" என்றான்.

சுகுணமஞ்சரி :—"இங்கே யிரு! அவரைக்கேட்கி றேன். அவர் என்ன சொல்லுகிருரோ பார்க்கிறேன்"

என்று குணலாபனுக்குக் கூறிவிட்டுத் தன் பதியினிடஞ் சென்று, மிக்க வணக்கத்துடன் நயமாய்ப்பேசி, அவனும் "நல்லது" என்று கொள்ளும்படிசெய்து, குணலாபனை ஸ்கூலுக்கு அனுப்பவேண்டிய ஏற்பாடுகள் உடனே செய்வித்தனள். அவர்களிடம் ஈடாகவைத்துப் பலர் கடன் வாங்கியிருந்த நகைகளில் ஒருஜதை தங்கக் காப்பும், வைரக்கடுக்கனும், தங்கவரைநாணும் முழுகிப்போயிருந்தன. இவைகளையெடுத்துக் குணலாபனுக்குப் போட்டார்கள். பல துணிகளும், சட்டைகளும் வாங்கிக்கொடுத்தார்கள்; சவாரிவண்டியில் ஏற்றினார்கள்; ஓரோலையையுங் கொடுத்தார்கள்; பத்திரமாய்ப்போய், நல்லபிள்ளையாயிருந்து நல்ல பேரோடு வா; அவர் முகங்கோணும்படி நடவாதே" என்று கூறி, வழிவிட்டார்கள்.

குணலாபன்: "ஐயோ! நம்முடைய தாயார் எவ்வளவு நல்லவள்! நம்முடைய தகப்பனார் எவ்வளவு நல்லவர்! நம்முடைய அண்ணன் சுமதி எவ்வளவு நல்லவன்! நான் அவர்கள் மனதைப் புண்ணாகச்செய்தேனே! இனியொரு தப்புஞ் செய்யாமல் என் சிற்றப்பனிடம் ஆறுமாசமிருந்து, வேண்டிய எழுத்துங் கணக்குங் கற்றுக்கொண்டு, நல்லவனாகி வந்தாலொழிய நான் மனிதனல்ல" என்று எண்ணிக்கொண்டே போனான். ஸ்கூலிற் போய்ச்சேர்ந்து, சிற்றப்பனுடன் இருந்து, நல்லவனாகவும், எண்ணும், எழுத்துங் கற்றுக்கொள்ளவும் முயன்ற குணலாபன் முதன் மாதமுழுதுஞ்சிற்றப்பன் சொன்ன சொல்லைச் சிரத்தின்மேல் தாங்கி, அடங்கி நடந்துவந்தான். அதைக்கண்ட அச்சிற்றப்பன், குணலாபனைத் தன் கணக்கர்களுடன் தாராளமாய்ப் பழகவிட்டுவிட்டான்.

அவர்கள் குணலாபனுக்குக் கணக்கின் வழிகளை யெல்லாங் காட்டிக்கொடுத்தார்கள். சட்டம் வைத்துக் கொடுத்துக்கொடுத்து, எழுதச்செய்து கையெழுத்தை யுஞ் சரியாக்கினார்கள். இதற்குள், நான்கு மாதங்கள் ஓடிப்போயின.

கணக்கர்களுள் ஒருவன் புத்திரன், குணலாபனுக்கு நண்பனானான். இவ்வாலிபனும் பெற்றோர் வழிநெறிய வா மூர் துஷ்டன். இவன், குணலாபனைப் பக்கத்துக் கிராமங் களிற் கொண்டுபோய்ப் போய், வாய்ப்பாட்டுக் கேட்க வும், வீணை கேட்கவும், ஆட்டக்கச்சேரி பார்க்கவும், அபி நயம் பார்க்கவுஞ் செய்து செய்து, எரிகிற நெருப்புக் குப் பெருங்காற்றுஞ் சேர்ந்ததுபோல், குணலாபனுக்கு வேசையர் நேசமு முண்டாக்கிவிட்டனன்.

குணலாபன், சிற்றப்பனை யெதிர்த்துப் பேசவும், பல பொய்கள் சொல்லவும், சொல்லாமலே பக்கத்தூர்க ளுக்குப்போய் மனம்போனபடி யெல்லாம் ஆடிப்பாடிக் குடித்து வெறித்துக் குணங்கெட்டுத் திரும்பி வரவுந் துணி வுற்றவ னாயினன். ஒரு வாரத்திற்குள்ளேயே, குணலா பன் இடையிலிருந்த தங்கவரைநாண், பூவும், காயும், பழ மும், மிட்டாயும், புடவையும், ரவிக்கையுமாய்ப் பறந்து போய்விட்டது. அஃது, உடைக்கு உள்ளிருந்த வணியா தலால், அது போனது எவருக்குந்தெரியாது. மறுவாரத் தில் கடுக்கனைக் கழற்றி விற்பித்துப் பணமாக்கிக்கொண்டு தன்னிஷ்டம்போற் பின்னும் ஆடிக் கேடுறுவானானன்.

சிற்றப்பன், குணலாபன் வழிகள் முற்றுங் கெட்ட மையறிந்து, வியசனமுற்று, அண்ணனுக்கு யாவுந்தெரிய ப்படுத்தி, "என்னசெய்யக் கட்டளையிடுகிறீர்கள் ?" என்று

கேட்டிருந்தான். தன்னப்பனுக்குத் தன் சிற்றப்பன் கடி தமெழுதி ஆள்வசமனுப்பியதை யுணர்ந்த குணலாபன், தான் போயிருந்த பக்கத்தூரிலிருந்து வீட்டுக்கு வாராமலே, கைக்காப்புக்களையும் விற்பித்துப் பணமாக்கிக்கொண்டு, "வேசை நேசம் விளைப்பது நாசம்" என்பதை நினையாதவனாகி, லதாங்கியென்னும் பொதுமகளைத் தான் வதுவையிற் கொண்ட புனித மனைவியா யெண்ணி, யன்பு பாராட்டிக் கொண்டு, அவளோடும் ராஜபவனம் போய்ச்சேர்ந்து, தன் நேசருதவியால் வீடுமுதலிய அமர்த்திக்கொண்டு, பார்க்குந் தனபாலனுக்குஞ் சுசரிதைக்கும் அவர்கள் வீட்டாருக்கும் பசுப்போல விருந்து, மிக்க மரியாதையோடும் இரண்டொருவேளையே அவர்கள் வீட்டில் இருந்து விருந்துண்டுவிட்டுத் தன் நண்பர்களோடும் அவப்பொழுதே போக்கிவந்தனன்.

காப்பைவிற்ற பணமுங் கரைந்துபோயிற்று. பணக் கவலை மண்டையை யிடித்தது. தலைவலிக்கிறதே! காய்ச்சலடிக்கிறதே! என்று தமக்கையின் வீடுபோய்ச்சேர்ந்தான். தனபாலன், தக்க வைத்தியனைக்கொண்டு மருந்து கொடுப்பித்தான். இரண்டுநாளாகுமுன்னரே நோயுந்தீர்ந்தது. வீட்டின் உளவுங் குணலாபனுக்குத் தெரிந்தது. தமக்கையின் நகைப்பெட்டியிலிருந்து பல வணிகளைத் திருடிக்கொண்டான். அவ்வூரில் நகைக்காரர்வீதியில் கொண்டுபோய், தன் தகப்பனாரிடம் வட்டிக்குவைத்து முழுகிப்போயினவென்றும், அவர் விற்றுக்கொண்டு வரச்சொன்னாரென்றுஞ் சொல்லி, விற்றுப் பணமாக்கிக்கொண்டு, தனபாலன் வீட்டிற்கு வந்திருந்தபோது தான் கண்டுபேசிய ஜவுளி வர்த்தகனிடம்போய், தன் தகப்பன் பேரையும், தனபாலன் பேரையுஞ்சொல்லி விலையுயர்ந்த பல வேஷ்டிகளும்

புடவைகளும் கடனாக வாங்கிக்கொண்டு, ராஜபவனத்தை விட்டுத் தன்னூரே வந்து சேர்ந்தான். இப்பொழுது குணலாபன் கெட்டது எவ்வளவென்றால், பூனை புலியானது என்னலாம்.

சுசரிதை, தன்னணிகளிற் பல காணாமையைக்கண்டு, கண்ணீர் பெருக்கிக்கொண்டே தனபாலனுக்கு அறிவித்தாள். அந்நேரத்திலேயே குணலாபனுக்கு ஜவுளிகள் கடன் கொடுத்தவர்களும் வந்தார்கள். மறு நிமிஷத்தில், குணலாபன் நகைகள் விற்ற செய்தியும் வந்தெட்டியது. குணலாபன் வந்திருந்த விதமுமே வெளியாகிவிட்டது. அவர்கள் என்ன செய்வார்கள்? வாயை மூடிக்கொண்டிருந்தார்கள். சாலினிக்குப்போய் உன் தகப்பனிடம் நடந்ததை யெல்லாஞ் சொல்லுவோம்; அவர் நம்மை யெப்படிவிட்டாலுஞ் சரி யென்றான் தனபாலன். அப்படியே, சுசரிதையும், தனபாலனும், தங்கள் குழந்தைகளோடும் புறப்பட்டுச் சுசீலனிடம் வந்து சேர்ந்தார்கள்.

இதற்குள்ளேயே பிணமுள்ளவிடத்துக் கழுகுவந்து சேர்வதுபோல், கெடுவாரைக் கெடுத்து வயிறுவளர்க்குங் குடியர்முதலிய குடிகேடர்களாகிய வௌவால்களுக்குக் குணலாபன் தீங்கனிதாங்கிய பெரு மரம்போலிருந்தான். துர்மதிகள் பலகூறிக்கொடுத்திருந்தார்கள். தலைக்குமேல் வருகிறதாயிருந்தால், தகப்பனுடன் போரிட்டுப் பங்கைப்பெற்று எல்லாக்கடன்களையுந் தீர்க்கிறது; தமக்கையின் நகைகளுக்கும் வழிசெய்துவிடுகிறது என்றுந் தைரியஞ்சொல்லி வந்தார்கள். குணலாபன் சாலினிக்குவந்து மூன்று நாட்களாயின. அவன், தன் தாய்தந்தையரிடம் போகவில்லை; லதாங்கியோடேயிருந்துவிட்டான். குணலாபனது காரியங்களை எல்லாம்

மகாமகோபாத்தியாய

ராஜ பவனத்திலிருந்து வந்த தனபாலனால் முற்றுந் தெரிந்துகொண்டான் சுசீலன். யாதுசெய்வான்? "என்னருமை மகளே! உன்னகைகளுக்குப் பதில்செய்து கொடுக்கிறேன்; நீ வியசனப்படாதே" என்றனன்.

சுசரிதை :—"அப்பா! நகைக்கு நகை கொடுக்கிறீர்கள். ஊரவர் நகைக்கு என்ன செய்வீர்கள்? குணலாபன் கதியென்ன? ஐயோ! நமக்கு என்ன தலைபிறக்கம்! என்ன தலைபிறக்கம்! என்று கண்ணீருகுத்தாள்.

சுகுணமஞ்சரி :—"இந்த ஊரிலே எங்கேயோ வந்திருக்கிறானாமே! கூப்பிட்டுக் கேட்போமா?" என்றாள்.

சுசீலன் :—"பைத்தியக்காரி! கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமோ? அவன் குணமெனக்குத் தெரியுமே! இன்னும் நம்பேரும் பொருளுங் கெடாதபடி ஜாக்ரதைப் படவேண்டும். ஒருவருமே ஒருகாசும், புதுநூலும் கடன் கொடாதபடி எங்குந் தெரிவித்துவிடுகிறேன்" என்றான்.

குணலாபனுக்குத் தன் தகப்பன் வீட்டிற்கு வர முகமில்லாமற் போயிற்று. தானுப்போக வஞ்சினான்; வெட்கப்பட்டான். "காப்புக்கள் எங்கே? கடுக்கன்கள் எங்கே? அரைநாண் எங்கே? என்று என் தகப்பன் கேட்டால் என்ன சொல்லுகிறது?" என்று நடுங்கினான். அவன் நண்பர்களில் ஒருவன், "உன் சிநேகிதர்களுக்கு நீ இரவல் கொடுத்திருப்பதாய்ச் சொல்லு. அவர்கள் கல்யாணங்கள் முடிந்தபின் வாங்கிக்கொண்டுவந்து காட்டுவதாய்ச் சொல்லு" என்றான். மற்றொருவன், "இது மூடத்தனம், இப்படிச் சொல்லவே கூடாது. உன் நண்பர்களுடைய கல்யாணங்கள் எந்த ஊர்களிலே நடக்கப்போகின்றன? ஏமபுரத்திலா? எனக்குத் தெரியாதவர் பிள்ளைகளார்? அவர்களிடமிருந்து ரசீது எழுதி வாங்கிக்கொண்டுவா

என்றாலால் என்ன சொல்லுகிறது? பொய்சொன்ன லும் பொருந்தச்சொல்லவேண்டும். எளிதில் அகப்பட டுக்கொள்ளக்கூடாது" என்றான்.

குணலாபன்:—"என்மேலிருந்த அணிகளைக்குறித்து எனக்கு அத்தனை பயமும் இல்லை; வியசனமும் இல்லை; என் தமக்கையின் நகைகளிற் சில கொண்டுவந்து ஒரு பா தியை லதாங்கிக்குக் கொடுத்தோம். ஒரு பாதியை ஒன்று பாதியாய் விற்று எண்ணூறு வராகன் வாங்கிக்கொண் டோமே! அதுதான் என் வயிற்றில் குதிரைக் குட்டியாய் உதைக்கிறது. இதற்கென்ன செய்கிறது?" என்றான்.

இவைகளெல்லாங் கேட்டிருந்த லதாங்கி குணலாப னைத் தனித்த வறைக்குக் கொண்டுபோய், "நீங்கள் என்ன இப்படி அஞ்சி யலறுகிறீர்களே! உங்களுக்கு நல்ல யோசனைகள் தோன்றவும் இல்லை; சொல்லுகிறவர்களும் நன்றாய் யோசித்து, நம்முடைய நட்புக்கெடாதபடி சொ ல்லவுமில்லை. நான் தங்களோடிருந்தால், உமது பிதா "இந்த முண்டையாலேதான் இத்தனையும் வந்தது" என்று கொண்ட கோபந்தணியாமல் கொடுத்தவைகளில் எப்படியாவது, பாதியாவது கொண்டுவாவென்று பிடிவாத மாய் நிற்பார். ஆகையால் கொஞ்சக்காலம் நான் தங்களை விட்டுப்பிரிந்து தனியே கிடந்து புலம்பத்தான் வேண் டும். எல்லாஞ் சரியாகிவிட்டுத் தாங்களும் முன்போல் உற்சாகமாயிருக்கும்போது, இங்கேயல்லவென்று எங்கே கூப்பிட்டாலும், தங்கள் நிழல்போல் வருகிறேன். நான் பெண்ணே தைரியமாய்த் தங்களைவிட்டுச் சிறிதுகாலம் பிரி ந்திருக்கத் துணிகிறதைக்கண்டு, நீங்கள் தைரியங்கொள் ளவேண்டாமா? என்னை இவ்வூரைவிட்டு இங்கொடியிலே

பிரயாணப்படுத்தி, என்னூரில் சேர்த்துவிடுங்கள். இரண்டாவது, தங்களுடைய பிராண நண்பர்களுக்குஞ் சொல்லாமல், இரண்டாம் பேரறியாமல், தங்கள் பிதாவுக்கு ஒரு திருமுகம் எழுதியனுப்புங்கள் : அதில், நான் சொல்லுகிற படி எழுதுங்கள்'' என்றாள்.

குணலாபன் :—''சொல்லு லதா!'' என்றான். அவள் :—

''அன்புள்ள பிதா அவர்கட்குக் குணங்கெட்ட குணலாபன் மிக்க வணக்கத்துடன் செய்துகொள்ளும் விஞ்ஞாபனம்: நான் சாலினியை விட்டு ஸுஜலைக்குப் போனபோது என் மனம், இரும்பு பொன்னானதுபோல் மாறியிருந்தது. என் சிற்றப்பனார் என்னைத் தமது கண்போல் வைத்துக் காத்துவந்தார். என் சிற்றன்னையும், அன்னையிலும் ஐம்பதுமடங்கு அன்பாய் உபசரித்தார்கள். சீக்கிரத்திலேயே கணக்கிலும், கையெழுத்திலும் வல்லவனானேன். அதைக்கண்டு, என்னிடத்தில் நம்பிக்கை கொண்டு என்னைக் கணக்கருடன் கூட்டிக் கிராமக்கணக்கு முதலியவைகளுங் கற்றுக்கொள்ள விட்டார். அதனாற் பல கிராமங்களுக்குப் போனேன். ஒவ்வோரூரிலும், நான் இன்னார் புத்திரன் என்று தெரிந்துகொண்ட குருக்கள், அர்ச்சகா முதலானவர்கள் மிக்க மரியாதை செய்தார்கள். போனவிடங்களில், நான் தங்களுடைய மகன் என்பதற்கேற்கக் கொஞ்சந் தானதருமங்கள் செய்யவேண்டி யிருந்தது. ஒருவரையுங் கடன் கேட்க மனந்துணியாமல், என் அரைநாணை விற்றுச் செலவு செய்தேன். அந்தப் பணமாகிறதற்குள் என் பேருந் தரும குணமும் பரவிவிட்டன. பலர், பலபடி புகழ்ந்தார்கள். பாட்டு, ஆட்டம் முதலிய நடந்தவிடங்களில் என்னையே ஸபாநாயகனாய் வைத்தனர்.

என்வடிவமும், இளமையும் என்னை முழுமூடனாக்கின. வேசையர்கள் வலையில் விழுந்துவிட்டேன். பொருளுக்கு வாடினேன். உடன்மேலிருந்த பொன்னை விற்றுப்பொருள் ஆக்கினேன். திருடியுந்தேடினேன். பொய் சொல்லியுந் தேடினேன். என்னை இந்த முறையும் மன்னித்து, என் கடன் முதலானவைகளால் கெடுதியும், தலையிறக்கமும் வராதபடி என்னைக் காப்பாற்ற மிக்க வணக்கத்தோடும் வேண்டிக்கொள்ளுகிறேன். இது சமயங் கைவிட்டால், என்னையுயிரோடு பார்க்க மாட்டீர்கள். நிஜம்! நிஜம்!'' என்று சொல்லி முடித்தாள்.

குணலாபனும், எழுத்துப் பிழைகள் இல்லாமல், முத்துமுத்தாய் எழுதி முடித்தான். லதாங்கி வாங்கிப் படித்துப்பார்த்துவிட்டு, ''இதை நான் போனபிறகு, நாளைக்காலையில் அனுப்புங்கள்'' என்றாள்.

குணலாபன் :—''லதாங்கி! இதை யனுப்பினதினாலேயே என் தகப்பனார் கோபமாறிவிடுமா? நான் நினைக்கவில்லை; வருவது வரட்டும், நீ போகாதே லதா!'' என்றான்.

லதாங்கி : ''உங்களுக்கு என்ன பைத்தியம் பிடித்துவிட்டதா? அல்லது குடிவெறி மாறவில்லையா? ஹிதாஹிதங்கூடத் தெரியவில்லையே! உங்களுக்குக் கோபம்வந்தாலும் வரட்டும்; நானிங்கே ஒருநொடி நின்றாலும் என் துணிமணிகளுக்கும் உயிருக்கும் ஆபத்து நேரிடும். உயிரிருந்தால் உங்களைப்போல் ஒன்பதினாயிரம்பேரிடஞ் சம்பாதித்துக்கொள்வேன். உங்கள் நகைகளும் எனக்குவேண்டாம்; உங்கள் புடவைகளும் எனக்குவேண்டாம். உங்கள் தகப்பனாரிடமிருந்து யார்வந்தாலும், என்னைத்தான் அடித்து, உதைத்து அவமானப்படுத்துவர். ''புதுவெள்ளம் வந்து பழைய வெள்ளத்தையுங் கொண்டுபோயிற்று'' என்

கிறபடி, என் நகைகளையும், புடவைகளையுமே கொண்டு போய்விடுவார்கள். இப்படியெல்லாம் உம்முடைய சிநேகத்தால் நேரிடுமென்று என் தாயார் முட்டிக்கொண்டாள். என் கெட்டகாலத்திற்கு உம்முடைய அழகுக்கே ஆசை வைத்தேன். கோபித்துக்கொண்டு போய்விடவும் மனந் துணியாமல் துடிக்கிறேன். எனக்குப் பயமாயுமிருக்கிறது. நானிங்கே இனியிருக்கவேமாட்டேன். முன்னே என்னை யனுப்பிவிடுங்கள். அப்போது, எஜமானன்போல் பேசினீர்கள்; இப்போது திருடன்போல நடுங்குகிறீர்களே!'' றுள்.

குணலாபன்:—'' லதாங்கி! நீ கோபங்கொள்ளாதே! இதோ அனுப்பிவிடுகிறேன் '' என்று வாடகைவண்டி கொண்டுவரச்செய்து, அதில், அவளையும், இரண்டு நண்பர்களையும் ஏற்றி, அவளுக்குக் கொடுத்த எல்லாவற்றோடும் அனுப்பிவிட்டான்.

லதாங்கி:—'' தங்கமானவன் குணலாபன்; இன்னும் இரண்டுமாதம் இந்த அநர்த்தங்கள் முளைக்காதிருந்திருந்தால், பத்தாயிரமட்டுங் கொடுத்திருப்பான்'' என்று எண்ணி யெண்ணிப் பெருமூச்சு விட்டுக்கொண்டே, தன்னுடலைத் தன்னூர் கொண்டுபோய்ச் சேர்த்தாள்.

லதாங்கியின் தாய், குணலாபனது நண்பர் வாயால் நடந்த யாவும் அறிந்துகொண்டு '' லதாங்கி! உனக்கு அழகின் பெருமையே தவிர, அணுவளவும் அறிவு கிடையாது. உனக்கு நான் என்ன சொன்னேன்? '' அப்பனுக்தாளுக்கு அடங்கியிருக்கிற வாலிபர்களை நம்முடைய தெரு வேறவொட்டாதே'' என்று சொல்லி யிருக்கவில்லையா? குணலாபன் தகப்பன் பேரைக்கேட்டு என் மனம் ஒரு பக்கம் புலம்புகிறது; ஒரு பக்கம் அஞ்சி நடுங்குகிறது. என் மகளாகிய உன்னாலே அவர் மகன் கெட்டுப்போனன்

என்று அவர் தெரிந்துகொண்டால், நமக்குப் பெரிய பொல்லாங்கு நேரிடும். உயிர்காணமாட்டோமே! குண லாபன் சிற்றப்பன் அல்லவா பின்னும் பத்தொன்பது ஊர்களுக்கும் நம்மூருக்கும் மணியம் பார்க்கின்றவர். அவர் அறிந்த திருடர்களில்லையா? போனது போகட்டும்; நீ தேடிவந்ததையெல்லாம் இப்படிக்கொடு. அவரிடமே யனுப்புவோம்" என்றாள்.

லதாங்கி:—(வியசனத்தோடும்) "ஏனம்மா? நாம் கணிகைகள் என்பதை அவர் அறியாரா?" என்றாள்.

தாய்:—"அறிந்துதான் இருப்பார். திருடின நகைக ளென்று வழக்கெடுத்து நம்மை ஒழிப்பார்" என்றாள்.

லதாங்கி:—"அந்த வழியிலே வந்தால், அவர் மகனுக் குந் தானே கெடுதி; எனக்கு மாத்திரமோ?" என்றாள்.

தாய்:-"சீ! புத்திகெட்ட பெண்ணே! உனக்குக் கொ ஞ்சமாவது நல்ல வழிதெரியவில்லையே! நான் தலைமேலே துணி போட்டுக்கொண்டு எங்கேயாகிலும் ஓடித்தான் போகவேண்டும். நீ என் தலைக்கு உலைவைத்துவிட்டாய்" என்றாள்.

லதாங்கி:—"அம்மா! என்னாலே இப்படியெல்லாம் நீங்கள் வருத்தப்படவேண்டாம். சொன்னபடி நடக் கிறேன்" என்று சில நகைகளும் ஈராயிரம் ரூபாயும் எடுத்து வைத்தாள்.

தாய்:—"மகளே! இதை யிப்போது சுசீலனிடமே யனுப்புகிறேன்; நமக்கு நல்லபேரும் வரும்; நாலு பேருக் கும் நம்பிக்கையும் பிறக்கும். நாலுபங்கு பின்னால் அவர் களிடமே பறிக்கலாம். வியசனப்படாதே" என்று லதாங் கியின் அண்ணனையும், இரண்டு வேலைக்காரர்களையும் கூப் பிட்டு, அவர்கள் செய்யவேண்டியதைச் சொல்லி, கொடு க்க நாடினவைகளைக் கொடுத்தனுப்பிவிட்டாள்.

லதாங்கி :-(வியசனத்தால் வாடி) "முதலைவாய்ப்பட்ட உயிரும், வேசை கைப்பட்ட பொருளும் மீளாது" என்றதை நீ மறந்துபோனாயா அம்மா?" என்றாள்.

தாய் :—"லதாங்கி! கெண்டையைப்போட்டு வராலைப் பிழுக்க எனக்குத்தெரியும். நீ சும்மாவிரு. ஈளு பீளு என்று அழுது வம்பு பண்ணினையோ, எனக்குக் கெட்ட கோபம் வரும்" என்றாள், லதாங்கி, தன் வெட்கமும் துக்கமும் நீங்கிக் குளித்துக் களித்து, உண்டு உடுத்து முன்போலவே யிருப்பாளானாள்.

குணலாபன், தனக்காகவும், தன்னேயர்களுக்காகவும், லதாங்கிக்காகவும் ராஜபவனத்து ஜவுளிக்கடையில் வாங்கிய வேஷ்டி புடவைகளுக்காகத் தரவேண்டிய ரூபாய் மூந்நூற்றறுபது. இத்தொகையில் ஒருகாசும் நிலுவை வைக்காமல், எப்பாடு படுத்தியாவது, எத்தனைநாளிருந்தாவது வாங்கிக்கொண்டே வரக் கட்டளையும், குணலாபனுக்குக் கொடுத்த வோரோலையும் பெற்றுவந்த வொரு தண்டற்காரன் வந்து குணலாபனிருந்த வீட்டைக் கண்டுபிடித்தான்; தெருத்திண்ணையில் உட்கார்ந்தான்.

இச்சமயத்திலேயே, குணலாபனும் அவன் தோழர்களும் வாடகைக்குக் கொண்டிருந்த அவ்வீட்டின் எஜமானனிடமிருந்து வாடகை கேட்கவந்த ஒரு கிழவனும் வந்து சேர்ந்தான். இவன் நல்ல ஒழுக்க முற்றிய வறிஞன். எஜமானனுக்கும், அவன் குடும்பத்தாருக்கும் மிக்க நம்பிக்கையானவன். குணலாபன் விஷயத்திற் பரிதாபம் உள்ளவன். குணலாபனே, மாமனூர்போனநாள் முதற்கொண்டு, லதாங்கி அவளூர்போன நாள்வரையிலுஞ் சேர்ந்த மூன்றுமாத வாடகை ரூபாய் நாற்பத்தைந்து பாக்கியிருந்தான்.

இவ்விருவருந் தெருவிலிருந்தபோதே மூன்றாவனொருவன் வந்து சேர்ந்தான். இவன், சாலினியில் வரும் வழிப் போக்கர்களுக்குச் சுசீலனது பாட்டன் கட்டிய சத்திரத்தில் இருந்து ஜீவனஞ்செய்த சத்திரக்காரர் பேரன். குணலாபனுக்கும், அவன் தோழர்களுக்கும் பல வேளையும், தினங்களும் அன்னமுதலியன செய்துசெய்து எடுத்தனுப்பியதற்காகக் கொடுக்கவேண்டிய பாக்கிரூபாய் இருநூற்றறுபத்தேழிற்கும் விவரங்காட்டி யெழுதிய கணக்குங் கையுமாய் வந்த ஒரு பிராம்மணப் பிரஷ்டன். இவனுக்குப் பின் சம்பளங் கேட்க வண்ணானும், அம்பட்டனும் வந்தார்கள். அவர்களில் எவனும் உள்ளே உள்ள பல எஜமானர்களில் எவனைக் காணவேண்டுமாயினும் உத்தரவுகொண்டே யுட்புகவேண்டும்.

வாடகை கேட்கவந்தவன், காவற்காரனுக்குப் பிரியமாய்ப் பேசி, வீட்டில் பழுதுபார்க்கவேண்டும்; பழுதுபார்க்க வேண்டிய விடத்தைப் பார்க்கிறேன் என்றே உள்ளேபோய்ச் சேர்ந்தான்.

இவனைக் கண்டவுடனே, தூங்குகையில் தட்டி யெழுப்பப்பட்ட புலிபோற் சீற்றத்தோடும், ஒருவன் வந்தான். வந்தவன், அக்கிழவனைக் கண்டு, கோபமடங்கி, "பெரியவரே! குணலாபர் வந்திருக்கிறார்; நீர் வந்து வந்து போனதைச் சொல்லியிருக்கிறேன்; எப்படியாவது உமக்கு ஏதாவது கொடுத்தனுப்புகிறோம்; தயவுசெய்து சாயங்காலம் வாரும்" என்று நயமாய்ச் சொல்லி யனுப்பிவிட்டான்.

அக்கிழவனும், "நல்லது, சாயங்காலந் தப்பாமல் வருகிறேன்; மற்ற நாலைந்துபேர்களுக்கும் என்னசொல்லுவீர்கள்?" என்று சொல்லிக்கொண்டே வெளியே போனான். சாயங்காலம் வர வேண்டுமாம் என்று சொல்லிக்கொண்டே

போய்விட்டான். மற்றவர்களும், "மாலையிலா? நல்லது அப்படியே வருகிறோம்" என்று போய்விட்டனர்.

பூனைகள் போனபின்னர் வெளிப்படும் எலிகளைபோல், உள்ளேயிருந்தவர்கள் எல்லாரும் வந்து, ஒன்றுசேர்ந்து, உட்கார்ந்தனர். இத்தீயோர் சங்கத்தை ஓர் அங்க மென்றால், குணலாபனை அதற்கு வீணாதண்டம் என்னலாம். அவனும் வந்து உட்கார்ந்தான்.

இவர்களில், ஸ்வாமியார் என்னும் பட்டந் தாங்கியவனும், தலையை மழித்துக்கொண் டிருந்தவனும், ருத்திராக்ஷம் பூண்டிருந்தவனும், வைத்தியத்தில் நிபுணன் என்று எண்ணிக்கொண்டிருந்தவனும், பழிபாவங்களைப் பாலுஞ்சோறாய்ப்பாவித்தவனுமாகிய ஒரு வஞ்சகன், "நண்பர்களே! நமது நண்பர் குணலாபர் லதாங்கியம்மாளைப் பிரிந்திருக்கிறாரே! இந்த வாலிபத்திலே ஆசையோடு தேடின பெண்மணியைப் பிரிந்திருக்க, அவருக்கு எவ்வளவோ தீரம் இருக்கவேண்டும்! நான் என்னிளமையில், என் தகப்பன் ஆஸ்தியை எல்லாம் மோஹநாங்கிக்குக் கொடுத்து, அவள் வேறொருவனிடம், களவு நகைகளை வாங்கிக்கொண்ட வழக்கிலே சிறையடைந்த வியவகாரத்திலே வழக்கை நடத்த, வீட்டுக் குடித்தனக்காரர் குழந்தையின் கைக்காப்பைக் கழற்றிவிற்கப்போனவிடத்தில் ராஜபுருஷர்கையி லகப்பட்டுச சிறைச்சாலையடைந்து, அதிலிருந்தானபின் விடுபட்டு வந்தேன் என்பதும், என்னிடத்தில் சில மருந்துமுறைகளும், தைலமுறைகளுமே தவிர வேறொன்றுங் கிடையாதென்பதும், உங்களுக்கு நன்றாகத் தெரியுமே! என்னைத் தேவாரம், க்ருஷ்ணகர்ணாம்ருதம் முதலிய பாடச்சொல்லிக் கேட்டுக்கேட்டு களிப்படையலாமென்றும், ஏதாவது ரோகம்வந்தால், ரகசியத்தில் வைத்தியஞ்

செய்துகொள்ளலா மென்றுமே நீங்கள் வருந்தியழைத்து வந்து வைத்துக்கொண்டீர்கள். குணலாயர் பேரைச் சொல்லிச் சோறுகண்டு சுகமாய் இருந்தேன் : இன்று வந்திருக்கிற பேராபத்துக்களை நினைத்தால், எனக்கு உயிரே போய்விடும் போலிருக்கிறது. இனி யுங்களுக்குப் பாரமாயிருக்க எனக்கிஷ்டமில்லை. உங்கள் விருப்பிற்கு வெறுப்பு உண்டாக்கவும் எனக்கு இஷ்டமில்லை. நீங்கள் எப்படிச் செய்யச் சொல்லுகிறீர்களோ அப்படியே செய்கிறேன்" என்றான்.

குணலாயன், "ஸ்வாமியாரே! நாங்கள் பட்டினிகிடந்தால் நீருங் கிடவும்; எங்களுக்கு ஆகிறது உமக்கும் ஆகட்டும்; நீர் எங்களைவிட்டுப் போகாதேயும். இனிமேலே தான் உம்முடைய வைத்தியத்திறமையை நான் அனுபவிக்கவிட முண்டாகும்" என்றான்.

இரண்டாவனாகிய கூரேசன் என்பவன், "என் நண்பர்களே! நான் இளமையிலேயே தாய் தந்தையரை யிழந்து, எட்டிய வுறவினர்வீட்டில் இடியுண்டு வளர்ந்து, நல்ல சோறுந்துணியுமில்லாமல் அலைந்தலைந்து வருந்தியுந் தமிழிலும், சங்கீதத்திலுஞ் சிறந்த தேர்ச்சிபெற்றுப் பல தாசிகளுக்குச் சங்கீதங் கற்பித்துவருநாளில், உங்கள் நேசம் உண்டானது. குணலாயருக்குச் சங்கீதங் கற்பிக்கவும், திவ்யப்பிரபந்தங்கள் படிக்கவும் உதவுவேன் என்று அழைத்துவந்து வைத்திருந்தீர்கள். ஒரு நாழிகையாவது, மனம் பொருந்தியுட்கார்ந்து நான் பாடவாவது, நீங்கள் கேட்கவாவது சரிப்படாதபடி, மனத்திற்கு இடிமேலிடியாய்ச் சஞ்சலமே வந்துகொண்டிருந்து, இப்போது ஏதேதோ பிரமாதங்கள் வந்திருக்கின்றன. இனி, நான் குணலாயர் கையை எதிர்பார்த்து அவரைப் பரீக்ஷிக்காமல். பெரியபட்டண மெதற்

காவது போய், யாருக்காவது நாலுபேருக்குச் சிக்ஷை சொல்லிக் கொஞ்சக்காலம் பிழைத்துவிட்டுவருகிறேன்" என்றான்.

ஸ்வாமியார்:—"கூரேசரே! நாங்கள் கல்லல்ல; மரமல்ல; மனிதர்கள்; சங்கீதத்தின் ஸாரத்தை யனுபவிக்க மிருகங்களுக்குத் தெரியும், சிசுக்களுக்குத் தெரியும், பாம்பிற்குத் தெரியும் என்று சொல்லியிருக்கிறதே. உம்மைக்கொண்டு ஸதா ஸங்கீதரஸபானம் பண்ணிக்கொண்டிருக்கிற நாங்கள், உம்மைப் பிரிந்தால், உயிரோடிருப்பதே சந்தேகமாகும். நீர் எங்களைவிட்டு, எங்குமே போகாதேயும்" என்றான்.

மூன்றாவன்:—குணலயன் எனும் பேருடையவனும், மகா பலசாலியும், சிலம்பத்தில் தேர்ந்தவனுமாகிய ஒரு வாலிபன். இவன் "குணலாபரே! எனக்குப் பகவான் கொடுத்திருக்கிறதெல்லாம் அரோக த்ருடகாத்திரம் ஒன்றுதான். தங்களுக்குப் பகையாய் எவராது கிளம்பினால் அவர் கைவாய் வலியடங்கப் புடைத்து வசப்படுத்துகிறதற்கு நான் அவசியம் வேண்டும் என்றே யென்னைத்தேடி, நட்புக்கொண்டு, மரியாதையோடும் நடத்திவருகிறீர்கள். இப்போது, நான், உங்கள் சமயத்திற்கு ஒருசெப்புக் காசுமே உதவச் சக்தியற்ற நடைப்பிணமா யிருக்கிறேன். இது எனக்கு மிக்க வியாகுலத்தை விளைக்கின்றது. ஆதலால், நான், சிறிது காலம் எங்கேயாகிலும் போயிருந்துவிட்டு, வேண்டிய சமயத்திற்குவந்து சேருகிறேன்" என்றான்.

குணலாபன்: "குணலயரே! என்கை, தற்சமயத்தில் சிறிது வறண்டிருந்தாலும், உம்மைப்பிரிந்து நாங்கள் இங்கே இருக்க இது சமயமன்று. எத்தனையோபேர்களோடு வழக்காடவும், வாதாடவும், போரிடவும், நம்முடைய காரியங்களை வாய்வலி கைவலி காட்டி யனுகூலப் படுத்திக்கொள்ளவும்

வேண்டிய சமயமிது. இப்போது நீர் எங்களை யொரு க்ஷண முூம் பிரியலாகாது" என்றான்.

குணலயன்:—"அப்படியானால், நான் உங்களைவிட்டு அசைகிறதில்லை" என்றான்.

நாலாவன்:—கிருஷ்ணய்யன் என்னும் பெயருடைய ஒரு பிராம்மணன். இவன், இளமைதொட்டுப் பல வியவகாரங்களைப் பலருக்கு உதவியாய் நின்று நடத்தி நடத்தி நீதிஸ்தலத்திற் போவதிலும், எடுத்த வழக்கை யெவ்வகையினாலாவது இனிது முடிப்பதிலும் பிடிவாதமுள்ளவன். ஒரு முறை, வழிபறிக் கொள்ளைக்காரருக்கு உதவியாய் நின்று அவர்களைக் காக்கப்போய்ப் பொய்ச்சாட்சி சொல்லியதற்காக, ஆறுமாதஞ் சிறையிலிருந்து வந்தவன். தாய், தகப்பன், அண்ணன், அண்ணி முதலானவர்களோடு வழக்காடிப் பங்குபெற்றுத் தீநெறியிற் பொருளை யழிக்குஞ் சிறுமதியோர்க்குப் பெருமதி கூறுவானாய் விளங்கினவன். இவன், "குணலாபரே! உம்முடைய மாமன் தயாளுவினிடம் பொருள் பெற்று வருவதாக எங்களுக்கு வாக்களித்துப் போனீர்: அதற்குமுன் ஒரு வருஷகாலம், நான் ஒருவனே கஷ்டப்பட்டுத் தேடிவந்ததைக் கொண்டு, நாம் அனைவரும், இந்த வீட்டுக்கு வாடகையும், சத்திரக்காரனுக்குப் பணமுங் கொடுத்துக்கொண்டு வந்தோம். நான் காய்ச்சலாய்க் கிடக்கையில் போன நீர், லதாங்கியோடும் வந்து சேர்ந்தீர். நீர் நல்ல வழியிலாவது கெட்ட வழியிலாவது தேடிய பணத்தில் எனக்கு அரைக்காசுங் காட்டவில்லை. உமக்குப் பணமில்லாக்குறை தெரியாதபடி அப்போதைக்கப் போது நான் உதவிவந்தேன்! இவர்களும் மற்றவர்களும் நீர் தேடிச் செலவிடுகிறீர் என்றே எண்ணியிருந்தார்கள். இப்

பொழுது, நீர் செய்திருக்கிற காரியங்கள், மழைக்குக் குடை பிடிப்பவர் இடிக்குக் குடைபிடிக்க முடியாது வருந்துவது போல் என்னை மனமுருக வைக்கிறதே யொழிய, ஏது யோசனையுஞ் செய்யத் துணிவுகொள்ளச் செய்யவில்லையே! நான் என்செய்வேன்?" என்றான்.

குணலாபன் :—அய்யரே! "நீங்கள் சொல்லியது நிஜமே, ஒரணுவும் பொய்யில்லை. இருந்தால் உதவுவீர். உம்மிடம் வஞ்சனையே கிடையாது. இது எனது துஷ்காலம். என்ன வந்தாலும் பட்டுத்தீர்க்கத்தான் வேண்டும்" என்று கண்ணீர் சொரிந்தனன்.

இதன்பிறகு, சத்திரக்காரப் பிராம்மணன் சாப்பாடு எடுத்தனுப்பினான்: எல்லாரும் ஸ்நானம் முதலிய செய்து உடை தரித்து, உண்டெழுந்து, தாம்பூலந்தரிக்கவும் யோசிக்கவும் ஒன்றாய் உட்கார்ந்தனர்.

இங்கிவர்கள் இவ்வாறு இருக்கையில், லதாங்கியின் தாயார், சுசீலனுக்கு அனுப்பிய அணிகளையும், பணத்தையும், ஓலையையுங் கொண்டுவந்தவனாகிய லதாங்கியின் அண்ணன், தான் கொண்டுவந்தவைகளை சுசீலனிடஞ் சேர்த்தனன் அதனால், சுசீலன் சுகுணமஞ்சரி, தனபாலன், சுசரிதை முதலானவர்கள் மனஞ் சிறிது தெளிவடைந்தனர்.

சுசரிதை :—"அப்பா!

'நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றாகும் மாந்தர்க்
கினத்தியல்பதாகு மறிவு'

என்ற வண்ணமே, குணலாபன் கெட்டோரைக்கூடிக் கெட்டோனானே யொழிய, இயற்கையில் இவ்வளவு கெட்டவனல்லன்" என்றாள்.

சுசீலன்:—"சுசரிதை! அவன் நம்முடைய குடும்பத்தில் பிறந்திருக்கத் தகாதவன். அவன் இப்பொழுது, நம்மையெல்லோரையுந் துரும்பாய் நினைத்து, அச்ச மில்லாமல் காப்பு, கடுக்கன், அரைநாண் முதலியவற்றை விற்றுக்குடித்து வெறித்துத் துன்மார்க்க ஞனதையெண்ணியழட்டுமா? உங்களூருக்கு வந்து உன்னணிகளைத் திருடிக்கொண்டுபோய் வேசையர்க்குக் கொடுத்ததையெண்ணியழட்டுமா? ராஜ பவனத்தில் ஜவுளிக்கடையில் உனது புருஷன்பேரையும் என் பேரையுஞ் சொல்லிக் கடன் வாங்கியதற்கழட்டுமா? மானமற்ற துஷ்டர்களும், திருடர்களும், பொய்ச்சாட்சிக்காரருமாகிய பலருடன் கூடிக்குலாவுவதற் கழட்டுமா? என்மனம், நாட்டை விட்டுக் காட்டுக்குப்போக நாடுகின்றதே! நமக்கு அவன் உண்டாக்கிய தலையிறக்கத்தினுல், வீட்டைவிட்டு வெளியே போகவும் எனக்கு முகமில்லையே! அவன் மனங் கல்லோ? மரமோ? என்னும்படி கடினப்பட்டுக் கிடக்கிறதே! இதோ! சுமதியிருக்கவில்லையா? படிப்பில்லாவிட்டால், அடங்கி யொடுங்கி வீட்டோடு கிடந்து நல்ல பிள்ளையா யிருக்க லாகாதா?" என்று பெரு மூச்சோடுங் கண்ணீர் பெருக்கினுன்.

சுசரிதை:—"அப்பா! அவனுக்கு நல்லறிவு கிடையாதென்பது நமக்கெல்லாந் தெரியாததன்று. பூப்பட்ட கண்ணிற் குற்றியும் பொத்தியது போல், துஷ்டர்களும் நண்பரானுர்கள்.

தானுய் இடறிவிழுகிறவனைத் தட்டித்தள்ளச் சிலரும் ஏற்பட்டார்கள். போயிருந்த விடங்களும், முற்றமெல்லாங் கிணறு, வீடெல்லாங் குருடர் என்றபடி எப்படிப்பட்டவரும் கெட்டுப்போவதற்கே யனுகூலமானவை; கெட்டுப்போனுன்: நாமுங் கைவிட்டுவிட்டால் பின்னும் அதோகதியாய்ப்

போவான் : அவனுக்கென்னென்ன நேரிடுமோ ? என்ன கதி யாவானோ? நாமறியோம். இப்போது, பச்சாத்தாபப் படுகிறான். இதோ பாருங்கள் இந்த வோலையை, என்று குணலாபன் அனுப்பிய வோலையைச் சமயமறிந்து கொடுத்தாள்.

சுசீலனும்:—அதை வாங்கிப் படித்துப் பார்த்துவிட்டு, தனபாலனையும், சுமதியையும், சுகுணமஞ்சரியையும் கூப்பிட்டு, "இதைப்பாருங்கள். என் மனங் குழம்பிக்கிடக்கின்றது. இன்னது செய்கிறதென்று எனக்குத் தோன்றவில்லை" என்று அவர்கள் கையில் கொடுத்தான்.

தனபாலன :—குணபாலன் ஓலையைப்படித்துப் பார்த்துவிட்டுக் கலங்கிய கண்ணுங் கண்ணீருமாய், "மாம! மாம! இறுமுயிர்க்கும் ஆயுண் மருந்தோழுக்கல் தீதன்றால், அல்லன போலாவனவுமுண்டு சில" என்கிற வாக்கியத்தைக் கடைப்பிடித்து, அவனைத் திருத்தப் பார்ப்பது நியாயம்" என்றான்.

அந்த வோலையைப் படித்துப்பார்த்த சுமதியும் "ஐயோ ! ஐயோ ! எவ்வளவு கெட்டுப்போனான் ? ஸு-லஜலைக்கு அவனை அனுப்பினதே இத்தனை கேட்டிற்குங் காரணமானது" என்றான்.

சுகுணமஞ்சரி:—"சுமதீ! என்ன பேச்சுப் பேசுகிறாய்? அவனுக்கு இங்கே இருக்கிற சிநேகிதர்கள் எப்படிப்பட்டவர்கள்? அவன் ஸு-லஜலைக்குப் போனபடியால் கெட்டான் என்று சொல்லாதே; உங்கள் சிற்றப்பன்காதில் இது பட்டால் அவர் மனஸ்தாபப்படுவார். பூ-பிஞ்சானது, பிஞ்சு-காயானது, காய்-பழமானது: கெடுமதி முற்றினது கெட்டுப்போனான்" என்றாள்.

தனபாலன் :—"மாம ! இந்தமுறை காப்பாற்றுவோம். இந்தவேளையில் அவன் அழுகிறதைச் சகிக்கமுடியவில்லை" என்றான்.

சுசீலன் :—"சரி! உங்கள் இஷ்டப்படியே செய்யுங்கள்" என்றான்.

தனபாலன்:—"விளக்கு வைத்தபின்பு நான் போய் அவனை யழைத்துவருகிறேன் : அவனைக்கேட்டு, அவன் சந்தர்ப்பங்களை யறிந்துகொண்டு, தக்கபடி செய்வோம்" என்றான்.

சுகுணமஞ்சரி :—"சுசரிதை! எங்கே யுங்கள் தகப்பனார் என்மேல் கோபங் கொள்ளுகிறாரோவென்று நடுங்கிக்கொண்டிருந்தேன். நான்தான் அவனை ஸ்ரீஜலக்கு அனுப்பும்படி அவருக்குச் சொன்னேன்" என்றாள்.

சுசரிதை :—"அம்மா ! நீ நல்லதைத்தான் செய்தாய். நீருக் கஞ்சி யோடியவன் பெரு நெருப்பில் பாய்ந்ததுபோலானது. நாம் என்ன செய்யலாம் ?" என்றாள்.

சுகுணமஞ்சரி :—" சுசரிதை ! இப்பொழுது செய்ய நிச்சயித்தபடியே செய்து, அவனுக்கு வந்திருக்கிற புத்தி எத்தனை நாளிருக்கிறதோ பார்ப்போம்" என்றாள்.

இங்கே இங்ஙனமிருக்கையில், குணலாபனிடம் வீட்டு வாடகையைக் கேட்கத்தண்டற்காரன்வந்தான். அவனைக் காலையிற்கண்ட கிருஷ்ணய்யன், உள்ளே கூட்டிக்கொண்டு போனான்.

கிழவன் :—"குணலாபரே ! நீர் ஏன் இப்படியெல்லாம் அவமானப்படவேண்டும் ? இன்னார் மகன் இன்னபடி கெட்டான் என்றால், கேட்கிறவர்கள் எல்லாரு மழுவர்களே.

'மனத்தால் மறுவிலரே தாஞ் சேர்ந்த
இனத்தா லிகழப்படுவர்' என்றதை

நீர் அறியாமற் கேட்டீரே" என்றான்.

குணலயன்.—"ஏடா! மூடக்கிழவா? எங்களாலே யோ இவர் கெட்டார்?: நாக்கை யுள்ளே வைத்துப் பேசடா: பத்திரம்! பத்திரம்!!" என்றான்.

தண்டற்காரக்கிழவன்.—"புருஷோத்தமர்களே! மூன்று மாதமாய் வீட்டுவாடகை கேட்க நான் வராத நாளில்லையே! நாளைக்கு வருவார், நாளைக்கு வருவார் என்று என் காலை யுடைத்தீர்களே! நீங்கள் கொடுத்திருந்தால் நான் வாங்கிக் கொண்டிருக்கமாட்டேனோ? எரிகிற வீட்டில், பிடுங்கினது லாபமென்று பெரியமனுஷன் வீட்டுப்பிள்ளையை நாசமாக்கி வருகிறீர்களே! உங்களுக்கு வாயொருகேடா?" என்றான்.

இதைக்கேட்டுக் கூரேசன் (கோபங்கொண்டு) "கிழப்பிணமே! எல்லாரைஞ் சேர்த்துத் திட்டுகிறையா? பத்திரம்! நீ உன் வாய்ப்பல்லோடு வீடு போய்ச்சேர வேண்டுமானல், தாறுமாருய்ப் பிதற்றுதே" என்றான்.

கிழவன்:—(தன்னை மறந்த கோபத்தோடு) கூரேசரே! உம்முடைய பிரதாபம் எனக்குத் தெரியுமே! சிறைச்சாலைக் களி இன்னும் உன் பல்லில் ஒட்டியிருக்கிறதே" என்றான்.

கூரேசன்:—எந்தப் பேச்சுக்கு எந்தப் பேச்சு எடுக்கிருய்? கிழட்டுப்பயலே! என்று கிழவன் வாய்மேல் ஓங்கி யறைந்தான்.

கிழவன்:—(வாயிலிருந்து கொட்டிய பல்லிரண்டையும், ரத்தத்தையும் கையிலேந்திக்கொண்டு, நோவினுல் துடித்து,) "ஐயோ! ஐயோ!" என்று அலறிக்கொண்டே தரையில், சாய்ந்தான்.

குணலாபன் :—நடுங்கி "தாதா ! அழாதேயும்; தாதா அழாதேயும்" என்று தன் துணியால் இரத்தத்தைத் துடைத்தான்.

கிருஷ்ணய்யரும் வந்து, "கூரேச ! இந்த அவசரமும், ஆத்திரமும் உனக்கு ஏனோ ? என்றான்.

குணலயன் :—"இந்தக்கிழவனை நையப்புடைக்கத்தான் வேண்டும்; கெட்ட வாய்ப்பதற்றக்காரன்; என்ன திட்டினான் பாருங்கள் :" என்றான்.

கிழவன் :—(குணலயனை உற்றுப்பார்த்தான்.)

குணலயன் :—"என்னடா ! கண்ணாலே யெரித்துவிடப் போகிறையோ என்னை ?" என்று ஒருதை யுதைத்தான்.

குணலாபனும், ஸ்வாமியாரும், கிருஷ்ணய்யரும் :—"ஐயையோ ! இதற்கெல்லாம், இது ஸமயமன்றே !" பணமில்லாதவன் பிணமன்றோ ? எவர் என்ன சொன்னாலும் வாய் செத்துக்கிடக்க வேண்டிய நாம், கைவலியுங் காட்டலாமா ?" என்று உரக்கக் கத்தினார்கள்.

கிழவன் :—(விரைந்தெழுந்து)"நான் உங்களுக்கு ஈடாகேன் ; கிழவன்; என் யஜமானனை யழைத்துவருகிறேன்" என்று புறப்பட்டான்.

கூரேசன் :—(ஓடிப்போய் தெருக்கதவை யடைத்துக்கொண்டு, கதவண்டையே நின்றான்.)

குணலாபன் :—"தாதா ! என் மானத்தைக் காப்பாற்றும். என் பிராணனைக் காப்பாற்றும் ; கொஞ்சம் பொறுத்தருளும்" என்றான்.

வைத்தியம் வல்லவனாகிய ஸ்வாமியார்,ஏதோ பொடியும், கொஞ்சம் வெந்நீரும் கொணர்ந்து, கிழவன் வாயைக் கழுவிப் பொடியைத்தடவினான். இரத்தமும் நின்றது.

குணலயன்:--"குணலாபரே! நாங்கள் உமக்காகத்தான் இவனுக்குப் புத்திசொன்னோம்: எங்களை எத்தனை திட்டினாலுங் கோபங் கொள்ளமாட்டோம்," என்றான்.

குணலாபன்:—"எல்லாம் என் காலவித்தியாசஞ் செய்விக்கிறது. உங்களையாவது, கணக்கன் பிள்ளையையாவது சொல்ல நியாயமேயில்லை" என்று கண்ணீர் பெருக்கினான்.

கிருஷ்ணய்யர்:—"நண்பர்களே! இந்தப் பெரியவர் காலில் விழுந்து மன்னிப்புக் கேளுங்கள்" என்றான்.

குணலயன்முதலானவர்கள் "தாதா! முன் கோபத்தால் மூடர்களானோம்! மன்னித்தருளும்" என்று அவர் காலில் விழுந்தனர்.

கிழவன்:—"கிருஷ்ணய்யரே! இதைக் கேளுங்கள். ஒரு வைராகி குரங்கொன்றை வளர்த்துவந்தான். ஒருநாள் வழி நடந்து களைத்து வழியோரத்திலே ஓராலின் கீழே படுத்துறங்கினான். எங்கிருந்தோ ஒரு ஸர்ப்பம் வந்தது. அதைக் கண்டகுரங்கு பெருங்கல்லொன்றையெடுத்து அதன்மேலே எறிந்து, அதைக் கொன்றுவிட்டுக் குந்தியிருந்தது. வைராகி, விழித்துக்கொண்டபொழுது, தன் குரங்கு செய்த உபகாரத்தை யறிந்து, அதன்பால் அன்றுமுதல் பின்னும் அன்பாயிருந்தான். இருக்கும் நாளில், ஒரு நாள், நடுப்பகலில், காய்ச்சலால் வருந்திக் களைத்துத் துயில்கொண்டான். அப்பொழுது ஓரீ அவன் மூக்கின்மீது மொய்த்தது. இவ்வீயைக் கண்ட குரங்கு, ஒரு பெருங் கல்லையெடுத்து அவன் முகத்தின்மே லெறிந்தது. வைராகி, இப்போது நான் பட்டபாடுபட்டுத் துடித்தான். துடித்துக்கொண்டே, அந்தோ!

"அறிவிலி துணைப்பாடு தனிமை யிற்றுவ்வாது" என்றது மெய்யாயிற்றே என்று புலம்பினன். அவ்வாறே, இவ் வுன் நண்பர்களால் உங்களுக்கு இடுக்கணே வரும்.

'இன்னு செய்தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்'

என்கின்ற திருமொழியினை நான் கைக்கொண்டு உங்களை மன்னித்தேன்; வாடகைப்பணத்திற்கு என்ன வழி? நான் போகவேண்டும்; சாயங்காலம் ஏதாவது தப்பாமல் தருகிறோம் என்றது இதுதானே? பணமேதாவது உண்டோ?" என்று கேட்டான்.

கிருஷ்ணய்யர் :— தன் காதிலிருந்த கெம்புக்கற்கடுக்கனைக் கழற்றிக் கிழவன், கையிற் கொடுத்து, "பெரியவரே! கொண்டுபோம்: நாளன்றைக்குப் பணங்கொடுத்துவிட்டு வாங்கிக் கொள்ளுகிறேன்" என்றான்.

கிழவன் :— "இவன் இப்போது நல்லவன் போலப் பேசி நடித்தாலும், கெட்டவழியே யறிந்தவன். கடுக்கனைக் கொடுத்துக் காராக்கிருகங் கூட்டுவான்" என்று எண்ணிக் கொண்டு, "அய்யரே! நீங்கள் எனக்கு இடுக்கண் செய்தாலும் உங்களை நம்புகிறேன். கடுக்கன் வேண்டாம்; வேண்டாம்" என்றான்.

எல்லாருஞ்சேர்ந்து கிழவனை யொருவண்டியி லேற்றி மருந்துங் கொஞ்சங் கொடுத்து அனுப்பினார்கள்.

அதன்பிறகு, குணலாபன்:— "அய்யரே நீங்கள் இல்லாவிட்டால் அக் கிழவனுக்குச் செய்த கெடுதியினால் பெரிய வருத்தம் உண்டாயிருக்கும்" என்றான்.

ஸ்வாமியார் :— "அதற்குச் சொல்லவும் வேண்டுமா?" என்றான்.

கூரேசன் "அப்படியாகிறதாயிருந்தால், அவன் பிணம் அவனுடைய பெரியவர்கள் போனவிடம் போயிருக்குமே! சும்மா வுயிரோடு விடுவேனோ?" என்றான்.

குணாலாயன் :—"நான் ஒருவனே தூக்கிக்கொண்டுபோ யெறிந்திரேனு?" என்றான்.

கிருஷ்ணய்யன்:—"உங்களுக்கு என்னைவிட அதிகமான சட்டந் தெரியுமோ?" என்றான்.

குணாலயன் .—"முன்னே அடி போட்டுப் பின்னே பேசவேண்டும் என்பது எங்கள் சட்டம்" என்றான்.

குணலாபன் :—"இந்த வீண்பேச்சுக்கள் போதுமே! என் மனத்திலிருக்கிற திகில் உங்களுக்குத் தெரியாது" என்றான்.

இங்ஙனமிருக்கையில், தனபாலன், சுசீலன் வீட்டு வேலைக்காரர் இருவரோடும் இங்குவந்தான்.

குணலாபன் :—குனிந்த தலை நிமிராமலே "அத்தான்! வாருங்கள், நமஸ்காரம் : என் அபசாரங்களை யெல்லாம் க்ஷமித்தருள வேண்டும்" என்று காலில் விழுந்தான்.

மற்றவர்கள்:—(அப்படி யப்படியே மறைய வெவ்வேற றைக்குப் போனார்கள்.)

தனபாலனும், குணலாபனும் பத்துநிமிஷம் பேசினார் கள். குணலாபன், கிருஷ்ணய்யனை நோக்கி, "ஸ்வாமி! வீட்டிற்குப் போய்வருகிறேன்: என் தகப்பனார், கூப்பிடு கிறாராம்; பத்திரமாய் இருங்கள்" என்று போகப்புறப் பட்டான்.

ஸ்வாமியார் :—"உற்றவிடத்தில் என்கிற பாட்டை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு போங்கள்" என்றான்.

குணலாபன் வீடுவந்து, மாதா பிதாக்களைக்கண்டு கண்ணீர் ஆறுய்ப்பெருக்கி விம்மி விம்மி யழுதான். அவர்களும் வியசனப்பட்டார்கள்.

தனபாலன், "எல்லாங் காலகதி: வியசனப்படாதீர்கள்" என்று தேற்றி, "குணலாப! உன் கடன்களெல்லாம் எவ்வளவிருக்கும்? கடனாக வாங்கியுள்ள தெவ்வளவு? மோசம் முதலான குற்றங்களில் அடங்கக்கூடிய தொகைகள் எவ்வளவு?" என்றான்.

குணலாபன்:—"என் அக்காளுக்கு நாங்கள் போட்ட நகைகளை யெடுத்துக்கொண்டேன். இதொரு திருட்டோ? மோசமோ? நீர் சொல்லுமே" என்றான்.

தனபாலன்:—"உன் பேச்சு, சட்டியிலுள்ளது தானே அகப்பையில் வரும் என்பதைக் காட்டுகிறது, மற்றவைகளையுஞ் சொல்லு" என்றான்.

குணலாபன்:—(தானும், தன் நண்பர்களும் பட்டிருந்த கடன்களையெல்லாம், தன் கடன்களென்றே சொன்னான்.)

சுமதி:—எல்லாவற்றையும் விவரமாய் எழுதிக்கொண்டான். "நாளைக்கே இத்தொகைகளையெல்லாம் அடைத்துவிடுவார் உன் தகப்பனார். இனி நீ நடக்கிற விதமென்ன?" என்றான் தனபாலன்.

குணலாபன்.—"இங்கே யிருக்க எனக்கு வெட்கமாயிருக்கிறது. மாமனாரில் கொஞ்சம் நாளிருந்துவிட்டு வருகிறேன்" என்றான்.

முன்னே அங்கேபோயிருந்தாயே அவருன்னை யெவ்வாறுநடத்தினார்? அங்கே போக வுனக்கு விருப்பமுண்டாகிறதா? என்றான் சுமதி.

குணலாபன்: "நான் முழுகிவிட்டுப் பிள்ளையாருக்கு முன்னே ஸத்தியம்பண்ணித் தருகிறேன். இனிமேல் கெட்டவர்களுடன் நான் சேரவே மாட்டேன்; சேர்ந்ததைக் கேட்டால் என்னை நீங்கள் காப்பாற்ற வேண்டாம்," என்று உறுதியாய்க் கூறினான்.

சுசீலன்:—சுமதி! " அவனுக்குப் புரோகித அய்யரைக் கொண்டு ஏதாவது செய்துவிட்டுத்தான், நம்மோடு கூடச் சாப்பிடக் குந்திக்கொள்ளச் சொல்லலாம். எங்கெங்கேயோ தின்றுவிட்டுவந்தான். எதைதையோ தின்றுவிட்டு வந்தான். குடிக்கவுங் கற்றிருக்கிறான்" என்றான்.

சுமதி:—" இப்போது? என்னசெய்கிறது? நாளைக்குக் காலையிலேதான் அவரை வரவழைக்க முடியும் " என்றாள்.

குணலாபன்:—" இராத்திரி முழுதும் நான் பட்டினியே கிடக்கிறதா?" என்றான்

சுசீலன் :—" ஆமாம்! ஒருவேளைப் பட்டினிக்கு நடுங்குகிறையே! உள்ளளவும் பசியோடிருக்க வழி தேடிக்கொண்டாயே! அது தெரியாமற் போனதென்ன ?" என்றான்.

குணலாபன்:— ஒரு பாயையும், தலையணையையும் எடுத்துக்கொண்டுபோய்த் தெருத்திண்ணையில் போட்டுப் படுத்துக்கொண்டான்.

அவ்வூரில், வேறொரு வீதியில் இருந்த அவன் நண்பரில் கூரேசன், "இலவு காத்த கிளியானேமே" என்றான்.

கிருஷ்ணய்யன் :—"நீ அப்படி அதைரியப் படவேண்டாம். என்னாலான மட்டும் பார்க்கிறேன்" என்றான்.

கூரேசன் :—"லதாங்கியைக் கொண்டுவருவோமா?" என்றான்.

கிருஷ்ணய்யன் :—"லதாங்கி இனி வரமாட்டாளே! அவள் தாயார் மேலான குணமுடையவள். தப்பி வேசைகளில் பிறந்தவள், அவள் அவளை யனுப்பமாட்டாள்" என்றான்.

ஸ்வாமியார் :—"அப்படியானல், நாம் நம்முடைய வழிகளைத் தேடிக்கொண்டு போவோம்" என்றான்.

கிருஷ்ணய்யனும், காவற்காரனும் நின்றார்கள். மற்றவர்கள் தங்கள் துணிகளைக் கட்டிச் சுருட்டிக்கொண்டு எங்கெங்கோ போய்விட்டார்கள்.

குணலாபன் பட்டிருந்த கடன்கள் யாவும் அடைபட்டன. அவன் கவலையின்றிச் சுகமாய் இருந்தான். வீட்டிலேயே வைத்து ஜாக்கிரதையோடுங் காத்துவந்தார்கள். மூன்று மாதங்களாயின.

ஒருநாள் பிச்சை கேட்கவந்த வொரு பெருங்கிழவன், ஒட்டைத் தம்புரு ஒன்றை யேந்தியவனாய்ப் பாடிக்கொண்டே வந்தான். இவன் குணலாபனைக் கண்டு,"சீகிட்டணச்சாமிக்கு ஒரு கோபிகா த்திரி செய்ஞ்ச விண்ணப்பம் பாடறேன் கேளுங்க" என்று,

"கண்ணா! மணிவண்ணா! இங்கு நண்ணாய் மறந்தாயோ?"

என்று திருப்பித் திருப்பிப் பாடினான்.

குணலாபன் :—"ஆ, ஆ! அப்படிப்பட்ட தேவாமிசமான ஸ்ரீகிருஷ்ணனே எப்படி யெப்படியோ இருந்தாரே! நம்மைத்தான், பணமிருந்தும் வாலிப லீலைகள் ஆடவொட்டாமல், தடுக்கிறார்கள்" என்று பெரு மூச்செறிந்தான்.

இதுமுதல், அடிக்கடி லலிதாங்கியை எண்ணினன். கண்ணீர் சொரிந்தான். "எவ்வளவு அணிகளும், ஆடைகளும், பணமுங் கொடுத்தேன் நான்! என்னை மறந்திருக்கமாட்டாள். ஒருமுறை போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்." என்று துணிவு செய்துகொண்டான். கிருஷ்ணய்யரோடு கலந்து யோசிக்க நாடி யவனை வருவித்துக் கொண்டு யோசித்தான்.

கிருஷ்ணய்யன்:—"உனக்குக் கூழுக்கும் ஆசை; மீசைக்கும் ஆசை; இதெப்படிச்சரிப்படும்? எல்லா ஆசைகளையும் விட்டொழித்துவிட்டு ஏழைவீட்டுப் பையன் போலிருக்கிறதானல் இரு; இல்லாவிட்டால், ஒரு தாக்ஷிண்யமும் பாராமல் வழக்கெடுத்துப் பணத்தைப் பெற்றுக்கொள்; பொன்னுளார் கண்ணேயாகும் பொருள் பொது மடந்தை யன்றோ? பொருளுளான் கண்ணதே போகம்" என்றான்.

குணலாபன் மனம் மாறிவிட்டது. வீட்டிலிருந்து இருநூறுரூபாய் எடுத்துக்கொண்டு, லதாங்கியின் ஊரை நோக்கிப் போனன்.

அந்த லதாங்கியின் தாயோ, அவனை "நீங்கள் எங்கள் வீட்டில் நுழையக்கூடாது" என்றாள். லதாங்கியை அவன் கண்ணிலுங் காட்டவில்லை. அந்த ரோஷத்தோடும், கிருஷ்ணய்யன் உதவி யோடும், வேறோரூரிலே சேர்ந்து, மஞ்சுளா என்பவள் வீடுபோய்ச் சேர்ந்தான்.

இச்செய்தியை எப்படியோ அறிந்த மற்ற நேயர்களும் வந்துவிட்டார்கள்! கிருஷ்ணய்யன் அநியாயவட்டிக்கு நாலாயிரம்ரூபாய் கடன் வாங்கிக் குணலாபனுக்குக் கொடுத்து உதவினன்.

குணலாபன், போகத் தகாதவழிகளிலே மறுபடியும் புகுந்து கண்மூடி யோடினன்.

சுசீலன் :—குணலாபனைக் காணமையால், "சரி : பவபுரிக் கோவிலில் நடக்கிற திருவிழாவுக்குப் போயிருக்கிறான் போலும். தானே வந்துசேருவான்" என்றெண்ணியிருந்தான்.

சுமதி :—"அப்பா! பணப்பெட்டி திறந்திருக்கிறது! ரூபாயும், இருநூறு குறைகிறதே!" என்று நடுக்கத்தோடுங் கூறினான்.

சுசீலன் :—"அப்படியா?

"உப்பொடு நெயபால் தயிர் காயம் பெய்தடினுங்
கைப்பறு பேயச்சுரையின் காய"

என்றது எங்காவது பொய்யாகுமோ? ஒருபோதுமாகாது : குணலாபன் கொண்டோடிப் போய்விட்டான். இனி யவன் இவ்வீட்டுவழி வரக்கூடாது; காலை முறித்தோட்டிவிடுகிறேன்" என்றான்.

சுகுணமஞ்சரி :—"நாத! அது போன இடத்தைக் கண்டுபிடித்து, அங்கே யேதாவது துணிமணிகள், கடன் வாங்கிவிடாதபடி செய்யவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள்" என்றாள்.

சுசீலன் :—"ஐயோ! நல்லமரத்திற் புல்லுருவி முளைத்ததே! நம்முடைய பேரைக் கெடுக்க விது வந்து முளைத்ததே! மண்ணிற் பிறந்தாரில் மன மறுக்கமில்லாமல் ஒருவருமே இருக்கக்கூடாதோ? நம்முடைய ஹ்ருதயத்திற்கு இருப்புவசிபோல் வந்து பிறந்தனனே! நம்மைப் பாக்கியவந்தர் என்றவர், "தௌர்பாக்கியவந்தர்" என்று கலங்க வேண்டிய வகை செய்துவிட்டானே! பாவீ! குணலாப! நீமாண்டாலும் ஒருநாளைத் துயரோடொழியுமே!" என்றும் இன்னவை வேறு பலவுங் கூறி வியசனப்பட்டுக்கொண் டிருந்தான்.

ஸ்வாமியார், கூரேசன், குணாலயன், கிருஷ்ணய்யன் முதலானவர்களுடைய உதவிகொண்டு, அபத்தியத்தினால் நோய்கள் போல வளர்ந்துகொண்டிருந்த குணலாபனது துஷ்கிரியைகள் அவனைப் பல பேருடைய பகைக்கு ஆளாக்கின. "தன்னூரானை அயலூர்ப் பூனை" யென்றபடி போயிருந்த வேற்றூரில் அடங்கியிருக்க வேண்டியவனாயிருந்தும், அங்ஙன மிராதவனாய்ப் பொதுமகளிர் நட்பினால் கெட்டொழியும் விடர்களுடைய பகைக் காளானான். அவர்களால் ஆதரிக்கப்பட்டிருந்த வேசையர் பலர் பாலும் நேசம்பூண்டு மகிழ்வா னாயினன்.

அதனால், இவனைத் தடுக்க முயன்ற போகபுரத்து விடர்கள் புரிந்த சூழ்ச்சியினால், குணலாபனுக்கு, இருண் மிக்க வோரிரவில் மலஜலாபிஷேகம் நடந்தது. இதனைப் பட்டுக் கொண்டோடித் தன்னிடஞ் சேர்ந்து, இரண்டு மூன்றுநாள் வெளியிலே தலைகாட்டாதிருந்தான். இவ்வறிவும், அச்சமும் நெடுநாட்கள் நிற்கவில்லை; மறுபடியும் ஒடி யுழலத் தொடங்கினான். முழங்கால்கள் முறியும்படி தடியடி கொடுப்பித்தனர் உள்ளூர் விடர்.

குணலாபன் :—உயிரே போகுமோ? உள்ளளவும் நொண்டியாய்க் கிடப்பேனோ? வென்று அஞ்சி யலறுமாறு, நோவும் வீக்கமுங் கொண்டு, ஊணும் உறக்கமும் ஒழிந்து, உள்ள முருகிப் புலம்பிக்கொண் டிருந்தான்.

இந்நிலையில் இருந்த குணலாபனுக்குப் பலவகை யுபசாரங்களுஞ் செய்ய மனங்கொள்ளாத கிருஷ்ணய்யன்முதலானவர்கள், அவனுக்குப் புத்திமதி கூறி, அவனைக் காதலியரைப் பிரிந்து, சாலினிக்குப் போகவுடன்படுத்தி, சவாரிவண்டியுந் திட்டஞ்செய்து, வழிக்கு வேண்டிய உபகரணங்களெல்லாம்

அமைப்பித்து, ஏற்றிச் சீக்கிரத்திலே வருகிறோம்; வியச னப்படாமல் வீடுபோய்ச் சேரும், எல்லாங் குணமாகும்" என்றனுப்பி விட்டனர்.

குணலாபன்:—வீடுவந்து சேர்ந்து, "அண்ணு! வண்டிக் காரனுக்கு ஒரு வராகன் கூலி கொடும், திருவிழாவிற்குப் போயிருந்தவிடத்தில் கோபுரத்திலேறி விழுந்தேன். கால்க ளில் சொல்லமுடியாத காயம்பட்டது: செத்துப்போவேன் என்றே நடுங்கினேன்; உங்கள் அதிருஷ்டத்தால் பிழைத்து வந்தேன். என்னை யிறக்கி யுள்ளே கொண்டுபோய்ச் சேரு மண்ணு!" என்ருன்.

சுமதி:—"இதோ வந்துவிட்டேன்" என்றே உள்ளே யோடிப்போய்த் தகப்பனைக்கண்டு, "அப்பா! குணலா பன் வந்துவிட்டான். பவபுரிக் கோவிலின் கோபுரத்திலி ருந்து விழுந்தானும்: பாவம்! காலிரண்டுந் தூலமாய்வீங்கிக் கிடக்கின்றன. செத்துப்பிழைத்தானும். அவன் ஏறி வந்த வண்டிக்குவாடகை யொருவராகன் கொடுக்கவேண்டுமாம்; கொடுக்கவா?" என்று கேட்டான்.

சுசீலன்:—"தானுந் துன்பப்படுகிருன்; நம்மையுந் துன் பப்படுத்துகிருன்; துரோகி பிழைப்பானு? போவானு?" என் றெழுந்து வந்தான். வண்டிக்காரனைச் சற்றிரப்பா! வருகி ரோம் என்று இருக்கச்சொல்லிவிட்டு, நாலாளைவிட்டுக் குண லாபனை வீட்டினுள்ளே கொண்டுபோய்ச் சேர்ப்பித்தனன்.

போகபுரத்திலிருந்து வந்த வண்டிக்காரன், சுசீலன் வீட்டு வேலைக்காரர்களில் ஒருவனை, நெடு நாளா யறிந் திருந்தவன். ஆகையால், குணலாபனுக்கு நடந்த அபி ஷேகம், போட்ட பூஜை முதலிய எல்லாவற்றையுங் குறித்து விவரமாய்ச் சொல்லிவிட்டுக் கூலியைப் பெற்றுக்கொண்டு தன்னூர் போய்ச் சேர்ந்தான்.

சுசீலனும், குணலாபன் செயல்களையெல்லாம் விவரமாய்ச் சந்தேகமறத் தெரிந்துகொண்டான். அவன் மனநைகத்துப் போனது. குணலாபன் இருந்த பக்கமும் போகானாயினான். பலவிதச் சிகிச்சைகளுஞ் செய்யப்பட்டன. குணலாபன் கால்கள் குணமடைந்தன; வெளியே போகவும் உலாவவுந் தொடங்கினான். கிருஷ்ணய்யன் மூலமாய்க் கடன்கொடுத்திருந்தவனும் வந்துசேர்ந்தான்.

சுசீலன்:—குணலாபனுக்குக் கொடுத்திருந்த பணத்தைக் கேட்கவந்த பணக்காரனை மரியாதையோடும் உபசரித்து "ஐயா! போனவருஷம் இன்ன மாஸம், இன்ன தேதியில், என் மகன் குணலாபனுக்குக் கடன் கொடுக்கிறவர்கள், பணத்தை யிழப்பர் என்று பறையறைவித்தேனே!" என்றான்.

வியவகாரக் கியான நிபுணனாகிய கிருஷ்ணய்யன் எழுதியிருந்த பத்திரத்தை யெடுத்துக் காட்டி, குணலாபனுக்கு வியவகார வயது வரவில்லையோ? என்றான் வந்தவன்.

சுசீலன்:—"வந்தது! வந்தது! எனக் கவசியமில்லை; அந்தத் திருட்டுப் பையனை உம்முடைய பணத்திற்காக ஏதேது செய்வீரோ செய்துகொள்ளும்" என்று விட்டான்.

குணலாபன்:—"என் பங்கிலிருந்து வாங்கித் தருகிறேன்: நீர் வியசனப் படாதேயும்" என்று தைரியஞ் சொன்னான். பணந் தண்டவந்தவன், சத்திரத்தில் சாப்பிட்டுக்கொண்டு, கிருஷ்ணய்யன் வரவை யெதிர்பார்த்திருந்தான்.

கிருஷ்ணய்யனும், மற்றவர்களும வந்துசேர்ந்தார்கள். குணலாபன் "எனக்குள்ள பங்கையெனக்குக் கோடும்" என்று தந்தையுடன் சண்டையிடத் தொடங்கினான். உண்மையிலே பல பட்டினியுங் கிடந்தான். அவன் நண்பர்கள் துணை நின்றார்கள்.

சுசீலன் :—"குணலாபனுக்குரிய நிலம் நீர் முதலான வற்றிற்குரிய விலை யேற்படுத்தி, அவன்பங்கிற்கு இருபதினாயிரம் ரூபாய் வருகிறதென்று சொல்லி, இதுவரையிற் கொடுத்திருந்த தொகைகளையும், வட்டியையுங் கழித்துக்கொண்டு, பதினாறுயிரம் ரூபாய் கொடுத்து, வீட்டைவிட்டுநட; நீ யென் மகன் அல்லை; உன்தாய் வயிற்றில் வந்த மலம் நீ; ஓடிப்போ" வென்று துரத்திவிட்டான்.

குணலயன் முதலானவர் எண்ணம் நிறைவேறியது. குணலாபனிடம் வந்து அழுது தொழுது கெஞ்சி வஞ்சித்துப் பேருக்கு ஐந்நூறுபோல் பெற்றுக்கொண்டு தங்கள் இடம் போய் பத்திரப்படுத்திவிட்டு, அவனிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

குணலாபன் :— பெற்ற பொருளோடு, கையில் ஒரு கொள்ளியும் பெற்ற குரங்கு போல் நெடுந்தூரஞ் சென்று, ஒரு பட்டணத்தில் வசிப்பானுன்.

ஊர் மாறினதினாலேயே குணலாபன் குணம் மாறிவிடுமோ? மாறவில்லை. அவ்வூரோ குணலாபனுடைய குணத்திற்கேற்றவூர். அழகே வடிவான வேசையர் அனைவரும் அங்கே தானிருந்தனர். விளக்கைத் தேடி யோடும் விட்டிலைப் போல் அன்னார் வலையைத் தேடி யோடி விழுந்தனன்: இரவும் பகலும் பலர் அவனுடன் உண்டனர்; உடுத்தனர்; குடித்தனர்; குலாவினர்; கூத்தியர் வீடுபோயினர். பணம், போவது தெரியாமற் பறந்துபோயிற்று. குந்தி யுண்டால் குன்றுமே கரையுமே! தேடாதழிக்கிற் பாடாய் முடியுமே! குணலாபன் கை வறட்சி யுற்றது. கையிலிருந்த பொருளை யெல்லாம் ஓராண்டினுள்ளேயே ஒழித்துவிட்டனன். உட்காரும் நாற்காலி முதலாக விற்றுண்டாயிற்று. பணக்காரன் பின்னே

பத்துப் பேர், பைத்தியக்காரன் பின்னே பத்துப் பேர்'' என்றபடி வலிய வந்துவந்து உறவாடின நண்பர் வருகை யொழிந்தனர். ஊதலமில்லாத் தகளியின் விளக்குப் போல், பொருளில்லாக் குணலாபன் பால் வேசையர் நேசம் ஒழிந்து போனது.

> ''மானங் குலங் கல்வி வண்மை
> தானந் தவமுயர்ச்சி தாளாண்மை-தேனின்
> கசிவந்த சொல்லியர் மேற்காமுறுதல் பத்தும்
> பசிவந் திடப் பறந்து போம்'' என்றபடி,

நாடியோடிய விடங்களுக்கும் போவதை விட்டுவிட்டான். வீட்டோடு வீடாய்க்கிடந்தான். நண்பர்களுக்குச் சொல்லிச் சொல்லி யனுப்பினான். அவர்கள் வராமலே பொய்ச் சாக்குப் போக்குக்கள் பல கூறிக்கூறி யனுப்பினார்கள். அவனே புறப் பட்டு அவர்களுடைய வீடுதேடி ஒருவேளை யன்னங் கிடைக்குமோ வென்று ஆவலோடும் போவானான். அவர்கள் ஒருநா ளிருநாள் மரியாதையோடும் அன்னமிட்டனர். இட்ட வீடுகளுக்கே பின்னும் போனான். ''என் தாயார் கோபிக்கின் றாள்'' ''என் தகப்பனார் கோபிக்கின்றார்'' ''இங்கே இனிமேல் வராதே'' ''நான் உன்னிடம் வருகிறேன்'' என்று சொல்லி விட்டனர்.

குணலாபன்:—தானிருந்த வீட்டை விட்டுவிட்டு அவ் வீட்டைக் கூட்டிக்கொண்டிருந்த ஏழைக் கிழவியின் வீட்டி லே ஒருரூபாய் வாடகைக்கு ஓரறைவைத்துக்கொண்டு, அக்கி ழவியின் கையில் மாதம் ஐந்துரூபாய் கொடுத்துச் சாப்பிட் டுக் கொண்டிருந்தான்: ஆனை பூனையானதுபோல் வாடினான். தான் பிறந்ததையும், வளர்ந்ததையும், உண்டதையும், உடுத் ததையும், பணத்தை வாரிவாரி யிறைத்ததையும், நண்பர்கள் வஞ்சனை பண்ணினதையும் எண்ணியெண்ணிக் கண்ணீர் சொரிந்தான். அவைகள் கனவுபோலிருந்தன. கைப்பொரு

ளிழந்த மாந்தரைக்குறித்து

" சிறையிலாப் பறவை நல்ல
செழுங்கனி யுதவாத்தாரு
நிறைபுன லற்றபொய்கை
நெடியபல் லிழந்தநாகம்
மறையுணர் வில்லாப் பார்ப்பான்
மன்னுகோ லிழந்த வேந்தன்
குறைதரு வறுமையோர்க்குக்
கூறநல் லுவமை யாவர் "

என்றது அவன் கண் முன் மலைபோல் அகலாது நின்றது. மானத்தைவிட்டுக் கூலிவேலைக்குப் போனான்.

அக்காலத்திலே தேநிமழைகளுங் காலமழைகளுமே பெய்யாது தவறிப்பெரு வறட்சி யுண்டாகி, எல்லாப் பண்டங்களும் மிக்க அருமையாகிவிட்டன. கொடிய பஞ்சம் வந்து குந்திக்கொண்டது. கூலிவேலை கிடைப்பதும் அரிதானது. கிடைத்தாலும், தக்கபடி உழைக்க அவனுக்கு உடலில் வலி யில்லாமையால் அதையும் வெறுத்தான். வயிற்றின் கொடுமையாற் கூலி வேலைசெய்து, பணமோ தானியமோ பெற்றாலும் அதனைச் சோறாக்கித் தருவாருக்கு ஏதுமே கொடுக்க வியலாதவனாகிவிட்டான். ஆதலால், இரண்டுவேளையும், வயிறு பசியாமல் கஞ்சி வார்ப்பவனைத் தேடி, அவனிடம் கூலியாளாயிருக்க நாடினான். பெரிய வீடுதோறும் பணக்காரர் வீடென்று போய்ப் போய் "ஆள் வேண்டுமா? ஆள் வேண்டுமா?" என்று கேட்டான்.

ஒரு பணக்காரன் மிகுந்த நிலமும், ஆடுமாடுகளும் அநேக அடிமைகளும் உள்ளவன், "அப்பா ! எனக்குப் பன்றிமேய்க்க வோ ராள் வேண்டும்; உனக் கிஷ்டமானால் இரு" என்றான்.

குணலாபன் :—" இருக்கின்றேன் ஐயா! இரண்டுவேளை யும் வயிறு நிறையக் கஞ்சிவார்க்க உத்தரவு பண்ணுங்கள் " என்றான்.

"தன்பிணி நீக்கற் கிங்குத் தோன்றிய கருவிப் பொன்னை
அன்பினி லாக்கு மின்கள்; அஃதிலார் பிணமே யாவர்"

என்று, வித்யாவிநோதர் சொன்னது குணலாபனுக்கு நினைவு வந்தது. பன்றி மேய்த்தும் பசியாற வொருநாளா வாவது கஞ்சிகண்ட பாடில்லை: பசித்தழல் உள்ளேயெரிந்து கொண்டே யிருந்தது. " பசியில் தின்னாதது எது? பகை யிற் சொல்லாதது எது?" என்றபடி பன்றிக் கிட்டிருந்த தவிட்டையும் உண்ணப் பார்த்தான். அவன் வாயூறினது.

அதற்கும், கட்டும், காவலும் இருந்தன. அதுவுங் கிடைக்க வில்லை. ஆள் உருவமே மாறி வேற்றுரு வானான். கைகால்கள் ஓய்ந்துபோயின. கண் பஞ்சடைந்துபோனது. தலைமயிர் திரிதிரியாய்ச் செந்நிறங்கொண்டு தொங்கியது. துணியோ ஆயிரமுடிகொண்ட பீறலானது. அங்கமோ அவ லட்சணமானது. மனமோ ஐயாயிரங் கொப்புளங் கொண் டது போல நொந்தது. ஆதலால், மரணமே தனக்குச் சரணம் புகக்கூடிய விடமென்று, மரணத்தை, மணம் போல வருந்தி யழைத்தான்.

இவனிங்கு இப்பாடு படுகையில், சுசீலன், சுகுணமஞ்சரி, சுமதி, சுசரிதை முதலானவர் குணலாபனுக்கு நேர்ந்த மதிக்கேட்டையும் அவன் பணமுங் கையுமாய் முன்ன றியா நாடுதேடி யோடினதையும், அவனுக்கிருந்த தூர்க் குணங்களையும், உலகினர் பணமுள்ளவரையில் வட்டமிட்டு, அதை யழித்துவிட்டும் அபகரித்துக்கொண்டுங் கைவிட்டுப் போவதையும், உண்டு பழகிய உடல் ஊணற்றவிடத்து மெலிந்து நலிந்து பிணிவாய்ப்பட்டு, மரணத்தை யடைவதை

யும், எண்ணியெண்ணிப் பெருமூச்சு விட்டனர். குணலாபன் பன்றிமேய்க்கிறபடி கனவுகண்டு குடல் நடுங்கினர். "ஐயோ! உயிரோடிருக்கிருனே? இறந்துபோனுனே? என்ன கேடுகெட்டான்? நம்முடைய வீட்டு வேலைக்காரரும் நெய்யாறு பாலாருய்ச் செல்வமுஞ் சிறப்புங்கண்டு வாழ்கின்றனரே! "தான் தேடாப் பொன்னுக்குமாற்று மில்லை, உரையு மில்லை" யென்றபடி பெரியோர் தேடிய பொருளைப் பாழாக்கினுனே? இப்பொழுது வந்தாலும் அன்னமும் வஸ்திரமுங் கொடுத் தாதரிப்போமே!" என்று வாடினர்.

இங்கேயிருந்தவர்கள் இவ்வாறு குணலாபனுல் துன்பமுற்றனர். குணபாலன், ஒருநாளிரவு பால்போல் வெண்மையாகிய நிலா எங்கும் எறிக்கையில், ஊருக்கு வெளியிலே பன்றிகளின் பட்டிக் கருகிலே கட்டாந்தரையிலே படுத்துக் கொண்டு, வானத்தை யண்ணுந்துபார்த்து, சந்திரனைக்கண்டு, பலபலவெண்ணினுன். ஆஹா! என் தமக்கையாகிய சுசரிதை வெள்ளிக் கிண்ணத்தில், தும்பைப் பூப்போன்ற அன்னத்தைப் போட்டு, இச்சந்திரன் போல் வெளுப்பான கட்டித் தயிரை யூற்றிப் பிசைந்து, அன்போடும் என் கையில் போட, நான் போதும் போதும் என்றெழுந்த போது, என்னைப் பிடித்து உட்காரு இன்னும் ஒருகை குணலாப! இன்னுமொருகை சுமதி! யென்று வருந்தி வேண்டியூட்ட வுண்டு வளர்ந்த நான், என்ன கதி யடைந்தேன்! என் மாதாபிதாக்கள் எனக்கு எத்தனை முறை புத்திமதிகள் கூறினர். என் மாமன் தயாளு எவ்வளவு அன்போடு எனக்கு ஹிதோபதேசஞ் செய்தார். என்சிற்றப்பனும், சிற்றன்னையும் என்னைக் கண்ணுய்க் கருதிவந்தார்களே. என் கட்டளையைச் செய்ய எத்தனையோ வேலையாட்கள் வாய்பொத்திக் கைகட்டி நின்றனரே! படிப்பில்லாமலிருந்தாலும், வீட்டுவேலையையும், பயிர்

வேலையையுங் கவனித்துக் கொண்டு, மாதாபிதாக்களின் நிழலில் இருந்திருந்தேனுனல் வித்யாவதி எனக்கு மாலையிட்டிருப்பாளே! எனக்கு நண்பர் என்று வந்தவர்களில் ஒருவனுமே யோக்கிய னல்லாதிருந்தும், அவர்கள் சொல்லே எனக்கு அம்ருதமா யிருந்ததே! என்னலங் கருதி,

"இளமையே கலைகள்கற்க வேற்றநற் பருவமாகும்.
இளமையே பொருளீயீட்ட வேற்றநற் பருவமாகும்.
இளமையே யின்பந்துய்க்க வேற்றநற் பருவமாகும்.
இளமையிற் சிறந்தவாளுள் எவர்க்குமே யின்று காணீர்!" என்று

வித்யாவிநோதர் எத்தனையோ முறை கூறினரே! கேட்ட போதெல்லாம் முதலிரண்டையும் நாடாமல் மூன்றுவதடியையே நாடினனே! எவர் சொன்ன நன்மதியும் கவிழ்த்த குடத்தின் மீது பெய்த மழையாய்ப் போயினமே! இனி இரண்டொரு வாரத்திற்குள்ளே எனக்கு முடிவு வரும்போலிருக்கிறதே! என்ன செய்வேன்? என்றேங்கினன். பட்டறி கேட்டறி பத்தெட்டிறுத்தறி என்றபடி யவனுக்கு அனுபவத்தினல் அறிவு தோன்றியது. தோன்றவே, தன் பிழைகளை யெண்ணி யெண்ணி யுள்ளம்புண்ணுனன். தன் நண்பர்கள் தனக்குச் செய்தவைகளை யுணர்ந்து "ஆ ஆ! இவர்களை எனது புறத்துயிராகிய பொருளுக்கேவந்து, என் கண்களைப் பறித்துவிட்டுக் களவாடிப் போன கள்ள ரென்பேனே? நான் இந்நிலைக்கு வந்ததற்குக் காரணங் கணக்கன் மகனே! அவனைச் சொல்லவும் நியாயமில்லை. என்மீதிருந்த அணிகளைக்கண்டு அவற்றை யழிக்க அவன் வந்து சேர்ந்தான். ஆதலால், என்னணிகளே என் கேட்டிற்குக் காரணமென்னல் வேண்டும். என்னணிகளைப் பழிக்கவும் நியாயம் இல்லை. என் துர்மதியே என்னைக் கெடுத்த தென்னல் வேண்டும்: இனி யான் நல்ல சோறும், துணியுங் கண்டு வாழும் வகை யென்ன

விருக்கிறது! மலையக்ஷணஞ் செய்யும் பன்றியை மேய்ப்பதி லும் மாடு மேய்ப்பது மேலாகும். அத் தொழில் கொண்டு காலந் தள்ளுவோமென்றால், இக்கொடிய க்ஷாமகாலத்திலே இருக்கிறவர்களை நீக்காமல் வைத்துக்கொண் டிருக்கிறதே மிக்க சிரமம் என்று பிரபுக்களுஞ் சொல்லுகிறார்களே!" என்று பெருமூச்சுப் பன்முறை விடுவானாகிப் பன்றிப்பட்டி யின் பக்கத்திற் படுத்து, "வித்தையுள்ளவன் தூங்கான், விசாரமுள்ளவன் தூங்கான், பணமுள்ளவன் தூங்கான், பைத்தியக்காரன் தூங்கான்" என்றபடி தூக்கம் பிடியாமல் வருந்தினான்.

வருந்துகையில் ஒருநாள் அடுத்தவூருக்குப் போயிரு ந்து, அங்கிருந்து, குதிரைமேல் வந்துகொண்டிருந்த தமிழ் வல்லா னொருவன்,

"அம்மி துணையாக வாறிழிந்த வாறொக்கும்
வெம்மை மிகுவேசையர் தந்நேயம்.—இம்மை
மறுமைக்கு நன்றன்று. மாநிதியம் போக்கி
வெறுமைக்கு வித்தாய விடும்"

என்று பாடிக்கொண்டே வந்தனன்.

இச் செய்யுள், குணலாபன் பல்காற் கேட்டதே. இக் கால் அவன் செவியில் அது வீழ்ந்தபோழ்து, அவன் எழுந்து நின்று "இச்செய்யுளை யியற்றினோர் அறிவே யறிவு; அனுபவ மே அனுபவம். இது, என்னை நினைவிற்கொண்டே செய்தது போல் இருக்கின்றதே! என்னைப் போல், இவ்வளவு விரைவி லேயே யாடிப்பாடி, இருபதினாயிரம் ரூபாய் அழித்து, நடை ப்பிணமாகி, வாடி வறண்டு வயிற்றின் பொருட்டுத் தகாத குற்றேவலுக்கு உடன்பட்டவர் எவருமே யிரார்" என்றான். பின்னுமெண்ணி யேங்கி "ஐயோ! நான், ஒருநாளில், ஒருவே ளையில், செலவிட்ட பணத்திற் பாதி தேட ஒரு மாதமுழுதும்

பன்றி மேய்க்கின்றேனே! தக்கார்க்குத் தவிடு இடியான் தகார்க்கு இரும் பிடிப்பான் என்றபடி, தந்தைக்கு உபகாரமாய் வயலிற்குப் போய் ஒரு நாழிகை இருக்க மனங் கொள்ளாது அவரை வஞ்சித்தேனே அக்கொடுமையே என்னை யிவ்வாறு பன்றி மேய்க்க வைத்ததோ? ஜகதீசுவர! நான் ஒரு வேலையுமே செய்யாமலும், ஒரெழுத்துமே கற்காமலும், ஊர் திரிந்துவிட்டு உண்ணும் வேளைக்கு வந்ததைக் கண்டு மனநொந்து, இவன் ஏதேனுந் தொழில் செய்யப் பழகினவனாகவேண்டும் என்னும் நல்லெண்ணத்துடன் என்னண்ணன் சொன்ன நன்மொழிகளை வன்மொழிகளாய்க் கொண்டு, கோபத்தோடும் ஓடிப்போனேனே! அதன் கொடுமையினாலிப்போது அன்னப்பிடி தங்கப்பிடியாகி யலறுகின்றேனே? தந்தை முதலானோர் மனம் புண்ணாகத் துன்மார்க்கனாகிப் பலரும் நகைக்க நகைக்க என் பங்கை வாதாடி வாங்கிக் கொண்டேனே! அவனை யிவனைக் கூட்டிக்கொண்டு தலைகால் தெரியாமல் ஆடினபடி ஆடாதிருந்தேனேயானால் இவ்வளவு சீக்கிரத்திலேயே இந்நிலைக்குவந்திருக்க மாட்டேனே! ஆ ஆ! சுசீலன் வயிற்றிற் பிறந்த நான், பன்றி மேய்ப்பவனானேனே! நன்றாயிருந்தது; இத்தனையும் என் னறிவின்மையால் நேர்ந்தன'' என்று களைத்தான்.

குணபாலனுக்குப் பொன்னிலும், முத்திலும், மணியிலும், இப்பூமி முழுவதிலுஞ் சிறந்ததாய்க் காப்பாற்றவேண்டிய ஒழுக்கங் கெட்டது; கையிலிருந்த பொருளத்தனையும் போனவகை தெரியாமற் போய்விட்டது. சரீரத்தின் சுகமுங் கெட்டது; செய்யுந் தொழிலிலுந் துன்பம் மேலிட்டது. இனியவன், பேதைமையினால் தன்னுடைய வுயிரை ஒரு துரும்பாய் மதித்து, அதைத் துறக்கவாவது வேண்டும். தன் தகப்பனிடம் போய் மிக்க பணிவோடும் அவன் பாதங்களில்

விழுந்து மிக்க பொறுமையும், நீதியும், கருணையும், அனுபவ மும் உள்ள தேவரீரே எனக்குத் தஞ்சமென்று கெஞ்சிக் கேட்டு, அவர்பால் மன்னிப்பை யடைந்து தன் தாழ்மை நீங்கி, சிறப்புற்று வாழவேணும் வேண்டும். உயிரை யிழப்ப தைப் பார்க்கிலும், பெற்ற தகப்பன் பாதங்களில் விழுந்தெ ழுந்து, அதனைக் காப்பாற்றுவதுதான் அறிவுற்றவன் செய்யுங் காரியம் என்பது அவன் மனதிற்கு விளங்கியது. ஆயினும், அவர் முன்னிலையிற் போகவும், எவ்வகையிலும் அவருக்கு விரோதமாய் நடந்துவிட்டுப் புத்திரத்துவங் கொண்டாடவும் தைர்யம் பிறவாமையாலும், அவர் என்னை, மன்னித்து அங் கீகரிப்பரோ? அசத்தே! யோடிப்போ வென்று அகற்றிவிடு வரோ? என்னுஞ் சந்தேகத்தினாலும், தகப்பனிடம் போக மனம் பிறவாமல் இருந்தான். இப்படியிருந்து தீயிலிட்ட வெண்ணெய் போ லுருகுகையில், தலைவலியுங் காய்ச்சலுங் கண்டு துன்புற்றான். அக் காலத்தில், இவன் மேய்க்க வேண்டிய பன்றிகளை மேய்க்க வேறோரேழைச் சிறுவன் வந்தான். இவன், அவன் குடிக்குங் கூழைக் குடித்துப்போ னன். ஆதலால், அப்பிரபுவின் வேலையாட்கள் கிருபையி னல் குணலாபனுக்கு வார்த்த கால்வயிற்றுக் கஞ்சி அவனு க்கு மிக்க பலவீனத்தை யுண்டாக்கினது. இச்சமயத்தில், குணலாபன் குணமாறினது. அவனுக்கிருந்த துர்க்குணம் போய் நற்குணம் வாய்ந்தது. மெல்லமெல்லக் கழியுங் கையுமாய் எஜமானனிடம் போய், தூரத்திலிருந்து "ஆண்ட வனே! தாங்கள் இக்கொடிய க்ஷாமகாலத்தில் என்னை ஆதரிக்கிறதற்காகத் தம்மிடத்தில் மிக்க நன்றியுள்ளவனயிரு க்கிறேன். நான், இப்போது செய்யவேண்டியதைச் செய்தே னேயானல், என்னிலை இந்நிலையிலும் எத்தனையோ மடங்கு சிறப்புற்றதாகும். நான் ஒரு பிரபுவின்புத்திரன். இளமையிற்

கல்லாது, புல்லறிவு முற்றிப் போகாவழிகளிற் புகுந்தோடி யும் தந்தைமுதலானோர்க்கு ஆகாதவனாகியும், என், பங்குக் குரிய பொருளைப் பெற்றுக்கொண்டு பொருட்பெண்டிர் நேயத்தைக்கொண்டு களித்தும், அப்பொருளை யிழந்தபின் அவர் நேயத்தையும், நண்பர்களுடைய மாயத்தையும் என் பிழைகளையும் உணர்ந்தும் வாடுவா னானேன். இவ்வயிற்றை வளர்க்கப் பன்றியு மேய்த்தேன். இனி, என் பிதாவினிடம் போக நாடுகின்றேன். தாங்கள் உத்தரவருளல் வேண்டும்'' என்று வணக்கத்தோடுங் கேட்டுக்கொண்டனன்.

இவைகேட்ட அப்பிரபு "பேதைச் சிறுவ! இதுவரை யில் உன் கெட்டகாலத்தினால், விஷம் பாலும், பால் விஷமு மாய் உனக்குத் தோன்றியது. இப்போது, பட்டறிந்தவன் ஆனாய். இவ்வுலகின் விபரீதத்தை யறிந்தாய். உடனே புறப் பட்டு, உன் தகப்பனாரிடம் போய்ச் சேர். இனி ஒருக்ஷணமுந் தாமசிக்காதே. விராடனிடம் பாண்டவர்போல் நீ என்னிட மிருந்தாய். இங்குள்ளவர்களில், நல்லவன் கெட்டவனாவதும், கெட்டவன் நல்லவனாவதும், தனவா னேழையாவதும,ஏழை தனவானாவதும்,அறிஞர் மூடராவதும், மூடர் அறிஞராவதும், காலம், இடம், கூட்டுறவு ஆகிய இவற்றா லாகின்றன. உன க்கு க்ஷேமமுண்டாக, போய் வா. வழிச்செலவிற்கு இவ் வொரு வராகனைக் கொண்டுபோ வென்று, பணமும் வேறு வஸ்திரந் தரித்துக்கொள்ள, இரண்டு அங்கவஸ்திரங்களுங் கொடுத்துப் பிரயாணப்படுத்தி யனுப்பினான்.

குணலாபன் மனத்தில் மிக்க துக்கமும், வெட்கமும், களிப்பும், மாறி மாறித் தோன்றின. "தகப்பனிடம் போய் அன்பு மிக்க என் பிதாவே! நாயேன், தமக்கும், பரம பிதா வாகிய ஜகதீசனுக்கும் பரம விரோதமான காரியங்கள் பல

செய்தேன். முற்றுங்கெட்டுப் படாதபாடுகள் பல பட்டு மூதறிஞனானேன். இனித் தம்மைவிடத் தஞ்சமாவார் எனக் கெவருமில்லை; தமது புத்திரனென்று சொல்லிக்கொள்ளவுந் தகாதவனாகிய என்னை மன்னித்தருளும் என்று கெஞ்சிக் கேட்கிறேன். அவர் தப்பாமல் என்னை மன்னித்தருளுவார். மகன் கெட்டுப்போனால் உண்டாகுந் துயரம் பிதாவின் ஹ்ருதயத்தை எரிக்குமே! என்னைத் தள்ளிவிடார்" என்று எண்ணிக்கொண்டே வந்தான். வந்து, தன்னூர் சேர்ந்தான். நேரே வீட்டிற்குப் போக வெட்கி, ஊரோரத்தில், ஒரு தோப்பிலே மயங்கிக் கொண்டிருந்தான்.

அப்போது, சுசீலன் ஆள் ஒருவன், ஏரும் தோளுமாய் அவ்வழியே வந்தான். அவன் குணலாபனைக் கண்டான். ஆநந்தமும் ஆச்சரியமுங் கொண்டான். ஏரை யிறக்கி வைத்துவிட்டோடி எஜமானனிடஞ் சென்று, "அய்யா! குணலாபர் வந்துவிட்டார், புதுத்தோப்பி லிருக்கின்றார்" என்று கூறினான். இதைக்கேட்ட தந்தை முதலானோர் மனங் களித்தனர்.

சுசீலனும், சில ஆட்களுமாய்க் குணலாபனை எதிர்கொண்டுபோனார்கள். தந்தையைக் கண்டதும் வந்த துக்கத்தினால் குணலாபன் குழந்தைபோல் வாய்விட்டுக் கதறிக் கதறித் தன் பிழைகளை மன்னிக்கக் கேட்டுக்கொண்டான். சுசீலனும் "என் மகன் போனவிடந் தெரியாமலும், ஆனவிதந் தெரியாமலும் எங்கேயோ போய்க் கெட்டுப்பட்டு, அறிவடைந்து வந்தான். என்னிடம் வந்துசேர்ந்தான். இனி நல்லவனா யிருப்பான். சுகமேயிருப்பான். எனக்குச் சந்தோஷம்" என்று அவனை அங்கீகரித்துக்கொண்டு வீட்டுக்குக் கொண்டு போய், மிக்க களிப்பினால், தன் தம்பியையும், தனபாலனை

யும், சுசரிதையையும், தயாளுவையும், வித்யாவிநோதரையும், அழைப்பித்துக்கொண்டு, புரோகிதனால் அவனுக்குப பிராயச்சித்தஞ் செய்வித்து ஆனவர் பலரோடும் பண்டிகை கொண்டாடினன்.

உண்டானபின் சந்தன தாம்பூலந் தரித்துக்கொண்டு சாவகாசமா யுரையாடுகையில், வித்யா விநோதர் "குணலாப! அன்புமிக்க விடையன் பத்திரத்தின்பொருட்டு அமைத்த பட்டியில் அடைபட்டு க்ஷேமமாயிருப்பதை வெறுத்துத் தாய் மொழியையும் அசட்டைசெய்து, தன் மனம் போலோடி யாடி, ஓநாயின் பசிக் கிரையான ஆட்டுக் குட்டியின் துர்மதி வாலிபருக்கு உண்டாவது இயற்கையே! நீ கெட்டுப்பட்டு, அறிவடைந்து வந்தாய். எப்படிப்பட்ட கோரபாவியும், தன் பாவ முணர்ந்து, ஸர்வலோகநாதனாகிய பகவானை உள்ளன்போடும் பற்றி, மன்னித்தருளப் பிரார்த்தித்தானேயானால், அவன் மன்னிப்படைவது போல் உன் பிதாவினால் மன்னிக்கப் பெற்றாய். இனியுன்பால், மனமொழி செயல் மூன்றும் பரிசுத்தமா யிருக்க.

"அறிமி னறநெறி : அஞ்சுமின் கூற்றம் :
பொறுமின் பிறர்கடுஞ்சொல் : போற்றுமின் வஞ்சம்:
வெறுமின் வினைதீயார் கேண்மை : எஞ்ஞான்றும்
பெறுமின் பெரியார் வாய்ச்சொல் :"

எனப் பெரியோர் கூறிய ஞானோபதேசத்தை உள்ளத்தில் உறுதியாய்க் கொண்டொழுகுவாயாக" என்றனர்.

குணலாபன், மிக்க பணிவோடும் "என் நல்லாசிரியரே! இனி யான் நல்லவனாய் ஒழுகத் தேவரீர் அநுக்கிரகமும் என்னைப்பெற்றா ரநுக்கிரகமும், ஜகதீசனருளுந் துணை நிற்பனவாக. நல்லார் பலர் மனமும் புண்ணாக நடந்தேன்,

பொறுத்தருளினீர்கள். பகவானே யென் புன்மதியைமாற்றி நன்மதியை யாக்கி யென்னை யுங்களிடங் கொண்டுவந்து சேர்த்தனன்; நான் உய்ந்தேன்" என்றான்.

பின்னும், அவன், "பட்டறிந்தவன் ஆகிய நான், இனி, மூத்தோர் சொல் வார்த்தை யமிருதம் என்றே ஒழுகுவேன். "என்னைப்போல் எவ்விளைஞனும் இடர்படாதிருப்பானாக" என்றனன். இன்று முதல், அவன், குணமுற்று வாழ்ந்தனன். இரும்பு பொன்னானதுபோல், எவர்க்குங் கண்ணாயிருந்தனன்.

---

மோசூர் வேங்கடசாமி அய்யரால்
நீதிமாலையின் மூன்றாவது மலராய் வெளியிடப்பட்ட
குணலாபன் அல்லது பட்டறிந்தவன்
எனும் நீதிக்கதை முற்றியது.

---

## கவனிக்கவேண்டிய பிழைதிருத்தம்

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 7 | 2 | தன் | ய்த்தன் |
| 16 | 25 | என்று" | "என்று |
| 30 | 17 | அவை | அது |
| 59 | 20 | காலல் | காலம் |
| 62 | 9 | றான் | என்றான் |
| 68 | 14 | எவராது | எவராவது |
| 74 | 2 | மறுவிலரே | மறுவிலரேனும் |
| 75 | 13 | ஸமயமன்றே!" | ஸமயமன்றே! |
| 77 | 12 | கிழவன், | கிழவன் |
| 80 | 9 | எதைதை | எதெதை. |

சுபமஸ்து

THE GUARDIAN PRESS, MADRAS
MAHAMAHOPADHYAYA